# பௌத்தம்: சிறந்த வினா - சிறந்த விடை
Good Question Good Answer

ஆசிரியர் / Author:
பாந்தே சிராவஸ்தி தம்மிகா
Bhante Sharavasti Dhammika

தமிழில் / Translation:
திரு. தி. சுகுணன், எம். ஏ. முதல் பதிப்பு 1991 Mr. T. Sugunan M. A. First Edition 1991
பா. இ. அரசு (1991 பின்னால் சேர்க்கப்பட்ட கேள்விகள்) P. I. Arasu (Questions added after 1991) Second Internet Edition 2012

பிழைத் திருத்தம் / Tamil Proof Reading (2nd Edition):
திரு. பா. கா. இளங்கோ. எம். ஏ., ஈரோடு Mr. P. K. Ilango M. A., Erode

With permission from Bhante S. Dhammika and Mr. T. Sugunan

## பொருளடக்கம்

முன்னுரை

1. பௌத்தம் என்றால் என்ன?
2. பௌத்த அடிப்படைக் குறிக்கோள்கள்
3. பௌத்தமும் கடவுள் கொள்கையும்
4. ஐந்து நல்லொழுக்கப் போதனைகள்
5. மறு பிறப்பு
6. தியானம்
7. மெய்யறிவும் இரக்கவுணர்வும்
8. மரக்கறி உணவுமுறை
9. நல்லதிர்ஷ்டமும் விதியும்
10. ஆண் மற்றும் பெண் துறவிகள்
11. பௌத்த சமய நூட்கள்
12. பௌத்த வரலாறும் வளர்ச்சியும்
13. பௌத்தராக மாறுவது

## 14. புத்தரின் பொன் மொழிகள்

### முன்னுரை

உள்ளே புகுமுன் ஒரு சொல் கேளீர்!

பௌத்த நெறியினனாகிய நான், உலகின் முதல் பகுத்தறிவாளராம் போதிமாதவர், சித்தார்த்த கௌதமரின் புகழ்பாடுவதில் நாட்டமுடையவன். சென்னை, பெரம்பூர் தென்னிந்தியப் பௌத்த சங்கத்தின் பொதுச் செயலாளன் என்ற முறையில் 1991 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் நடைபெற்ற International Net Work of Engaged Buddhist சபையின் மூன்றாவது மாநாட்டுக்குச் சென்றிருந்தேன்; அங்கு பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த பௌத்தப் பேறறிஞர்கள் பலரைச் சந்திக்கும் வாய்ப்பும் பெற்றேன். அவருள் ஒருவர்தாம் ஆஸ்திரேலிய நாட்டுப் பௌத்த அறவண அடிகள், வணக்கத்துக்குரிய சிராவஸ்தி தம்மிகா பாந்தே அவர்கள். அவர் எழுதிய புத்தகங்களாலும், கருத்துக்களாலும் ஈர்க்கப்பட்ட நான், அவருடைய Good Question Good Answer என்னும் நூலை அறவண அடிகளின் அனுமதி பெற்றுத் தமிழாக்கம் செய்து வெளியிடுகிறேன்! தமிழ் கூறும் நல்லுலகம் இதனை ஏற்குமென நம்புகிறேன்! பௌத்தநெறியைப் புரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு, இது ஒரு சிறந்த சரியான வழிகாட்டியாகும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைத் தமிழாக்கம் செய்து வெளியிட அனுமதியளித்த அறவண அடிகள் சிராவஸ்தி தம்மிகா பாந்தே அவர்களுக்கும், இம்மொழி பெயர்ப்பிலிருந்த எழுத்துப் பிழைகளைத் திருத்தி இந்நூலை வெளியிட நல்வழிகாட்டிய ஆசான், புலவர் திரு தி. இராசகோபாலன், இந்நூலின் அச்சுப் பிழை திருத்திய புலவர் வெற்றியழகன் அவர்களுக்கும், தமிழகத்தில் ஏழை எளிய மக்களிடையே பௌத்த நெறியைப் பரப்பிய அயோத்தி தாசப்பண்டிதர், தந்தை பெரியார், இருபதாம் நூற்றாண்டில் பௌத்த சமயத்துக்குப் புத்துயிரளித்த, இக்கால அசோகச் சக்ரவர்த்தி, போதிசத்துவர் பாபா சாகேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் ஆகியோர்

பொற்பாத கமலங்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்

அன்புடன்,
தி. சுகுணன்
சங்கமித்ரா,
13, 43/3, நெல்வயல் சாலை,
பெரம்பூர், சென்னை-600011
05-09-1991

இரண்டாம் இணையதளப் பதிப்பு

பௌத்த அறிமுக நூட்களில் ஏதேனும் ஒன்றைத் தமிழாக்கம் செய்யலாம் என்று எண்ணிய போது Good Question Good Answer என்ற நூல் ஏற்கனவே தமிழாக்கம் செய்யப்பட்டிருந்ததை அறிய வந்தேன். அப்போது நூலாசிரியர் வணக்கத்துக்குரிய சிராவஸ்தி தம்மிகா பாந்தே அவர்களிடம் தொடர்புகொண்டேன். அவர் சென்னையைச் சேர்ந்த திரு. தி. சுகுணன் அவர்கள் மொழிபெயர்த்த அவருடை 'புத்த வந்தனா' என்ற மற்றொரு நூலை எனக்கு அனுப்பி வைத்தார். அந்த நூலில் குறிப்பிட்டிருந்த முகவரியைக் கொண்டு இந்த ஆண்டு ஜூன் திங்களில் சென்னை சென்றிருந்த போது திரு தி. சுகுணன் அவர்களைச் சந்தித்தேன். அவருடை ஆசியுடனும், அனுமதியுடனும் 'சிறந்த வினா சிறந்த விடை' என்ற நூலை இணையதளத்தில் வெளியிட முற்பட்டேன். 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முதற் பதிப்பிற்குப் பின் சில புதிய கேள்விகளும், பல புதியஅதிகாரங்களும் நூலாசிரியரால் சேர்க்கப் பட்டிருந்ததால் வணக்கத்துக்குரிய சிராவஸ்தி தம்மிகா பாந்தே அவர்கள் அனுமதியோடு அவைகளையும் மொழிபெயர்த்து இணைத்திருக்கிறேன்.

ஆஸ்திரேலியாவில் பிறந்த வணக்கத்துக்குரிய சிராவஸ்தி தம்மிகா பாந்தே அவர்கள் தற்போது சிங்கப்பூரில் வாழ்கிறார். சிங்கப்பூரில் வாழும் மக்கள் கேட்ட பல்வேறு தரப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் 'Good Question Good Answer' என்ற நூலாக வெளியிடப்பட்டது. இதுவரை இந்த நூல் நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்

பட்டுள்ளதே நூலின் சிறப்பைத் தெற்றென விளக்கும்.

இந்தப் பதிப்பில் பிழை திருத்தம் செய்து உதவிய ஈரோட்டைச் சார்ந்த மரியாதைக்குரிய எனது தந்தையார் திரு. பா. கா. இளங்கோ அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

ஒரு காலத்தில் தமிழகத்தில் மிகச் சிறப்புற்றிருந்த பௌத்தம் மீண்டும் தழைத்தோங்கவும், உலகெங்கும் வாழும் தமிழர்களுக்குப் பௌத்தம் மீண்டும் அறிமுகமாகிச் செழிப்புற்று வளரவும் இந்த இணையதளப் பதிப்பு பயனுள்ளதாக அமையுமென நம்புகிறேன்.

அன்புடன்,
பா. இ. அரசு
டொரண்டோ, கனடா
30-09-2012
arasutor@hotmail.com
http://www.bautham.net/

1. பௌத்தம் என்றால் என்ன?

வினா: பௌத்தம் என்றால் என்ன?

விடை: பௌத்தம், புத்தம், புத்தர் என்ற சொற்கள், 'அறிவு' என்னும் பொருள்படும்; 'புத்தி' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தவை. அதன் பொருள் எழுச்சியே! ஆகவே, பௌத்தம் என்றால், எழுச்சியின் தத்துவமே! இந்தத் தத்துவம் சித்தார்த்தக் கௌதமர் என்று அழைக்கப்பட்ட ஒரு தனி மனிதன், தனது சொந்த முயற்சியாலும், அனுபவத்தாலும் கண்டுபிடிக்கப் பட்ட வழியாகும். அந்தச் சித்தார்த்தக் கௌதமர் என்னும் புத்த பெருமானே, தனது 35வது வயதில் தான் இந்தப் பேரறிவாகிய, 'புத்த நிலை' என்னும் எழுச்சி பெற்றார். பௌத்தம் 2,500 வயதை உடையது. இச்சமயத்தைப் பின்பற்றும் மக்கள் உலகம் முழுவதும் இன்று சுமார் முப்பத்தெட்டு கோடிப்பேர் இருக்கின்றனர். நூறாண்டுகளுக்கு முன்பு வரை, ஆசிய மக்களால் மட்டுமே பின்பற்றப்பட்டு வந்த இத்தத் தத்துவம், இன்று

ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் மக்களிடையே ஆதரவு பெற்று வருகிறது.

வினா: ஆக, பௌத்தம் ஒரு சாதாரணத் தத்துவம்தானா?

விடை: தத்துவம் என்று பொருள்படும் PHILOSOPHY என்ற சொல்லில் 'PHILO' என்பது 'அன்பு' என்ற பொருளையும், 'SOPHIA' என்னும் சொல் 'அறிவு' என்னும் பொருளையும் தரும். ஆக PHILOSOPHY என்பது, 'அறிவின் அன்பு' என்றோ, அல்லது அன்பு, அறிவு என்ற இரண்டு பொருள்களிலோ பௌத்தத்தைச் சரியாக விவரிக்கிறது. பௌத்தம் நம் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும், முழுமையாகவும் தெளிவாகவும் ஒவ்வொன்றையும் புரிந்து கொள்ளவும் கூறுகிறது. அத்துடன் பௌத்தம் உயிருடைய எல்லாவற்றின் மீதும் அன்பும் இரக்கமும் காட்டி, உண்மையான நண்பர்களாக விளங்கப் போதிக்கிறது. ஆகையால், பௌத்தம் ஒரு சாதாரணத் தத்துவம் அன்று; மிக உயர்ந்த தத்துவம்!

வினா: புத்தர் என்பவர் யார்?

விடை: கி.மு. 563ல் வட இந்தியாவில் ஓர் அரச குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அவன் செல்வச் செழிப்புடனும், ஆடம்பரமாகவும் வளர்ந்தான்; ஆனால், முடிவாக உலக வசதிகளும் வாழ்வும் தூய்மையான மகிழ்ச்சிக்குப் பாதுகாப்புத் தாரா என்பதை உணர்ந்து கொண்டார். உலகைச் சுற்றியுள்ள துன்பங்களைக் கண்டு அவர் நெகிழ்ந்தார். அதனால், உலக மாந்தர்கள் உண்மையான மகிழ்ச்சியடைய வைக்கும் திறவுகோல் எது என்பதைக் கண்டுபிடிக்க நினைத்தார்; அதனால் தனது 29வது வயதில், தன் மனைவியையும் குழந்தையையும் துறந்து, பல சமய அறிஞர்களின் காலடியில் அமர்ந்து, உலக மாந்தர்களின் துன்பத்தைக் களைய வழி என்னவென்று வினவினார். அவர்கள் அவருக்குப் பலவற்றையும் போதித்தார்கள். ஆனால், எவருக்குமே, உலக மாந்தர்களின் உண்மையான துன்பத்துக்கான காரணம் தெரியவில்லை! முடிவாக ஆறாண்டுகளுக்குப் பின்பு ஆழ்ந்த ஆராய்ச்சிக்கும் தியானத்துக்கும் பிறகு அவரைச் சூழ்ந்திருந்த அறியாமை திடீரெனவிலகவே, அவர் அந்தப் பேருண்மையை

அறிந்தார். அன்றிலிருந்தே அவர் 'புத்தர்' என அழைக்கப்பட்டார். இப்பேரறிவு பெற்ற பெம்மான், மேலும் நாற்பந்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து, வட இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, அவர் கண்டறிந்த பேருண்மைகளைப் போதித்து வந்தார். அவருடைய அன்பும், கனிவும், இரக்கமும், புதுமை உணர்வூட்டுகிற போதனைகளும், ஆயிரக் கணக்கானோரைப் பின்பற்றச் செய்தன. அவரது என்பதாவது வயதில் முதிர்ந்தும் தளர்ந்த நிலையிலும் மிக மகிழ்ச்சியுடனிருந்த புத்தபெருமான் இறுதியில் இயற்கை எய்தினார்.

வினா: அவருக்கு புத்தர் என்ற பெயர் இந்த ஆழ்ந்த அறிவின் பின் தான் வந்ததென்றால், அதற்கு முன் அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

விடை: புத்தரின் பரம்பரைக் குடும்பப் பெயர் கௌதமன். அதன் பொருள் 'சிறந்த பசு'. அக்காலத்தில் ஆடுமாடுகள் வைத்திருந்தால் அது செல்வத்தையும் கௌரவத்தையும் குறிக்கும். அவருக்கு இடப்பட்ட பெயர் சித்தார்த்தன். அதன் பொருள் 'நோக்கத்தை அடைபவன்'. இவ்வாறான பெயரை ஒரு அரசன் தன் மகனுக்கு இடுவானென எதிர்பார்க்கலாம் அல்லவா?

வினா: தன் மனைவியையும் மகனையும் விட்டுவிட்டுச் சென்றது, புத்த பெருமானின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டவில்லையா?

விடை: புத்த பெருமான் தன் குடும்பத்தை விட்டுவிட்டுச் சென்றது அவ்வளவு எளிதான செயலன்று; அவர் பல நாட்கள் கவலைப்பட்டிருக்க வேண்டும், அவர் கடைசியாக வீட்டை விட்டுப் புறப்படுவதை நன்றாக யோசித்தே இம்முடிவுக்கு வந்திருக்க வேண்டும்; அவர் தன் குடும்பத்துக்காகத் தன்னை அர்ப்பணிப்பதா? அல்லது உலக மாந்தருக்காகத் தன்னை அர்ப்பணிப்பதா? என்று யோசித்து, முடிவாக அவரது பேரன்பு, உலக மாந்தர்களின் மேன்மைக்காகவே, அவரை அர்ப்பணிக்க வைத்தது. அவரது தியாகத்தில் இன்றும், இவ்வுலகமே பயனடைகிறது. இஃது அவரது பொறுப்பற்ற தன்மையன்று; இதுவே,

இதுவரை உலகத்துக்கு யாருமே செய்யாத மாபெரும் தியாகமாகும்.

வினா: புத்தர் தான் இப்போது இறந்து விட்டாரே, அவர் நமக்கு எப்படி உதவ முடியும்?

விடை: மின் சக்தியைக் கண்டுபிடித்த ஃபேரடே இறந்து போய்விட்டாலும், அவர் கண்டு பிடிப்பு நமக்கு இன்றும் உதவுகிறது. பல நோய்களுக்கு நிவாரண முறைகளைக் கண்டுபிடித்த லூயிஸ் பாஸ்சர் இறந்துவிட்டாலும் அவர் கண்டு பிடித்த மருந்துகள் இன்றும் எத்தனையோ நோயாளிகளைக் குணப்படுத்துகிறது. பல அழியா ஓவியங்களைத் தீட்டிய லியோநார்டோ டா வின்சி இறந்து விட்டாலும் அவர் வரைந்த ஓவியங்கள் இன்றும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தருகின்றன! அறிஞர்களும் வீரர்களும் இறந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகியிருந்தாலும், அவர்களுடைய செயல்களையும் வெற்றிகளையும் நாம் படிக்கும் போது, அவர்களைப் போலவே நாமும் செயலாற்ற ஓர் ஊக்கம் பிறக்கிறது. அதைப் போலவே, புத்தபெருமான் இறந்து 2500 ஆண்டுகள் ஆனாலும் இன்றும் அவருடைய போதனைகள், மனிதர்களுக்கு உதவுகின்றன! அவருடைய சான்றுகள் மக்களைக் கவர்கின்றன; அவருடைய சொற்கள் இன்றும் மனித வாழ்க்கையை மாற்றுகின்றன; பல நூற்றாண்டுகள் ஆனாலும், ஒரு புத்தரின் சொல்லுக்கே, அவர் இறந்த பிறகும், இவ்வளவு சக்தியிருக்கும்!

வினா: புத்தர் ஒரு கடவுளா?

விடை: இல்லை! அவர் கடவுள் இல்லை. அவர் தன்னைக் கடவுளாகவோ, கடவுளின் மகனாகவோ, கடவுளின் தூதுவராகவோகூடப் பிரகடனம் செய்து கொண்டதில்லை. அவர் ஒரு மனிதர்! தன்னைப் பூரணத்துவப்படுத்திக் கொண்ட ஒரு மனிதர். அவரைச் சான்றாக வைத்து, அவர் வழியைப் பின்பற்றினோமேயானால், நாமும் நம்மைப் பூரணத்துவப்படுத்திக் கொள்ளலாம்.

வினா: புத்தர் ஒரு கடவுள் இல்லையென்றால், மக்கள் ஏன் அவரை வழிபடுகின்றனர்?

விடை: வழிபாடு பலவகைப்படும். யாராவது ஒருவர் ஒரு கடவுளை வணங்கும் போது, அது ஆண் கடவுளோ, பெண் கடவுளோ, அக்கடவுளைப் புகழ்ந்து பாடி, அக்கடவுளுக்குப் பல பொருள்களைப் படைத்துத் தமக்குச் சில சலுகைகளை வேண்டுவர். தமது பிரார்த்தனையைக் கடவுள் கேட்டுத் தாங்கள் படைத்த பொருட்களைக் கடவுளர் ஏற்றுக் கொண்டு, தங்கள் பிரார்த்தனைக்குப் பதில் தருவதாக அவர்கள் நினைக்கின்றனர். ஆனால், பௌத்தர்கள் இப்படிப்பட்ட பிரார்த்தனைகளில் ஈடுபடுவதில்லை.

மற்ற முறை வழிபாடு யாதெனில், நாம் போற்றுபவருக்கோ, விரும்புபவருக்கோ நாம் அளிக்கும் மரியாதை. ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழையும்போது எழுந்து நின்று மரியாதையளிக்கிறோம்; மதிப்புக்குரியவர்களைச் சந்திக்கும்போது கை குலுக்குகின்றோம்; ஒரு நாட்டின் தேசிய கீதம் இசைக்கும் போது எழுந்துநின்று வணங்குகின்றோம். இவையெல்லாம், நாம் மனிதர்களுக்கோ, பொருட்களுக்கோ காட்டும் மரியாதைக் குறிகளாகும். இவ்வகை வணக்க முறைகளையே பௌத்தர்கள் கடைப் பிடிக்கின்றனர்.

இரு கைகளையும் தன் மடியிலே வைத்துக் கொண்டு, புன்னகை தவழும் முகத்துடன் காட்சியளிக்கும் புத்தபெருமானின் சிலைகள், நம்மை அனைத்து உயிர் வாழ் இனங்களிடமும் அன்பையும், நம்மிடையே அமைதியையும், பாசத்தையும் வளர்த்துக் கொள்ளச் செய்கின்றன. ஊதுபத்திகளிலிருந்து பரவும் வாசனை, ஒழுக்கம் உலகம் எங்கும் பரவ வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஒளிதரும் விளக்கு நமதறிவையும், மலர்ந்து மணம்வீசி அழியும் பூக்கள் மனித வாழ்க்கையின் நிலையற்ற தன்மையையும் குறிக்கின்றன. நாம் புத்தரை வணங்கும்போது அவருடைய போதனைகள் நமக்களித்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோம்! அவையே பௌத்தர்களின் வழிபாட்டு முறைகளாகும்.

வினா: பௌத்தர்கள் சிலைகளை வணங்குவதாகக்

கேள்விப்பட்டிருக்கிறேனே!

விடை: இப்படிப்பட்ட கேள்விகள், கேள்வி கேட்பவர்களின் அறியாமையைக் காட்டுகிறது. 'IDOL' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஆங்கில அகராதியில் 'கடவுளாக வழிபடப்படும் ஓர் உருவம் அல்லது சிலை!' எனக்கூறப்படுகிறது. மேலே குறிப்பிட்டது போல், பௌத்தர்கள் புத்த பெருமானைக் கடவுளாக வழிபடுவதில்லை. அப்படியிருக்கும்போது அவர்கள் ஓர் மரத்துண்டையோ அல்லது ஓர் உலோகப் பொருளையோ எப்படிக் கடவுளென நம்புவர்? எல்லாச் சமயங்களும் பலவிதக் கருத்துப் படிவங்களைத் தங்கள் சமயக் குறிகளாக ஏற்று, மற்றச் சமயங்களுடன் தங்கள் சமயக் குறிகளையும் நிலை நாட்டுகின்றனர்.

டாவிஸம் என்னும் சைன சமயத்தில், யிங்-யாங் என்னும் குறி, எதிர்மறையான பொருளிடம் உள்ள இணக்கத்தைக் (உதாரணத்திற்கு வெளிச்சம்/நிழல்,ஆண்மை/பெண்மை) குறிக்கிறது. சீக்கிய சமயத்தில் வாள் அவர்களுடைய சமயப் போராட்டத்தைக் குறிக்கிறது. கிறுத்துவ சமயத்தில் கிறித்து வாழ்வதை மீன் சின்னம் மூலமாகவும், அவர் செய்த தியாகத்தைச் சிலுவைக் குறி மூலமாகவும் வழிபடுகின்றனர்.

பௌத்தத்தில் புத்த பெருமானின் சிலை மனித பூரணத்துவத்தைக் குறிக்கிறது. புத்த பெருமானின் சிலை, பௌத்தம் மனிதனை மையப்படுத்தி ஆராய்வதே தவிரக் கடவுளை மையப்படுத்துவதன்று என்பதையும், நாம் நம்மைப்பற்றி அறிந்து, முழுமையான அறிவு பெறப் பாடுபடவேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறது. சிலையை மட்டுமே பௌத்தர்கள் வணங்கி, அச்சிலையையே தெய்வமாகக் கருதுகிறார்கள் என்பது தவறு.

வினா: பௌத்தக் கோவில்களில் மக்கள் ஏன் பல புதுமையான வழிமுறைகளைச் செய்கின்றனர்?

விடை: சில செயல்கள் நமக்கு விளங்காத போது நாம் அவற்றைத் தவறாகப் புரிந்து கொள்கிறோம்; அவை புதுமையாக இருப்பதால், நாம் அவற்றை நிராகரித்து விடுகிறோம். நாம் அச்செயல்களின் பொருள்களை

முயன்று தெரிந்து கொள்ள வேண்டும்.

புத்த பெருமானின் போதனைகளுக்குப் புறம்பான சில குருட்டு நம்பிக்கைகளும் பௌத்தத்தில் உள. இப்படிப்பட்ட குருட்டு நம்பிக்கைகள் பௌத்தத்தில் மட்டுமன்று மற்றச் சமயங்களிலும் உள. புத்த பெருமான் தெளிவுடனும் விவரமாகவும் போதித்திருக்கிறார்; இருந்தும் சிலர் அதனைப் புரிந்துகொள்ளவில்லையென்றால், புத்த பெருமானை எப்படிக் குறை கூறமுடியும்? இதற்குச் சான்றாகக் கீழ்கண்ட சான்றோர் மொழியினைக் காணலாம்.

'நோயால் வாடும் ஒரு மனிதன், மருத்துவர் ஒருவர் அவனருகில் இருந்தும், அவரிடம் சென்று சிகிச்சை பெறவில்லையென்றால் அது மருத்துவரின் குற்றமன்று! இதைப்போலவே ஒருவன் (மனதில்) அழுத்தப்பட்டு, மாசுள்ள நோயால் சித்திரவதைப் படுத்தப் பட்டும் அவன் புத்தபெருமானிடம் செல்ல வில்லை யென்றால், அது புத்தபெருமானின் தவறன்று.' Jn. 28-9

பௌத்தத்தையோ வேறு எந்தச் சமயத்தையோ அதனைச் சரியாகக் கடைப் பிடிக்காதவர்களைக் கொண்டு எடை போடக் கூடாது. புத்த பெருமானின் உண்மையான போதனைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமேயானால், புத்த பெருமானின் போதனைகளைப் படியுங்கள் அல்லது பௌத்தத்தை நன்குணர்ந்த அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!

வினா: தம்மா என்ற வார்த்தையை அடிக்கடி கேள்விப்படுகிறோம். அதன் பொருள் என்ன?

விடை: தம்மா (சமஸ்கிருதத்தில் தர்மா) என்ற வார்த்தைக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. பௌத்தத்தில் பயன்படுத்தம்படும் போது அதன் பொருள் 'வாய்மை', 'ஒன்றின் உண்மையான நிலை', 'உண்மையாக' என்பதாகும். புத்தரின் போதனைகளை நாம் உண்மையென நம்புவதால் அதனையும் தம்மா என்று குறிப்பிடுகிறோம்.

வினா: கிருஸ்துமஸ் பண்டிகையைப் போலப் பௌத்தத்திலும் ஒரு

பண்டிகை உண்டா?

விடை: பௌத்த சம்பிரதாயப் படி, இளவரசர் சித்தார்த்தர் பிறந்ததும், புத்த நிலை அடைந்ததும், அவர் மறைந்ததும் 'வேஸாக' மாதத்தின் பௌர்ணமி நாள் அன்று தான். அதாவது இந்திய வருடத்தின் இரண்டாம் மாதம். இன்று நடைமுறையில் உள்ள மேற்கத்திய ஆண்டுக் கணக்கின்படி அது ஏப்ரல்-மே மாததில் வரும். அந்நாளில் எல்லா நாடுகளிலுமுள்ள பௌத்தர்களும் கோவிலுக்குச் சென்று, பல சமயச் சடங்குகளிலும் விழாக்களிலும் கலந்து கொண்டு, அல்லது நாள் முழுதும் தியானத்தில் ஈடுபட்டு இந்த முக்கியச் சம்பவங்களைக் கொண்டாடுவர்.

வினா: பௌத்தம் அவ்வளவு சிறந்த சமயமாக இருந்தால் சில பௌத்த நாடுகள் ஏழ்மையாக இருக்கின்றனவே, ஏன்?

விடை: ஏழ்மை என்று நீங்கள் கூறுவது பொருளாதாரத்தில் ஏழ்மை என்னும் பொருள் படக் கூறினால், சில பௌத்த நாடுகள் ஏழ்மையாக இருப்பது உண்மைதான். ஆனால், வாழ்க்கைத் தரத்தில் ஏழ்மை என்றால், சில பௌத்த நாடுகள் சிறந்த செல்வத்துடன் இருக்கின்றன. அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். அது பொருளாதாரத்தில் வளமான நாடு; மற்றும் சக்தி வாய்ந்த நாடு; ஆனால், உலகத்திலேயே அதிகமாகக் கொலை, கொள்ளைகள் நடக்கும் நாடும் அதுதான்! இலட்சக்கணக்கான முதியவர்கள், தங்கள் குழந்தைகளால் கைவிடப்பட்டுத் தனியாக, ஏழைகளுக்கான முதியோர் இல்லங்களில் தங்கி இருக்கின்றனர்; உள்குழப்பங்கள், வன்முறைகள், கெட்டுப் போகும் குழந்தைகள் முதலியன தலையாய பிரச்சினைகளாக இருக்கின்றன. மூன்று திருமணங்களில் ஒன்று விவாகரத்தில் முடிகிறது. ஆபாசத்தைத் தூண்டிவிடும் எழுத்து முறை மிகச் சுலபமாகக் கிடைக்கிறது. பொருளாதாரத் துறையில் செல்வச் செருக்கோடு வாழ்ந்தாலும் வாழ்க்கைத் தரத்தில் மிக ஏழ்மையாகவே வாழ்கின்றனர்.

மாறாகப் பரம்பரையான பௌத்த நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு பெற்றோர்கள் தங்கள், குழந்தைகளால் கௌரவப்படுத்தப் படுகிறார்கள்; மரியாதையளிக்கப் படுகிறார்கள். கொலைக் குற்றங்கள்

மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவே. விவாகரத்தோ, தற்கொலையோ மிகக் குறைவு. மிருதுவான தன்மை, தாராளமனப்பாங்கு, அறிமுகமில்லாதவர்களுக்குக்கூட விருந்தோம்பல், விரிந்த எண்ணங்கள், மரியாதை போன்ற குணங்களைக் கொண்டுள்ளனர். பொருளாதாரத்தில் பின்னடைந்திருந்தாலும், அமெரிக்காவை ஒப்பிடும்போது மிகச் சிறந்த வாழ்க்கையே வாழ்கின்றனர்.

மேலும், பொருளாதாரத்தின் அடிப்படையில் மட்டுமே நாம் பௌத்த சமய நாடுகளை அளவிட்டால் கூட, இன்று மிகச் செல்வங் கொழிக்கும் நாடும், சக்தி வாய்ந்த நாடும், ஒரு பௌத்த சமய நாடுமான நாடு ஜப்பான் ஆகும். அங்கு பெரும்பான்மையான மக்கள் பௌத்த சமயத்தினரே.

வினா: பௌத்தர்கள் ஏழை எளிய மக்களுக்கு எந்த விதமான சேவைகளும் செய்ததாகக் கேள்விப் படவில்லையே, ஏன்?

விடை: பௌத்தர்கள் தாங்கள் செய்யும் சேவைகள், மக்களுக்கு ஆற்றும் தொண்டுகளைப் பறைசாற்றிக் கொள்வதில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு, பல்வேறு சமயத்தினரிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தியதற்காக, நிக்கோ நிர்வானோ என்னும் ஜப்பானியப் பௌத்தப் பெரியாருக்கு  டெம்பில்டன் பரிசு என்னும் விருது கிடைத்தது. அதைப் போலவே பெருமைக்குரிய மேக்ஸேஸே பரிசினை ஒரு தாய்லாந்து பௌத்தத் துறவி கஞ்சா போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்குச் செய்த சேவைகளுக்காகப் பெற்றார். 1987ல் மற்றொரு தாய்லாந்து அறவண அடிகள் வணக்கத்துக்குரிய கண்டயாபிவாட் அவர்களுக்குக் கிராமப் புறங்களில் வாழும் ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தொண்டு செய்ததற்காக, நார்வே நாட்டின் குழந்தைகள் சமாதானப் பரிசு கிடைத்தது. மேற்கத்தியப் பௌத்தர்களால் இந்தியாவில் பெருமளவில் செய்யும் சேவைகளை எப்படிக் கணக்கிட முடியும்? அவர்கள் பள்ளிகள் கட்டியிருக்கின்றனர்; குழந்தைகளைத் கவனிக்கும் மையங்கள், மருந்தகங்கள் தன்னிறைவுக்கான சிறிய அளவிலான தொழிற்சாலைகள் அமைத்துள்ளனர். பௌத்தர்கள் மற்றவர்களுக்குச் செய்யும் சேவையைத் தங்கள் சமயக் கடமைகளில் ஒன்றாகக்கருதிச் செய்கிறார்கள்; மேலும் அதனை அமைதியாகவும் சுயவிளம்பரமின்றியும்

செய்கின்றனர். அதனால்தான், பௌத்தர்களின் சமுதாயச் சேவைகளை, அவ்வளவாகக் கேள்விப்படுவதில்லை.

வினா: பௌத்தத்தில் ஏன் இத்தனை பிரிவுகள் உள?

விடை: சர்க்கரையில் பலவித சர்க்கரைகள் உள. பழுப்பு நிறச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை, சிறுமணிச் சர்க்கரை, பாறைச் சர்க்கரை, சர்க்கரை பானங்கள், மற்றும் பாலாடை கலந்த சர்க்கரை, இப்படிப் பல. ஆனால், இப்படி எத்தனை பெயரிட்டழைத்தாலும், அவை தரும் சுவை இனிப்புத்தானே? அவற்றைப் பல விதமாக உற்பத்தி செய்து, பல விதமாகப் பயன்படுத்துகின்றனர். அதேபோல் பௌத்தம் ஒன்றுதான். ஆனால், அதில், தேரவாதா பௌத்தம், ஜென் பௌத்தம், தூய நில பௌத்தம், யோகாசாரா பௌத்தம் மற்றும் வஜ்ஜிராயன பௌத்தம், எனப் பல பிரிவுகள் உண்டு. இவையனைத்துமே பௌத்தம் தான். எல்லாமே ஒரே சுவையைத் தரக்கூடியவையே - அது தான் சுதந்திரச்  சுவை.

பௌத்தம் எந்தெந்த நாட்டில் பரவியதோ, அந்ததந்த நாட்டின் கலாசாரத்துக்கேற்பத் தன் தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமல் மாறிக் கொண்டது. இப்படிக் கடந்த நூற்றாண்டுகளில், பௌத்தம் அந்தந்தத் தலை முறைகளுக்கு ஏற்றவாறு தன்னை நிலை நிறுத்திக்கொண்டது. வெளிப்பார்வையில் வேறு வேறு பௌத்தம் என்றுக் கூறிக் கொண்டாலும், அவை அடிப்படையாகக் கொண்டவை நான்கு உயர்ந்த மேன்மையான பேருண்மைகள் மற்றும், அஷ்டாங்க மார்க்கம் ஆகியவற்றையே. பௌத்தம் உள்ளிட்ட பல சமயங்கள் அவற்றினூடே தனித்தனிப் பள்ளிகளாகவும் தனித்தனிப் பிரிவுகளாகவும் பிரிந்து கொண்டன.

பொதுவாக, பௌத்தத்தில் ஒரு பிரிவினர் மற்ற பிரிவினரைப் பொறுமையோடும், நட்புணர்வோடும் ஏற்றுக்கொண்டனர். இப்படிப்பட்ட சகிப்புத் தன்மை மிக அரிதே!

வினா: நீங்கள் உங்கள் சமயமான பௌத்தத்தை உயர்வாக எண்ணுகிறீர்கள். நீங்கள் உங்கள் சமயம் மட்டுமே சரியானதென்றும்

மற்றச் சமயங்களெல்லாம் தவறென்றும் எண்ணுகிறீர்கள், அப்படித்தானே?

விடை: புத்த பெருமானின் போதனைகளைச் சரியாகப் புரிந்து கொண்டவர்கள், மற்ற சமயங்களைத் தவறு எனக் கூறுவதில்லை, மற்ற சமயங்களை உண்மையிலேயே சிரமப்பட்டுத் திறந்த உள்ளத்துடன் ஆய்ந்து பார்ப்பவர்கள், பிற சமயங்களையும் தங்கள் சமயத்துக்கு இணையாகவே கருதுவர். முதலில் நாம் ஒரு சமயத்தை ஆராயும் போது இரண்டு சமயங்களுக்கும் பொதுவான கருத்துகள் எவை என்பதையே காண்போம். எல்லாச் சமயத்தினரும் இன்றைய மனிதனின் வாழ்க்கை நிலை திருப்தியற்றது என்பதை ஒத்துக்கொள்வர். மனித வாழ்க்கை உயர்வடைய வேண்டுமேயானால், நடத்தையிலும், எண்ணத்திலும் ஒரு மாற்றம் வேண்டுமென்பதை ஒத்துக் கொள்வர். எல்லாச் சமயங்களும் அன்பு, இரக்கம், பெருந்தன்மை, சமுதாயப் பொறுப்புகள் போன்ற நீதியையே போதிக்கின்றன. நிபந்தனையற்றதொன்று இருக்கிறதென்பதை அனைவருமே ஏற்றுக் கொள்கின்றனர். அவர்கள் விதவிதமான சொற்களுடன், விதவிதமான பெயர்களைக் கொண்டு, விதவிதமான குறிகளைப் பயன்படுத்தித் தங்கள் சமயங்களை விளக்குகின்றனர். மக்கள் குறுகிய மனப்பான்மையோடு தங்கள் வழியுடன் மட்டும் ஒட்டிக்கொள்ளும் போதுதான், மற்ற சமயங்களை ஒதுக்கிச் சகித்துக்கொள்ள முடியாமல், தான் தான் சரி என்ற பெருமையும், தான் சொல்வது தான் சரியென்ற எண்ணமும் நிலையூன்றுகிறது.

ஓர் ஆங்கிலேயர், ஒரு பிரஞ்சுக்காரர், ஒரு சீனர், ஓர் இந்தோனேசியர் ஆகிய நால்வர் ஒரு கோப்பையைப் பார்க்கின்றனர். ஆங்கிலேயர் கூறுகிறார் 'இது ஒரு கப்' என்று. பிரஞ்சுக்காரர் கூறுகிறார். 'இல்லை, இல்லை, இது ஒரு டேஸ்ஸே! ' என்று. உடனே சீனர், 'நீங்கள் இருவர் சொல்வதுமே தவறு, இது ஒரு பெய்' என்கிறார். இவர்கள் அனைவரையும் பார்த்துக் கொண்டிருந்த இந்தோனேசியர், 'நீங்கள் அனைவருமே முட்டாள்கள்; இது ஒரு கேவான்' என்கிறார். ஆங்கிலேயர் ஓர் ஆங்கில அகராதியைக் கொண்டு வந்து, 'எங்கள் அகராதியில் கப் என்று தான் போட்டிருக்கிறது' என்கிறார். பிரஞ்சுக்காரரரோ 'உங்கள் அகராதி கூறுவது தவறு, ஏனென்றால் எங்கள் அகராதியில் துல்லியமாக அதை டேஸ்ஸே, என்றுதான் போட்டிருக்கிறார்கள்' என்கிறார்; சீனர் அவர்களை

விறைக்கிறார்! 'எங்கள் அகராதி ஆயிரக்கணக்கான வருடமுடைய பழம் அகராதி. அதனால் எங்கள் அகராதி கூறுவது தான் சரியாக இருக்க முடியும்! அதுவுமின்றி உலகத்திலேயே அதிகமாகப் பேசப்படும் மொழி சீனமே! அதனால், எங்கள் அகராதி கூறுவதுதான் சரியாக இருக்க முடியும், அதனால், இதன் பெயர் பெய்' தான்' என்கிறார், அப்பொழுது ஒருவர் அவர்கள் சண்டைபோட்டுக் கொண்டிருக்கும் இடத்துக்கு வருகிறார். அந்தக் கோப்பையிலிருக்கும் நீரைப் பருகுகிறார். பருகியவுடன் அவர் மற்றவர்களிடம் கூறுகிறார், நீங்கள் இதைக் 'கப்' என்றோ 'டேஸ்ஸே' என்றோ, 'பெய்' என்றோ 'கேவான்' என்றோ அழைத்தாலும், அக்கோப்பைப் பானம் அருந்துவதற்குப் பயன்படுகிறது, உங்கள் வாதங்களை விட்டுவிட்டு உங்கள் தாகத்தைத் தணித்துக்கொள்ளுங்கள்!' என்கிறார்.

இதுவே மற்றச் சமயங்களைப் பற்றிய பௌத்தத்தின் எண்ணமாகும்.

வினா: சிலர் எல்லா மதங்களும் ஒன்றே என்கின்றனர். இந்தக் கூற்றை ஒத்துக்கொள்வீர்களா?

விடை: மதங்கள் மிகவும் சிக்கலானவை, மேலும் ஒன்றோடொன்று மாறுபட்டவை. எனவே இக்கேள்விக்கு விடை எளிதாகச் சொல்லிவிடமுடியாது. பௌத்தர் இந்தக் கூற்றில் சில உண்மைகள் இருப்பதாகவும் சில பிழைகள் இருப்பதாகவும் சொல்லக்கூடும். பௌத்தம் கடவுளைப்பற்றிப் பேசுவதில்லை. சில மதங்கள் கடவுளைப்பற்றிப் பேசுகின்றன. பௌத்தம் மனத்தைத் தூய்மையாக்கும் எவரும் நிர்வாண நிலையை அடையமுடியும் எனச் சொல்கிறது. மாறாக கிறுத்துவ சமயம் யேசுவை நம்புவோர் மட்டுமே மோட்சம் அடையமுடியும் எனக் கூறுகிறது. இவையெல்லாம் குறிப்பிடத் தக்க வித்தியாசங்கள்.

அதே சமயம் பைபிலில் அழகான ஒரு பந்தி இவ்வாறு சொல்கிறது:

'நான் மக்களும் தேவதைகளும் பேசும் மொழிகளைப் பேசியும், அன்பு இல்லையென்றால், வெறும் சத்தம் போடுபவன் தான் - கைத்தாளத்தின் சத்தத்தைப் போல. எனக்கு ஆருடம் கூறும் திறமை இருந்தும், எனக்கு எல்லா மர்மங்களும் அறிவும் தெரிந்திருந்தும், மலைகளை நகர்த்தும்

அளவிற்கு மேலோங்கிய பக்தி இருந்தும், எனக்கு அன்பில்லையென்றால் நான் ஒன்றுக்கும் உதவாதவனாகிறேன். என்னிடமிருப்பதையெல்லாம் ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு, என் உடம்பையும் நெருப்புக்குத் தானம் செய்தும் எனக்கு அன்பில்லையென்றால் எனக்கு எந்தப் பயனும் இல்லை.

அன்பிற்குப் பொறுமை உள்ளது. அன்பிற்குக் கருணை உள்ளது. அது பொறாமைப் படுவதில்லை. அது தற்பெருமையடித்துக் கொள்வதில்லை. பெருமை கொள்வதில்லை. நாகரிகமில்லாதது இல்லை, அது ஆணவத்தை அதிகரிப்பதில்லை, சுலபமாகக் கோபப்படுவதில்லை, மற்றவர் தனக்குச் செய்த தவறை நினைவில் கொள்வதில்லை. அன்பு தீமையில் மகிழ்வதில்லை, வாய்மையில் மகிழ்வடைகிறது. அன்பு எப்போதும் பாதுகாக்கும், எப்போதும் நம்பிக்கை வைக்கும், எந்த வகைத் தடைவந்தாலும் தொடரும்.'

இதைத்தான் பௌத்தமும் போதிக்கிறது. நம்மிடம் இருக்கும் வலிமையோ, ஆற்றலோ, எதிர்காலத்தில் நடக்கக்கூடியதை சொல்லும் திறனோ, நம் பக்தியோ அல்லது வேறு ஏதாவது அபிநயமோ முக்கியமில்லை. உள்ளத்தின் தூய்மைதான் முக்கியம்.

கிறுத்துவ பௌத்த சாஸ்திரங்களின் சமயக் கருத்துக்களிலும் சித்தாந்தங்களிலும் வேறுபாடுகள் உள. ஆனால் உள்ளத்தின் பண்புகள், நன்னெறி, நடத்தை போன்றவற்றைப் பார்க்கும் போது இரண்டு சமயங்களுக்கும் ஒற்றுமைகள் இருக்கின்றன. இதைப் போலவே பௌத்தத்தையும் மற்ற சமயங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போதும் இதே முடிவிற்கு வரலாம்.

வினா: பௌத்த சமயம் அறிவியல் பூர்வமானதா?

விடை: இவ்வினாவுக்கு விடை அளிக்குமுன் அறிவியல் என்னும் பொருள்படும் 'science' என்னும் ஆங்கிலச் சொல்லை விவரிப்போம். மேற்படி சொல் ஆங்கில அகராதியின்படி 'ஒரு முறைப்படுத்தப்படும் அறிவு; அவ்வறிவு பார்த்து, ஆய்ந்து அதன் உண்மைகளை இயற்கை நியதிகளுக்கு ஏற்ப விவரித்தல். அந்த அறிவின் கிளை. எப்பொருளையும்

சரியான முறையில் படித்தறிந்து கொள்ளல்'.

ஒரு சில பௌத்தக் கோட்பாடுகள் இவற்றில் அடங்கா. ஆனால், பௌத்தப் போதனையின் மையமான நான்கு பேருண்மைகள் இவற்றில் நிச்சயமாக அடங்கும். முதல் பேருண்மையான துக்க அனுபவத்தை ஆய்ந்து, அளந்து அனுபவித்து விவரிக்கலாம். இரண்டாவது பேருண்மையான துக்க உற்பவம், அந்த உற்பவத்துக்குக் காரணமான பேராசை, அதுவந்த விதம் முதலியவற்றையும் அளந்து அனுபவித்து விவரிக்கலாம். அதனைச் சித்தாந்தக் கோட்பாடுகளாகவோ, புராணிகமுறையிலோ விவரிக்க முயலவில்லை. மூன்றாவது பேருண்மை துக்க நிவாரணம். துக்கத்தை ஒரு பராசக்தியாலோ அல்லது நம்பிக்கையாலோ நீக்கி விட முடியாது. துக்கம் தோன்றுவதற்கான காரணத்தை நீக்கினாலே போதும். இது வெளிப்படை யான உண்மை.

நான்காவது பேருண்மையான துக்க நிவாரண மார்க்கம். இதிலும் சித்தாந்தக் கோட்பாடுகள் ஒன்றுமில்லை. குறிப்பிட்ட வழிகளிலே நடந்தால் துக்கத்தை ஒழிக்கலாம். இந்த நடத்தையை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யலாம். பௌத்தம் மேன்மையான நிலைகளை அறிவியல் முறையில் விவரிக்கிறது. இயற்கை விதிகளுக்கேற்ப, துக்கம் எப்படி ஏற்படுகிறது, அதனை எப்படி ஒழிப்பது, போன்றவற்றை விவரிக்கின்றது. இவையனைத்தும் அறிவியல் பூர்வமானவையே! மேலும், புத்த பெருமான் நம்மை எதையும் கண்மூடித்தனமாக நம்ப வேண்டாமென்கிறார். கேள்வி கேட்டு, ஆராய்ந்து, விசாரித்து, நமது சொந்த அனுபவத்தைக் கொண்டே ஒரு முடிவெடுக்கச் சொல்கிறார். புத்தபெருமான் கூறுவதாவது:

"ஒரு பழக்கத்தைப் பார்ப்பதாலோ, வழக்கமாக நடந்து வருகிறது என்பதாலோ, வதந்திகளாலோ, புனிதநூல்களில் குறிப்பிட்டிருக்கிறது என்பதாலோ, செவிவழிக் கதைகளாலோ, தர்க்க வாதங்களாலோ, ஓரஞ்சேர்ந்த வாதத்தாலோ, அல்லது மற்றவர் பார்த்துச் சொன்னார் என்பதற்காகவோ, அதைக் கூறியவர் நமது ஆசிரியர் என்பதாலோ பின்பற்றாமல், உனக்கு அது நன்மை பயக்கும் என்று தெரிந்து, மற்றவர்களால் குறைகூற முடியாதென்பதையறிந்து, அறிஞர்களால், அது போற்றக்கூடியது, அதை அனுபவிக்கும் போது அது மகிழ்ச்சியைத்

தரக்கூடியது என்பது தெரிந்தால், அதனைப் பின்பற்று!" என்கிறார்.

இதிலிருந்து பௌத்தம் அறிவியலையே அடிப்படையாகக் கொண்டது இல்லையென்றாலும், பௌத்தச் சமயத்துக்குப் பலமான அறிவியல் தாக்கம் இருக்கிறது என்று சொல்லலாம். மற்றச் சமயங்களை விடப் பௌத்தத்தில் அறிவியல் தாக்கம் அதிகமிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அறிவியல் அறிஞரான ஆல்பர்ட் ஐன்ஸ்டின் பௌத்தம் பற்றிக் கூறியதாவது:

"எதிர்காலச் சமயம் அண்டங்களுக்கெல்லாம் பொதுவான ஒரு சமயமாக இருக்கும். எது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதை ஒழித்து, மறுக்க முடியாத சித்தாத்தங்களை ஏற்று, கடவுள், மதம் பற்றிய ஆராய்ச்சியைச் சரிவரச் செய்து, இயற்கை நியதிகளையும் ஆன்மீகத்தையும் உள்ளடக்கி, எல்லாவற்றையும் ஆய்ந்து அனுபவித்து, இயற்கை, சமயம் இரண்டையும் ஒருங்கிணைத்து, அர்த்தமுள்ள ஒற்றுமையை உண்டாக்குகிறதோ அதுவே, அப்படிப்பட்ட சமயமே, எதிர்காலத்துக்கேற்ற சமயமாகும். இப்படிப்பட்ட விளக்கத்துக்குப் பௌத்த சமயமே பதிலளிக்கிறது. நவீன கால அறிவியல் தேவைக்கு அப்படி ஒத்துவரும் சமயம் பௌத்த சமயமேயாம்."

வினா: சில சமயம் புத்தரின் போதனைகள் 'நடு வழி' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியென்றால் என்ன?

விடை: புத்தர் அவரது அஷ்டாங்க மார்க்கத்திற்கு, 'மஜ்ஹிம பதி பாடா' என்று வேறு ஒரு பெயரும் தந்தார். இதற்குப் பொருள் 'நடு வழி' என்பது தான். இது ஒரு முக்கியமான பெயர். இதிலிருந்து தெரியவருவது பௌத்தப் பாதையைத் தொடர்ந்தால் மட்டும் போதாது அதை ஒரு குறிப்பிட்ட விதத்திலும் தொடர வேண்டும் என்பதே. மக்கள் சமய விதிகளையும் வழிகளையும் அளவு கடந்த பற்றோடு தொடர்ந்து, சமய வெறியர்களாக மாறக்கூடும். பௌத்தத்தில் விதிகளையும் பயிற்சியினையும் சமமாயிருந்து விவேகத்துடன் தொடர வேண்டும். மேலும் அடாவடித் தனத்தையும் அதி தீவிரத்தையும் தவிர்க்க வேண்டும். (ஒருபுறம் புலன் ஆசைகளை வேண்டும்போதெல்லாம் திருப்தி செய்து

கொள்வது. மறுபுறம் உடலையும் உள்ளத்தையும் பெரும் இம்சைப் படுத்துவது. சான்றாக நாட்கணக்கில் உண்ணாவிரதம் இருப்பது. இவ்விரண்டுமே ஆன்மீக வளர்ச்சிக்கு உதவாது). அக்கால யவனர்கள் 'எல்லாவற்றிலும் நடுத்தரமாக நடந்து கொள்' என்று கூறுவார்களாம். பௌத்தர்கள் இக்கூற்றினை முழுமையாக ஏற்றுக் கொள்வார்கள்.

வினா: பௌத்தம் இந்து மதத்தின் ஒரு பிரதிமை என்று படித்திருக்கின்றேன். இது உண்மையா?

விடை: இல்லை. அப்படி இல்லை. பௌத்தமும் இந்து மதமும் பல நன்னெறிக் கருத்துகளைப் பகிர்ந்து கொள்கின்றன. மேலும் 'கம்மா', 'சமாதி', 'நிர்வாணா' போன்ற சில சமயச் சொற்களையும் பகிர்ந்து கொள்கின்றன. இரண்டு மதங்களுமே இந்தியாவில் உருவாகின. இதனால் சிலர் இரண்டும் ஒன்றே என்றும், ஒரே மாதிரி உள்ளதாகவும் நினைக்கின்றனர். மேலோட்டமாக உள்ள ஒற்றுமைகளுக்கு அப்பாற் சென்றால் இவ்விரண்டு மதங்களும் முற்றாக வேறுபட்டவை என்பது தெளிவாகத் தெரியும். உதாரணத்திற்கு, இந்துக்கள் ஒப்புயர்விலாத கடவுள் இருப்பதாக நம்புகிறார்கள். பௌத்தர்கள் அப்படி நம்புவதில்லை. இந்து மத சமுதாயத் தத்துவத்தில் ஜாதி என்ற கருத்து முக்கிய இடம் பெருகிறது. பௌத்தம் இதனை உறுதியுடன் நிராகரிக்கிறது. சடங்கு செய்து தூய்மை பெறலாம் என்ற வழக்கம் இந்து மதத்தில் வேரூன்றியுள்ளது. பௌத்தத்தில் இதற்கு இடமே இல்லை. பௌத்த நூல்களில் அடிக்கடி புத்தர் பிராமணர்கள், அதாவது இந்து அர்ச்சகர்கள், சொல்லித் தருவதைக் குறை காண்கிறார். அவர்களும் புத்தரின் சில கருத்துக்களைக் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார்கள். பௌத்தமும் இந்துமதமும் ஒன்றானால் இவ்வாறு இருந்திருக்காது.

வினா: ஆனால் புத்தர் கம்மா என்ற கருத்தினை இந்து மதத்திடமிருந்துதானே எடுத்துக்கொண்டார்?

விடை: இந்து மதமும் கம்மா (சமஸ்கிருதத்தில் கர்மா) என்ற கருத்தினையும் மறுபிறப்பு என்ற கருத்தினையும் சொல்லித்தருவது

உண்மை தான். ஆனால் இந்தக் கோட்பாடுகளின் இந்து மத விளக்கமும் பௌத்தமத விளக்கமும் வேறுபடுகின்றன. உதாரணத்திற்கு, கம்மாவினால் நாம் தீர்மானிக்கப்பட்டுவிட்டதாக இந்து மதம் கூறுகிறது. கம்மா நம்மைப் பாதித்திருப்பதாக மட்டுமே பௌத்தம் கூறுகிறது (அதாவது இப்போது செய்யும் கம்மாவினால் (செய்கை) நம் நிலைமையை மாற்றிக் கொள்ள முடியும் என்று பௌத்தம் கூறுகிறது). நித்திய பிராணி அல்லது ஆத்மா என்ற ஒன்று ஒரு பிறவியிலிருந்து அடுத்த பிறவிக்குச் செல்வதாக இந்து மதம் கூறுகிறது. அப்படியான ஆத்மாவை பௌத்தம் நிராகரிக்கிறது. மாறாக எந்நேரமும் மாறிக் கொண்டிருக்கும் மனச் சக்தியின் ஓட்டம் தான் மறுபிறவி எடுப்பதாகப் பௌத்தம் கூறுகிறது. 'கம்மா', மறுபிறவி' என்னும் கோட்பாடுகளில் இவை சில வித்தியாசங்கள் தான். இது போலப் பல வித்தியாசங்கள் உள்ளன. மேலும் அப்படியே இந்தக் கோட்பாடுகளில் வித்தியாசமே இல்லையென்றாலும், புத்தர் தானாக யோசனை செய்யாமல் இந்து மதத்திலிருந்துதான் இவற்றை எடுத்தார் என்று கூற முடியாது.

சில சமயம் இரு மனிதர்கள் தனியாகச் செயற்பட்டு ஒரே கண்டுபிடிப்பைக் காண முடியும். உயிரினங்கள் எவ்வாறு வளர்ந்து விரிவடைந்தன என்ற பரிணாமக் கருத்தினை எவ்வாறு உருவானது என்பதை ஒரு உதாரணமாகக் கூறலாம். 1858 ஆம் ஆண்டு சார்லஸ் டார்வின் அவரது புகழ் பெற்ற 'தி ஓரிஜின் ஒ..ப் ஸ்பீஷீஸ்' என்ற புத்தகத்தை வெளியிடும் முன்னர், அல்..பர்டு ரஸ்ஸல் என்பவர் அதே கருத்தைத் தானாகவே கண்டு பிடித்ததாகத் தெரிந்து கொண்டார். அவர்கள் இருவரும் அந்தக் கருத்தினை ஒருவரிடமிருந்து மற்றவர் எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக ஒரே மாதிரியான பொருட்களையும், நிகழ்ச்சிகளையும் கவனித்து ஆராய்ந்ததில் இருவரும் அவைகளைப் பற்றி ஒரே முடிவிற்கு வந்தனர். அது போலக் 'கம்மா', மறுபிறவி' என்னும் கோட்பாடுகளில் பௌத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் வேறுபாடுகளே இல்லையென்றாலும் (வேறுபாடுகள் இருக்கின்றன) ஒருவர் மற்றதிலிருந்து எடுத்துக் கொண்டதாகக் கூற முடியாது. உண்மை என்ன வெனில் தியானம் செய்து ஏற்பட்ட ஆழமான அறிவினால் இந்து முனிவர்களுக்குத் தோன்றிய 'கம்மா', 'மறுபிறவி' போன்ற முழுதும் தெளிவு பெறாத கருத்துக்களைப் புத்தர் பின்

தெளிவாகவும் மிகச் சரியாகவும் விளக்கினார்.

* * * * * * * *

## 2. பௌத்த அடிப்படைக் குறிக்கோள்கள்

வினா: பௌத்த சமயத்தின் முக்கிய போதனைகள் யாவை?

விடை: புத்தபெருமானின் பெரும்பாலான போதனைகள் நான்கு பேருண்மைகளையே சுற்றிச் சுற்றி வருபவை. ஒரு வண்டிச்சக்கரத்தில் வளையத்திலிருந்து ஆரங்கள் எப்படிச் சக்கரத்தின் மையத்தில் இணைகின்றனவோ, அதைப் போலவே புத்தர் போதனைகளும் நான்கு பேருண்மைகளையே சுற்றிச் சுற்றி வரும்.

உண்மைகள் நான்கு இருப்பதால், அவற்றை நான்கு பேருண்மைகள் என்கிறோம். அவை அறிந்து கொள்பவர்களை மேம்படுத்துவதால் அவற்றை மேன்மையான (NOBLE) பேருண்மைகள் என்கிறோம். அவை வாய்மை உடைத்தாயிருப்பதால் அவற்றை உண்மைகள் என்கிறோம்.

வினா: முதல் பேருண்மை எது?

விடை: முதல் பேருண்மை வாழ்க்கையே துன்பமயமானது என்பதாகும்; வாழ்வதற்கு நாம் துன்புற வேண்டும். துன்பத்தை அனுபவிக்காமல் வாழ்வது சாத்தியமே இல்லை; நாம் நோய், உடலில் ஏற்படும் காயங்கள், களைப்பு, முதுமை, இறுதியாகச் சாவு போன்ற உடலில் ஏற்படும் துன்பங்களாலும், தனிமை, எண்ணக் குலைவு, குழப்பம், ஏமாற்றம், கோபம் போன்ற உள்ளத்தில் ஏற்படும் துன்பங்களாலும் துன்புறுகிறோம்.

வினா: இது ஒரு தோல்வி மனப்பான்மைக் கொள்கையல்லவா?

விடை: 'PESSIMISM' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அகராதியில், எது நடந்தாலும் தீமையே நடக்கும் என்ற தீய, தோல்வி மனப்பான்மை

அல்லது தீய சக்தியே நல்ல சக்தியைவிடப் பலம் வாய்ந்தது என விளக்குகிறது.

பௌத்தம் இவ்விரு கொள்கைகளையுமே போதிக்க வில்லை. மேலும் வாழ்வில் இன்ப மயமும் உள்ள தென்பதையும் அது மறுக்கவில்லை. ஆனால், பௌத்தம் கூறுவதெல்லாம், மனிதன் வாழ வேண்டுமானால், உடலாலும் உள்ளத்தாலும் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்பதுதான். இதனை எவருமே மறுக்க முடியாது.

பௌத்த சமயம் அனுபவத்தில் ஆரம்பமாகிறது. ஒரு மறுக்க முடியாத கருத்தை, எல்லோருக்கும் தெரிந்த ஒன்றை, எல்லோராலும் அனுபவிக்கப்பட்டு அதனை எப்படித் தவிர்ப்பது என்று முயலும் ஒன்றைத் தவிர்க்க வழிகாட்டுவதே பௌத்தமாம்.

பௌத்தம் ஒவ்வொரு மனிதனின் அக்கறையின் மையமாக இருக்கும் துன்பத்தையும், அவர்களின் துக்கத்தை நிவர்த்திக்கவும் வழிகாட்டும் சமயமாகும்.

வினா: இரண்டாவது பேருண்மை என்பது யாது?

விடை: இரண்டாவது பேருண்மை என்பது அடக்க முடியாத ஆசையால் துக்கம் ஏற்படுகிறது என்பதாகும். உள்ளத்தால் ஏற்படும் வேதனைகளைப் பார்த்தால், அடக்க முடியாத ஆசைகளால் அத்துன்பம் எப்படி வந்ததென்பது தெளிவாகத் தெரியும்; நமக்கு ஒன்றின் மேல் விருப்பம் ஏற்பட்டு அது கிடைக்காமல் போய்விடுகிறது என்றால், 'விரக்தி' ஏமாற்றம் அடைந்து விடுகிறோம். ஒருவர் நாம் எதிர் பார்க்குமளவுக்கு இருப்பார் என எண்ணுகின்றோம்; அப்படியில்லை என்று தெரிந்தவுடன், அது நமக்குப் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது; நாம் ஏமாற்றப் பட்டோம் என்ற எண்ணம் உருவாகிறது. ஒருவர் நம்மை விரும்ப வேண்டும் என என்னுகிறோம். அப்படி நாம் எதிர்பார்க்கும் நபர், நம்மை விரும்பவில்லை என்றால், அச்செயல் நம்மைப் புண்படுத்துகிறது. நாம் விரும்பும் பொருள் நமக்குக் கிடைத்து விட்டாலும் அது நமக்கு நீண்டநாட்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்காது. அம்மகிழ்ச்சி நமக்கு நிலைக்காது. சில நாட்களிலேயே,

விரும்பி அடைந்த பொருளே, சலிப்பை ஏற்படுத்தி விடும். பின் அதன் மீதிருக்கும் பற்றை விட்டுவிட்டு, அது போன்ற வேறொன்றை நாடுவோம். இரண்டாம் பேருண்மை விளக்குவதுயாதெனில், நாம் விரும்புவது கிடைத்தால் கூட அது நிரந்தர மகிழ்ச்சியைத் தருமென்பது உறுதியில்லை. தொடர்ந்து நம் மனம் நாடும் தேவைகளுக்காகப் போராடுவது அல்லது தவிப்பதை விட்டுவிட்டு நம் தேவைகளைத் திருத்திக் கொள்வது நல்லது. அடிக்கடி மாறும் இத்தேவைகள் நம் மன நிறைவையும் மகிழ்ச்சியையும் கெடுத்து விடுகிறது.

வினா: ஆனால் எப்படித் தேவைகளும் அடக்க முடியா ஆசைகளும் உடலுக்குத் துன்பத்தை ஏற்படுத்துகின்றன?

விடை: வாழ்நாள் முழுவதும் தேவைகளும் அடக்க முடியாத ஆசைகளும் தொடர்ந்து இருந்தால், குறிப்பாக நிரந்திரமாக உயிர் வாழ இருக்கும் பேராசையினால், அத்தேவையும் ஆசையும் ஒவ்வொரு தனி மனிதரிடையேயும் ஒரு பலம் வாய்ந்த சக்தியை ஏற்படுத்தி, அவரை மறுபடியும் பிறக்கச் செய்கிறது. நாம் மறுபடியும் பிறந்தால் நமக்கு உடம்பு உண்டாகிறது; பிறகு நாம் மேற்கூறியது போல, அவ்வுடல் காயத்துக்கும் நோய்களுக்கும் ஆசைகளுக்கும் ஆட்படுகிறது; அவ்வுடல் செய்யும் வேலைகளால் தளர்ந்து, வயது முதிர்ந்தவுடன் இறந்து, மறு பிறவி எடுக்கிறது. ஆக அடக்க முடியாத பேராசை நம் உடல் துன்பத்துக்கு வழிகோலுகிறது. ஏனென்றால் அவ்வாசையே நம் மறுபிறப்புக்குக் காரணமாகிறது.

வினா: அவையெல்லாம் சரிதான்; நம் தேவைகள் அனைத்தையும் வேண்டாவென்று நிறுத்தி விட்டோமேயானால், நமக்கு ஒன்றுமே கிடைக்காதே, நாம் எதையும் சாதிக்க இயலாதே?

விடை: உண்மைதான். ஆனால், புத்தபெருமான் கூறுகிறார்: நமது ஆசை, தீராத ஆசை; நம்மிடம் இருப்பதை வைத்துக்கொண்டு, திருப்தியடையாமல் அமைதியின்றி, மேலும் மேலும் வேண்டுமென்று அலைவதே நமக்குத் துன்பத்தைக் கொடுக்கிறது. ஆகையால்

அப்பேரலைச்சலைத் தவிர்க்க வேண்டும். புத்தபெருமான் நமது அவசியத் தேவைகள் என்ன, நாம் விரும்பும் தேவைகள் என்ன, என்பதற்கான வித்தியாசத்தை உணரக் கூறுகிறார். நமது அவசியத் தேவைகளைத் திருத்திக் கொள்ளச் சொல்கிறார்.

புத்தபெருமான் கூறுகிறார்: நமது தேவைகள் பூர்த்தி செய்யப்படலாம். ஆனால், விருப்பங்கள் முடிவற்றவை. நமது விருப்பங்கள் ஆழந்தெரியாத குழி. அதனை நிரப்பவே முடியாது. தேவைகள் பல இருக்கின்றன. அவை அவசியமானவை; அடிப்படைத்தேவைகள். அத்தேவைகளுக்காக நாம் உழைத்தோமேயானால் அவை நமக்குக் கிடைக்கும். அதற்கு மீறிய ஆசைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை என்றால் என்ன? வாழ்வதற்குத் தேவையானவற்றைத் தேடுவதும், தேடியவை கிடைத்தவுடன் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதுதானே!

வினா: நிங்கள் மறு பிறவிபற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்களே, அதற்கு ஏதேனும் சான்றுகள் உளவா?

விடை: அதற்குப் பல சான்றுகள் உள. அதனை விவரமாகப் பின்பு பார்ப்போம்.

வினா: மூன்றாவது பேருண்மை என்பது யாது?

விடை: மூன்றாவது பேருண்மையாவது துன்பத்தைக் கடந்து மகிழ்ச்சியை அடையலாம் என்பதாகும். நான்கு சத்தியங்கள் என்னும் பேருண்மைகளில் இம்மூன்றாவது பேருண்மை மிக முக்கியமானது. ஏனென்றால் புத்த பெருமான் இம்மூன்றாவது பேருண்மையால் நமக்கு மனத்திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுமென உறுதியளிக்கிறார். நாம் தேவையற்ற பேராசையை ஒழிக்கக் கற்றுக் கொண்டு, அமைதியற்ற தேவைகளை ஒழித்து அனுபவத்தால் வாழ்க்கை நமக்குக் கொடுக்கும் பிரச்சனைகளை, அச்சமின்றிப் பொறுமையுடன், வெறுப்பின்றிக் கோபமின்றிப் பொறுத்துக் கொள்வோமேயானால் நாம் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியுடனும் வாழலாம். அப்போது தான் நாம் உண்மையிலேயே வாழ ஆரம்பிக்கிறோம்.

ஏனென்றால் நம் சுய நலத்தேவைகள் நம்மை வாட்டி வதைப்பதில்லை; மற்றவர்களுக்கு உதவி செய்யவும், அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நமக்கு போதிய நேரம் கிடைத்துவிடும். இதனையே நிர்வாண நிலையென்று கூறுகிறோம். உள்ளத்தால் ஏற்படும் துன்பங்களிலிருந்து நாம் விடுதலை பெறுகிறோம். இதுவே இறுதியான நிர்வாண நிலை.

வினா: நிர்வாண நிலை என்றால் என்ன? அஃது எங்கே இருக்கிறது?

விடை: அஃது ஒரு மனித அறிவுக்கு அப்பாற்பட்ட கனபரிமாணம்; காலத்தையும் அறிவையும் கடந்தது. அதனால், அதைப்பற்றிப் பேசுவதோ, ஏன் நினைப்பதோ கூடக் கடினம். வார்த்தைகளும் எண்ணங்களும் தற்கால உலக கனபரிமாணத்தை மட்டுமே விளக்க முடியும்.

ஆனால், நிர்வாண நிலை காலங் கடந்தது; அதற்கு இயக்கமோ, வயதோ, மரணமோ கிடையாது. அது நிரந்தரமானது. மேலும் அது எல்லையற்றது; விளைவுண்டாக்கும் செயல் அற்றது. அது பொதுக் கருத்தோ தனிக் கருத்தோ அற்றது. ஆகையால் நிர்வாணம் வினைவகையில் எண், இடம், பால் கட்டுப் பாடற்ற வடிவமுடையது.

நிர்வாண நிலை அனுபவபூர்வமான பெரு மகிழ்ச்சி தரும் என உறுதியளிக்கிறார் புத்த பெருமான். அவர் கூறுகிறார்:

"நிர்வாண நிலையே மிக உயர்ந்த மகிழ்ச்சி!" தம்மபதம் 204

வினா: நிர்வாண நிலை என்னும் பரிமாணம் நிலவுகிறது என்பதற்கு ஏதேனும் சான்றுகள் உளவா?

விடை: இல்லை. ஆனால், அப்படிப்பட்ட 'நிர்வாணம்' என்னும் ஒரு நிலையை நாம் ஊகித்தறியலாம்.

காலமும் உலகமும் இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு கனபரிமாணம் இருக்கிறது - அதுவே நாம் வாழ்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் உலகம் - காலமும் உலகமும் இயங்காத நிலை ஒன்றிருக்கிறது என்பதை, அதுதான் நிர்வாண நிலை என்பதை, நாம் ஊகித்தறியலாம். 'நிர்வாண

நிலை' என்ற ஒருநிலை இருக்கிறதென்பதை நிரூபிக்கச் சான்றுகள் இல்லையென்றாலும், புத்த பெருமானின் சொற்கள் இன்றும் வாழ்கின்றன. அவர் கூறுகிறார்:

"பிறக்காத நிலை, உருவாகாத நிலை, ஆக்க முடியாத நிலை, கூட்டுப் பொருள்களால் உண்டாக்கப்படாத நிலை என்று ஒன்று இருக்கிறது. பிறக்காத நிலை என்று ஒன்றோ உருவாகாத நிலையோ, ஆக்கப்படாத நிலையோ, கூட்டுப் பொருள்களால் உண்டாக்கப்படாத நிலையோ என்று ஒரு நிலை இல்லையென்றால் இந்தப் பிறப்பிலிருந்து உருவான நிலையிலிருந்து, ஆக்கப் பட்ட நிலையிலிருந்து, கூட்டுப் பொருள்களால் உண்டாக்கப்பட்ட நிலையிலிருந்து தப்பிக்க முடியாது. ஆனால் பிறக்காத நிலை, உருவாகாத நிலை, ஆக்கப்படாத நிலை, கூட்டுப் பொருள்களால் உண்டாக்க முடியாத நிலை என்ற நிலை ஒன்று இருப்பதால், பிறப்பிலிருந்து, உருவான நிலையிலிருந்து, ஆக்கப் பட்ட நிலையிலிருந்து, கூட்டுப் பொருள்களால் உண்டாக்கப் பட்ட நிலையிலிருந்து தப்புவதற்கு ஒரு வழியிருக்கிறது." UD 80

அந்த நிலையை நாம் அடையும் போது நாம் அதை அறிந்து கொள்ளலாம். அதுவரை விசாரித்து உறுதிப் படுத்தக்கூடிய புத்தரின் போதனைகளைத் தொடர்ந்து முயல வேண்டும்.

வினா: நிர்வாண நிலைக்கு விருப்பமும், பேராசையும் இல்லாமல் இருக்க வேண்டும் என்றால், அந்த நிலையை அடையவேண்டுமென்ற ஆசையோடு எப்படி அந்த நிலையை அடைவது?

விடை: ஒரு நோக்கம் இருந்தால் அதை அடைய ஒருமுகத்தோடும் முயற்சியையும் சக்தியையும் பயன்படுத்த வேண்டும். நிர்வாண நிலையையும் அவ்வாறே அடைய முயற்சிக்க வேண்டும். ஆனால் நாளடைவில் நமது ஆழ்ந்த அறிவு அதிகரிக்க நமக்கு 'நிர்வாண நிலை என்பது ஒரு அடையக்கூடிய பொருள் அல்ல என்பதும் அது பேராசை அல்லாத, முழு அறிவடங்கிய, திருப்திகரமான, நிறைவேற்றம் உள்ள மன நிலை என்பதையும் அறிவோம். இதைப் புரிந்து கொண்டால் ஆசை தானாகவே குறைந்து மறைந்து விடும். பின் நாம் நிர்வாண நிலையை

அடைந்து விடுகிறோம்.

வினா: நான்காவது பேருண்மை என்பது யாது?

விடை: நான்காவது பேருண்மை துக்க நிவாரணத்திற்கான பாதையைக் காட்டுகிறது. இந்தப் பாதை மேன்மையான எட்டுப் பிரிவுகள் (அஷ்டாங்க மார்க்கம் ) அடங்கிய பாதை எனப்படும். அவை யாவை? நற் கருத்து, நல் நோக்கம், நற் பேச்சு, நன்னடத்தை, நல் தொழில் வகித்தல், நன் முயற்சி, நன் மனக் கவனம், நன் மன ஒருமைப்பாடு (மனத்தை ஒரு முகப்படுத்துதல்) என்பவையே. பௌத்த வாழ்க்கை என்பது இந்த எட்டையும் பயின்று பயிற்சி செய்து பூரணத்துவப் படுத்திக் கொள்வதுதான். இந்த அஷ்டாங்க மார்க்கத்தினைக் கவனித்தீர்களென்றால் வாழ்க்கையின் எல்லா அம்சத்தினையும் அது உட்படுத்துகிறது என்பது விளங்கும்: அறிவாற்றல், நன்நெறி, சமுதாயம், பொருளியல், மனோ தத்துவ இயல் ஆகிய எல்லாம் உள்ளடங்குகிறது. . எனவே ஒரு மனிதன் நல்ல வாழ்க்கை வாழ்வதற்கும் ஆன்மீக வளர்ச்சி பெருவதற்கும் தேவையான எல்லாம் அஷ்டாங்க மார்க்கத்தினுள் இருக்கின்றன.

* * * * * * * *

3. பௌத்தமும் கடவுள் கொள்கையும்

வினா: பௌத்தர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களா?

விடை: இல்லை. பௌத்தர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. இதற்குப் பல காரணங்களுள. புத்த பெருமான் நவீன கால சமூகவியலார்களைப் போலவும், உளநூல் அறிஞர்களைப் போலவும், சமயக் கருத்துகள், குறிப்பாகக் கடவுள் கொள்கைகள் மனக்கவலையிலிருந்து, பயத்திலிருந்து உருவானவையே எனக் கருதினார். புத்த பெருமான் கூறுகிறார்:

"பயத்தால் ஆட்கொள்ளப்பட்ட மனிதன், புனிதமான மலைகளையும், புனிதமானது என்று கருதிய தோப்புகளையும், புனிதமான மரங்களையும்,

கோவில்களையும் நாடிச் சென்றான்!" - தம்மப்பதம் 188

கற்கால மனிதன், தான் பயங்கரமான பகைமை சூழ்ந்த உலகில் வாழ்வதையுணர்ந்தான். பயங்கர மிருகங்களிடம் அச்சம், சரியான உணவு கிடைக்காத நிலை, தம் உடலில் ஏற்படும் காயங்கள், நோய்கள், இயற்கைச் சீற்றங்களான இடி, மின்னல், எரிமலை போன்றவற்றால் தொடர்ந்த ஆபத்து, பாதுகாப்பற்ற தன்மை. இச்சூழ்நிலையில் தான் மனிதன் தனக்கு வசதிகள் கருதியும் நல்ல காலங்கள் வேண்டு மென்பதற்காகவும், ஆபத்தான நேரங்களில் தனக்குத் தைரியத்தைத் தருவித்துக் கொள்ளவும், தவறு நடந்த நேரங்களில் தனக்கு ஆறுதலளித்துக் கொள்ளவும் கடவுள் என்ற கருத்தினை உருவாக்கினான். இன்றளவும் மக்கள் தமக்குச் சிரமம் அதிகரிக்கும் போதுதான், பெருஞ் சமயவாதிகளாக மாறுகின்றனர். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், கடவுள் நம்பிக்கைதான் தங்கள் சிரமங்களை எதிர்கொள்வதற்குத் தங்களுக்குச் சக்தியைத் தருவதாகக் கூறுவார்கள். ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கடவுளைப் பற்றி மட்டுமே கூறுவர். ஏனென்றால், மிகச் சிரமமான நேரம் ஒன்றில், அவர்கள் அந்தக் குறிப்பிட்ட கடவுளை வேண்டியதாகவும், அக்கடவுள் உதவியதாகவும் கூறுவர். இவையெல்லாம் புத்த பெருமானின் கருத்தான 'கடவுள் நம்பிக்கை என்பது பயத்தாலும், ஏமாற்றத்தாலும் ஏற்பட்டது' என்பதனை உறுதி செய்கின்றன. புத்த பெருமான் நமது பயத்துக்கான காரணங்களை அறிந்து கொள்ளச் சொன்னார்; பேரவாக்களைக் குறைத்துக் கொள்ளச் சொன்னார்; நம்மால் மாற்ற முடியாத செயல்களை, நிகழ்ச்சிகளைப் பொறுமையுடனும் துணிவுடனும் ஏற்றுக் கொள்ளச் சொன்னார்; அச்சத்தை, அவர் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்துகளால் அன்றி, பகுத்தறிந்து விளங்கிக் கொள்ளச் கூடிய வகையில், அவர் தவிர்த்தார்; போக்கினார்.

புத்த பெருமான் கடவுளை நம்பாததற்கான இரண்டாவது காரணம், இந்நம்பிக்கையை ஆதரிப்பதற்கான எவ்விதச் சான்றுகளும் இல்லாமையே. உலகில் எத்தனையோ சமயங்கள் உள. அவை ஒவ்வொன்றும் தமது சமயத்துக்கு மட்டுமே கடவுளின் கட்டளைகள் இருப்பதாகவும் கடவுளின் போதனைகளைத் தங்கள் புனித நூல்கள் மட்டுமே பாதுகாத்து வருவதாகவும் கடவுளின் இயற்கைத் தன்மையை அவர்கள் சமயம் மட்டுமே அறிந்திருப்பதாகவும் மற்றச் சமயங்களிடம்

அவை இல்லையெனவும், ஒவ்வொரு சமயத்தினரும் கூறுகின்றனர். சிலர் கடவுளை ஆணென்றும், சிலர் அதைப் பெண்ணென்றும், சிலர் பொதுவானது என்றும் கூறுவர். ஒவ்வொருவரும் தங்கள் கடவுள் இருப்பதை, இயங்குவதை நிரூபிக்கப் போதுமான சான்றுகள் இருப்பதாகக் கூறுவர். ஆனால், ஒவ்வொரு சமயத்தினரும், மற்ற சமயத்தினர் கூறும் இதே காரணங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பர். பல சமயங்கள் பல நூற்றாண்டுகளாகக் கைக்கொண்டு வரும் இந்நம்பிக்கையை நிரூபிக்க எவ்வளவோ முயன்றும் இன்று வரை உண்மையான, உறுதியான, சரியான முறையில் விளக்க அல்லது எதிர்த்து வாதாடக் கூடிய ஆதாரங்களை எவராலும் கொடுக்க அல்லது நிரூபிக்க முடிந்ததா? அதனால் தான் பௌத்தர்கள் இப்படிப்பட்ட எந்த முடிவுகளையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை.

புத்த பெருமான் கடவுளை நம்பாததற்கான மூன்றாவது காரணம், அப்படிப்பட்ட நம்பிக்கையே தேவையில்லை என்பதுதான். சிலர் இவ்வுலகம் உண்டானதற்கான காரணத்தை அறிந்து கொள்ளக் கடவுள் நம்பிக்கை அவசியம் என்கின்றனர். இது தேவையற்ற ஒன்று. அறிவியல், எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமளவுக்கு உலகம் எப்படி உண்டாகியது என்பதை, கடவுள் கொள்கையைத் தவிர்த்து, நிரூபித்துவிட்டது. ஒரு சிலர் மகிழ்ச்சியுடனிருப்பதற்கும் அர்த்தமுடன் வாழ்வதற்கும், கடவுள் நம்பிக்கை அவசியம் என்கின்றனர். ஆனால் உலகில் எத்தனையோ இலட்சக்கணக்கான பேர், பௌத்த சமயத்தினர், பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், சுயமாகச் சிந்திப்பவர்கள், மகிழ்ச்சிகரமான, பொருளுள்ள, உபயோககரமான வாழ்க்கையை நடத்துகின்றனரே!

சிலரோ மனிதர்கள் பலவீனமானவர்களாக இருப்பதால், தங்களுக்கே உதவிக்கொள்ளத் தங்களால் இயலாதென்றும், அதனால் கடவுள் நம்பிக்கை இருந்தால் எதையும் எதிர்க்கத் தங்களுக்குத் தேவையான சக்தி கிடைக்குமென்றும் கூறுகின்றனர். மறுபடியும் சாட்சியங்கள் அவர்கள் கூறுவதை மறுக்கின்றன. சிலர் தங்கள் இயலாமையையும், முட்டுக்கட்டைகளையும், இடையூறுகளையும், பெரும் தடங்களுக்கு மத்தியில் தங்கள் திடமான உள்மனத்தால் வெற்றி கொண்டதாகக் கூறுவதைக் கேட்கலாம். கடவுள் நம்பிக்கையின்றிச் சொந்த

முயற்சியாலேயே வெற்றி கண்டதாகவும் கூறுவார்கள்.

மனிதன் முக்தியடையக் கடவுள் அவசியமெனச் சிலர் கூறுவர். ஆனால், இவ்வாதம் முக்தி என்ற ஒன்றை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாக இருக்கும். இப்படிப்பட்ட கொள்கைகளைப் பௌத்தர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

புத்தபெருமான், ஒவ்வொரு மனிதனிடமும் தன் மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும், அளவற்ற அன்பைப் பொழியவும், மற்ற உயிர்களிடம் இரக்கம் காட்டவும், முழுமையாக விளங்கிக் கொள்ளக் கூடியதுமான சக்திகள் அவனிடம் இருக்கின்றன என்பதை அவர் அனுபவத்தால் அறிந்தார். புத்தபெருமான் நம் கவனத்தைச் சொர்க்கத்திலிருந்து நம் உள்ளத்துக்கே திருப்பி விட்டுவிட்டார்; நமது பிரச்னைகளுக்கு நாமே நம்மை அறிந்து முடிவுகள் காண ஊக்கப்படுத்தினார்.

வினா: அப்படிக் கடவுளர் இல்லையென்றால் இவ்வுலகம் எப்படி இங்கு வந்தது?

விடை: இவ்வினாவுக்கு விடையளிக்க எல்லாச் சமயங்களிலும் புராணக் கதைகளும் கட்டுக் கதைகளுமுள. மனிதனுக்கு ஒன்றுந்தெரியாத பழங்காலத்தில் இக்கதைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால், இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் இயற்பியலும், வானநூலும், நிலநூலும் உள்ள இக்காலத்தில், புராண இதிகாசக்கதைகள் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக, அறிவியல் ஆதாரங்கள் அவ்விடத்தைப் பிடித்துவிட்டன. கடவுள் கொள்கையைத் தவிர்த்து உலகம் எப்படி உண்டாகியது என்பதனை, அறிவியல்பூர்வமாக நிருபிக்கப்பட்டு விட்டது.

வினா: உலகம் உண்டான மூலக் கருத்தைப் பற்றிப் புத்தபெருமான் என்ன கூறுகிறார்?

விடை: அது மிகச் சுவையானது. உலகம் எப்படி உண்டாகியது என்ற புத்தபெருமானின் கருத்தும் அறிவியல் அறிஞர்களால் உலகம் எப்படி

உண்டாகியது என்ற கருத்தும் மிக நெருக்கமுடையவை. அகன்னா சூத்திரத்தில், புத்தபெருமான் உலகம் அழிந்து மீண்டும் இன்று சுழன்று கொண்டிருக்கும் நிலைக்கு வந்து கணக்கிடவியலா இலட்சக்கணக்கான ஆண்டு களாகின்றன என்று கூறுகிறார். எண்ணற்ற ஆண்டுகளுக்குப் பின் முதல் உயிரினங்கள் நீரின் மேற்புறத்தில் தோன்றியதாகவும் அதற்குமடுத்து இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு எளிய உயிரினங்களிலிருந்து கூட்டு உயிரினங்கள் தோன்றியதாகவும், அவர் கூறுகிறார். இச்செயல்களனைத்தும் தொடக்கமோ முடிவோ இன்றி, இயற்கைக் காரணங்களாலேயே இயக்கி வைக்கப்பட்டன.

வினா: கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லையெனக் கூறுகிறீர்கள். அப்படியென்றால் அதிசயங்களைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

விடை: அதிசயங்கள் நிகழ்வது கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்க எனப் பலர் நம்புகின்றனர். கடவுள் அருளால் ஒரு நோய் குணமாயிற்று என்று சிலர் கூறுவதை நாம் கேட்கிறோம். ஆனால், எந்த மருத்துவரிடமிருந்தோ, அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்தோ அப்படிப்பட்ட ஒரு சான்றிதழை நாம் கண்டதில்லை. அழிவிலிருந்து ஒருவர் அதிசயமாகக் காப்பாற்றப் பட்டார் என்று இரண்டாவது அல்லது மூன்றாவது நிலையிலிருந்து கேள்விப்பட்டவரிடமிருந்தே நாம் கூறக் கேட்கிறோம். ஆனால், என்ன நடந்தது என்பதை நேரில் கண்ட ஒருவரும் நம்மிடம் கூறியதில்லை. ஓர் உடல் ஊனமுற்றவன் நலமடைந்ததாக, வெறும் பிரார்த்தனையால் நலமடைந்ததாகக் கேள்விப் படுகிறோம். ஆனால், அதற்கான சாத்தியக் கூற்றை விளக்கும் சான்றிதழ் ஒரு மருத்துவரோ, நர்சோ நமக்கு அளித்ததில்லை. குருட்டுத் தனமான நம்பிக்கைகள், 'இரண்டாவது நபர் கூறினார்; ஒருவர் சொல்ல நான் கேள்விப்பட்டேன்' போன்ற வதந்திகள் சரியான சான்றுகள் ஆகா.

இருந்தாலும் சில சமயங்களில் விவரிக்க முடியாத நிகழ்ச்சிகள் ஏற்படுவது உண்மை தான். அப்படி ஏற்படும் அல்லது நிகழும் நிகழ்ச்சிகளை நம்மால், விளக்க இயலாத தன்மையை வைத்து, அந்நிகழ்ச்சி ஏற்பட்டது கடவுள் செயலால் தான் என்பது மடமை.

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், நமது அறிவு இன்னும் முழுமை அடையவில்லை என்பது தான். நவீனகால மருந்துகள் கண்டுபிடிக்கும் முன்பு, நோய், மக்களைத் தண்டிப்பதற்காகவே கடவுள் அனுப்பினார் என நம்பினர்; ஆனால் நோய்கள் ஏற்படும் காரணத்தைக் கண்டுபிடித்து, அதற்கான மருந்துகளையும் கண்டுபிடித்தவுடன் இன்றைய மனிதன், ஒரு நோய் கண்டவுடன் அதற்கான மருந்தை அருந்தி நோயைக் குணப்படுத்திக் கொள்கிறான்.

காலப்போக்கில், நோய் உண்டாவதற்கான காரணத்தைக் கண்டுபிடித்ததைப் போல், உலகத்தைப் பற்றிய நமது அறிவும் முழுமை பெற, விவரிக்க முடியாத நிகழ்ச்சிகள் நிகழும் காரணங்களை நாம் கண்டுபிடித்து விடக்கூடும்.

வினா: ஆனால் பெரும்பாலான மக்கள் ஏதாவதொரு தோற்றத்தில் கடவுளை நம்புகிறார்களே, அது உண்மையாகத் தானே இருக்க வேண்டும்?

விடை: இல்லை. ஒரு காலத்தில் உலகம் சமமட்டமான தரையாக இருந்ததாக அனைவரும் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த நம்பிக்கை தவறானது என்று நிரூபிக்கப் படவில்லையா?. ஒரு கொள்கை உண்மையானதா, இல்லையா, என்பதை நிரூபிக்க, அக்கொள்கையைப் பின்பற்றுபவர்கள் அதிகமானவர்களா, குறைவானவர்களா என்று பார்ப்பது தவறு; ஒரு கொள்கையின் உண்மையான தன்மையை அறிய, அதை நிரூபிக்கக் கூடிய சான்றுகளை வைத்தே அக்கொள்கையைப் பற்றி நாம் முடிவெடுக்க வேண்டும்.

வினா: கடவுள் இருப்பதற்குச் சாட்சி எங்கு பார்த்தாலும் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனரே. இயற்கையின் அழகு, பல பகுதிகளைக் கொண்ட மனித உடலின் சிக்கலான அமைப்பு - இதெல்லாம் ஒரு மேலோங்கிய அறிவு படைத்த அன்புள்ளம் கொண்ட கடவுளைக் குறிக்கிறதாகக் கூறுகின்றனரே?.

விடை: இயற்கையின் மறுபக்கத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்தக் கூற்றின்

அடிப்படையே நொறுங்கிப்போய் விடுகிறது - தொழுநோய், புற்றுநோய்க்கிருமிகள், ஒட்டுண்ணிப் புழுக்கள், இரத்தத்தை உறிஞ்சும் பூச்சிகள், "பிளேக்" என்னும் கொள்ளை நோய் பரவச் செய்யும் எலிகள் - போன்றவையும் இவ்வுலகில் காணப்படுகின்றனவே? ஒரு மேன்மையான நுண்ணறிவு உள்ள கடவுள் ஏன் இவ்வாறு துன்பமும் துயரமும் விளைவிப்பவைகளை உருவாக்க வேண்டும்? மேலும் பூகம்பங்களினாலும், வரட்சியாலும், வெள்ளத்தாலும், சூனாமிகளாலும் எத்தனை உயிர்கள் பலியாகியிருக்கின்றன என்பதையும் எண்ணிப் பாருங்கள். அன்பான கடவுள் உலகத்தை உருவாக்கினாரென்றால் இது போன்ற கொடுமைகளை ஏன் உருவாக்க வேண்டும்?

வினா: நான் பௌத்தரானால் இவ்வுலகில் மிகவும் தனிமையாக இருப்பேன். கடவுளை நம்பும் ஒருவருக்கு எந்நேரமும் அவரிடம் சென்று, பிரச்சனைகளைக் கூறி அவரது பாதுகாப்பையும் உதவியையும் நாடலாம். கடவுள் நம்பிக்கை மேலான ஆறுதல் தருவதாக நான் நம்புகிறேன்.

விடை: கடவுளை நம்புவோர் அவரால் உதவப்படுவதாகவும் பாதுகாக்கப்படுவதாகவும் நினைக்கின்றனர். உண்மையில் அப்படி நடப்பதில்லை. அவர்கள் நம்பிக்கையின் காரணமாக ஆறுதலும் தன்னம்பிக்கையும் உண்டாவதாக நினைத்தாலும் அது அவர்கள் மனத்திலிருந்துதான் வருகிறது. தெய்வச்செயலால் இல்லை. கடவுளை நம்புவோருக்கு நம்பாதவரை விட விபத்துக்கள் குறைவாக நிகழ்வதாகவோ, நீண்ட நாள் வாழ்வதாகவோ, புற்று நோய் குறைந்து காணப்படுவதாகவோ, தேர்வுகளில் சிறப்பாகச் செய்வதாகவோ, பணக்காரர்களாக வாழ்வதாகவோ, அல்லது வேறு எந்த விதத்திலும் மாறுபட்டு இருப்பதாகவோ எந்தச் சான்றுகளும் இல்லை. ஒரு பெரும் விமானத்தில் 600 பேர் பயணம் செய்வதாக வைத்துக் கொள்வோம். அவ்வப்போது நிகழ்வதைப்போல, அவ்விமானம் விழுந்து நொறுங்கினால், அதில் உள்ள 600 பேரும் மரணமடைவர். கடவுளை நம்புபவரும் நம்பாதவரும் ஒரே நிலையில் தான் இருப்பர்.

நம் அனைவரிடமும் வாழ்க்கைப் பிரச்சனைகளைச் சமாளிக்க தேவையான மனத் திடனும் அறிவும் இருக்கிறது. நாம் இத் திறமைகளை

வளர்த்து, ஊக்குவித்துக் கொள்ள வேண்டும். ஆதாரமில்லாத நம்பிக்கைகளைச் சார்ந்திருக்கக் கூடாது.

வினா: அப்படிப் பௌத்தர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையென்றால், நீங்கள் எதைத்தான் நம்புகிறீர்கள்?

விடை: நாங்கள் கடவுளை நம்புவதில்லை; ஏனென்றால் நாங்கள் மனிதர்களை நம்புகிறோம். ஒவ்வொரு மனிதரும் உயர்வானவர், அரிதானவர் எனக் கருதுகிறோம்; ஒவ்வொருவரிடமும் ஒரு புத்தராக மாறக் கூடிய சக்தி இருக்கிறதென நம்புகிறோம்; ஒரு முழுமையான மனிதனாக அவன் மாறமுடியுமென நம்புகிறோம். அறியாமையையும், பகுத்தறிவற்ற கொள்கைகளைக் கடந்து, எவை, எப்படி இருக்கின்றனவோ, அவற்றின் உண்மை நிலைகளை அறிந்து கொள்ள முடியுமென நம்புகிறோம்; நாங்கள் வெறுப்பு, கோபம், தீய எண்ணம், பொறாமை போன்ற குணங்களை, அன்பு, இரக்கம், பொறுமை, பெருந்தன்மை முதலிய எண்ணங்களால் மாற்றமுடியுமென நம்புகிறோம்; ஒவ்வொரு மனிதனும் முயன்றால், அதனைச் சரியான முறையில் அறிந்துள்ள ஒரு பௌத்தரால் வழி நடத்தப்பட்டால், உண்மையை அறிந்து கொள்ளும் சக்தி அவர்களிடமே இருக்கிறதென நம்புகிறோம்;

ஒருவரும் நம்மைக் காப்பாற்றுவதில்லை; நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். வேறு யாராலும் ஒன்றும் செய்ய இயலாது; முடியாது; பல புத்தர்களால் நமக்கு தெளிவாகக் காட்டப்பட்ட சரியான வழிகளில் நாமே நடக்கவேண்டுமெனப் புத்தபெருமான் கூறுகிறார்.

* * * * * * * *

4. ஐந்து நல்லொழுக்கப் போதனைகள்

வினா: மற்ற சமயத்தினர் அவர்களது கொள்கைகளை, எது சரி, எது தவறென்ற கொள்கைகளை, ஒழுக்கங்களை, அவர்களது கடவுள் அல்லது

கடவுளரின் கட்டளைகளிலிருந்து ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், கடவுள் நம்பிக்கையற்ற பௌத்தர்களாகிய நீங்கள் எது சரி, எது தவறென எப்படிப் புரிந்து கொள்வீர்கள்?

விடை: பேராசை, வெறுப்பு, ஏமாற்றங்களிலிருந்து உருவான எண்ணங்கள், சொற்கள், செயல் முதலியன நிர்வாண நிலையிலிருந்து மிகத்தொலைவில் அழைத்துச் செல்லும் தீயவையாகும்.

அன்பு, அறிவு முதலியவற்றிலிருந்து உருவாகும் எண்ணங்கள், சொற்கள், செயல்கள் முதலியன நிர்வாண நிலையை அடைய உதவும் நல்லவையாகும்.

கடவுளை மையமாகக் கொண்ட சமயங்களில் எது சரியானது, எது தவறானது, என்பதை அறிய அச்சமயவாதிகள் சொல்வதை நாம் செய்ய வேண்டும்.

ஆனால் மனிதனை மையமாகக் கொண்ட பௌத்த சமயத்தில் எது சரி, எது தவறு என்பதை அறிய நம்மை முழுமையாகப் புரிந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் வேண்டும். இவ்வாறு நம்மை உணர்ந்து கொள்வதால் எழும் நன்னெறி ஒரு கட்டளையினால் உருவாக்கப்படும் நன்னெறியைவிட உறுதியானவையாகவும் பலம் வாய்ந்தவையாகவும் இருக்கும்.

ஆகையால், எது சரி, எது தவறென்பதையுணரப் பௌத்தர்கள் மூன்று செயல்களைப் பார்க்கின்றனர். அவையாவன: செய்கையின் பின் உள்ள நோக்கம் (பாலிமொழியில் சேதனா) அந்தச் செய்கையின் காரணமாக நமக்கு கிடைக்கும் பலன் அல்லது விளைவு, மற்றும் அந்த செய்கையின் காரணமாகப் பிறருக்குக் கிடைக்கும் பலன் அல்லது விளைவு.

எண்ணம் நல்லதாக இருந்தால் (மற்றவருக்குக் கொடுக்கும் தயாள குணம், அன்பு, மெய்யறிவு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தால்), அச்செயல் எனக்கு உதவுஞ் செயலாக இருந்தால், (என்னை மற்றவர்களுக்கு அதிகம் உதவச் செய்யும் குணம், அன்பு காட்டும் எண்ணம், மெய்யறிவை வளர்க்கும் செயல்) அது மற்றவர்களுக்கும் உதவிகரமாக இருந்தால் (அவர்களை அதிக அறஞ்செய்யத் தூண்டும்

குணம், அவர்களின் அன்பை அதிகரிக்கும் எண்ணம், அவர்கள் மெய்யறிவை வளர்க்கும் செயல்) அச்செயல்களும், வினைகளும் ஆரோக்கியமானவை, சிறந்தவை, ஒழுக்கமுடையவை என்று கூறலாம்.

இவற்றுள் சில மாறுபாடுகளும் உண்டு; சில சமயங்களில் நான் நல்ல எண்ணத்தோடு சில செய்கைகளைச் செய்யலாம்; ஆனால் அச்செய்கை எனக்கும் நன்மையளிக்காமல், பிறருக்கும் நன்மை யளிக்காமற் போகலாம். சில சமயங்களில் என் எண்ணம் நற்செயலிலிருந்து வேறுபடலாம். எனினும் அச்செயல் பிறருக்கு நன்மையை விளைவிக்கலாம். சில நேரங்களில் நான் நல்ல எண்ணத்தோடு செயல்படலாம்; அது எனக்கு மட்டுமே நன்மை விளைவித்துவிட்டுப் பிறருக்குத் துன்பத்தை ஏற்படுத்தலாம். இப்படிப்பட்ட சமயங்களில், என் செயல்கள் 'கலந்தவை' (பாலிமொழியில் விதிமிஸ்ஸா) எனப் புத்தர் கூறுகிறார் - அதாவது சிறிது நன்மையும் சிறிது தீமையும் கலந்த செய்கை.

எப்போது குறிக்கோள்கள் தவறாக இருந்து அதனால் செய்யும் செயல் எனக்கும் மற்றவருக்கும் நன்மையளிக்கவில்லையோ, அப்படிப்பட்ட செயல்கள் தவறானவை. எப்போது குறிக்கோள்கள் சரியானவையாக இருந்து எனக்கும் மற்றவர்க்கும் நன்மையளிக்கும் செயல் எதுவோ அச்செயல் முழுவதும் நற்செயலாகும்.

வினா: அப்படியென்றால் பௌத்தத்தில் முறையான ஒழுக்க நெறிகளுக்கென ஒரு தொகுப்பு இருக்கிறதா?

விடை: ஆம், பௌத்தத்தில் ஒழுக்க நெறிகளுக்குத் தொகுப்பே இருக்கிறது. புத்தர் அருளிய ஐந்து நல்லொழுக்கப் போதனைகளுமே பௌத்த ஒழுக்க நெறிகளுக்கு அடிப்படையாகும்.
முதல் நெறி மற்ற உயிரினங்களைக் கொல்வதையும் அவற்றுக்குத் துன்பம் விளைவிப்பதையும் தவிர்ப்பதாகும்.
இரண்டாவது நெறி களவைப் - பிறர் பொருளைக் கவர்வதைத் தவிர்ப்பதாகும்.
மூன்றாவது நெறி, சோரம் போவதைத் தவிர்ப்பதாகும்;
நான்காவது நெறி பொய்மையைத் தவிர்ப்பதாகும்;

ஐந்தாவது நெறி போதை தரும் பொருள்களைத் தவிர்ப்பதாகும்.

வினா: ஆனால், சில சமயங்களில் பிற உயிர்களைக் கொல்லுவது நமக்கு நன்மையளிப்பதாக இருக்கும். சான்றாக நோயைப் பரப்பும் கிருமிகளைக் கொல்வது, அல்லது யாரேனும் உங்களைக் கொல்ல வந்தால் அவரைக் கொல்லுவது நன்மையளிக்கலாமே?

விடை: இது உங்களுக்கு நன்மையளிக்கலாம். ஆனால், அவற்றுக்கோ அல்லது அந்த மனிதருக்கோ எப்படி நன்மையளிக்கும்? உங்களைப் போலவே அவையும் வாழ விரும்புபவை தானே. நோயைப் பரப்பும் கிருமிகளைக் கொல்ல வேண்டும் என்ற உங்கள் எண்ணத்தில் உங்கள் மீது அக்கறையும் (எனவே நல்ல எண்ணம்) அவற்றின் மீது அருவருப்பும் (எனவே தீய எண்ணம்) கலந்து உள்ளது. இச்செயல் உங்களுக்கு நன்மையளிக்கலாம் (நல்லது) ஆனால், நோய் பரப்பும் கிருமிகளுக்கு அது நன்மை அளிக்காது (கெட்டது). சில சமயங்களில் இவ்வாறு கொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், அச்செயல் ஏற்புடைய செயலன்று.

வினா: பௌத்தர்களாகிய நீங்கள் எறும்புகளைப் பற்றியும் மூட்டைப் பூச்சிகளைப் பற்றியும் கூடக் கவலைப்படுகிறீர்களே!

விடை: பௌத்தர்கள் வேறுபாடு காட்டாது அனைவரிடமும் தயையும், கருணையும் காட்டிப் பேதமின்றி நேசிக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் உலகத்தை ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையாகக் காண்கின்றனர். அங்கு ஒவ்வொரு பொருளும், உயிர் வாழ்வனவும் தமக்கென ஓர் இடம் பெற்றிருக்கிறது; அவற்றுக்கான தனித்தனிச் செயல்களுமிருக்கின்றன.

எனவே இயற்கையின் மென்மையான சமநிலையைப் பாதிக்கும் எச்செயலைப் புரிந்தாலும் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

இயற்கையை முழுமையாக அழித்து ஒவ்வொன்றையும் கடைசிச் சொட்டு உள்ளவரை உறிஞ்சி, திரும்ப எதையும் கொடுக்காமல் அவற்றை வென்று அடக்கும் இன்றைய கலாச்சாரத்தைப் பாருங்கள்! விளைவு? இயற்கையே புரட்சி செய்கிறது! காற்றே நஞ்சாக மாறுகிறது! ஆறுகள் தூய்மை கெட்டு

வற்றி விடுகின்றன! எவ்வளவோ அழகான பல விலங்கு இனங்கள், செடி கொடி வகைகள் அழிந்து போய் விட்டன! மலைச்சாரல்கள் வெறுமையாக மண்ணரித்துச் செல்லப்பட்டுக் கிடக்கின்றன. தட்ப வெப்பநிலைகள் கூட மாறி விடுகின்றன. மக்கள் அழிவையும் உருக்குலைப்பதையும் கொல்லுவதையும் தீவிரமாக்காமலிருந்திருந்தால், இந்நிலை உருவாகியிருக்காது. நாம் அனைவரும் எல்லா உயிர்கள் மீதும் சற்றுக் கருணை காட்டும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனையே முதல் நல்லொழுக்கப் போதனை கூறுகிறது.

வினா: கருச்சிதைவைப் பற்றிப் பௌத்தம் என்ன கூறுகிறது?

விடை: புத்தப்பெருமான் கருத்தரிப்பிலிருந்தோ அல்லது அதன் பின் மிக விரைவிலோ உயிர் துவங்குவதாகக் கூறுகிறார். எனவே கருச்சிதைவு ஓர் உயிரை எடுப்பதற்குச் சமானமாகும்.

வினா: ஆனால் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டோ அல்லது அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தை அங்கக் குறைபாட்டுடனோ பிறக்கப்போகிறது என்பது தெரியவந்தால் அக்கருவைக் கலைப்பது சரியான முடிவல்லவா?

விடை: மற்ற குழந்தைகளைப் போலவே கற்பழிக்கப்பட்டதனால் பிறக்கும் குழந்தைக்கும் வாழ்வதற்கும், அன்பையும் பாசத்தையும் எதிர்ப்பார்ப்பதற்கும் உரிமை உள்ளது. உயிர் கொடுத்த தந்தை செய்த குற்றத்திற்காக அக்கருவை அழிப்பது முறையல்ல. உருவக் குலைவுடனோ மன வளர்ச்சி குன்றியோ குழந்தை பிறக்குமேயானால் அது பெற்றோர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தருவது இயல்பே. ஆனால் அத்தகைய கருவைச் சிதைப்பது சரியென்றால் அங்கக் குறைபாட்டுடனோ அல்லது மனவளர்ச்சி குன்றியோ உள்ள சிறுவர்களை அல்லது முதியவர்களைக் கொல்வதும் சரியென்று ஆகிவிடாதா? தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில், கருச்சிதைவு செய்வது கருணையுள்ள மாற்று வழியாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில், பெரும்பான்மையான கருச்சிதைவு செய்வதன் நோக்கம் - பிரசவத்தால் வாழ்க்கையில் சிக்கல் ஏற்பட்டுவிடலாம்

என்பதாலும், தர்ம சங்கடமான சூழ்நிலையில் கருவுற்றதாலும், அல்லது பெற்றோர் குழந்தை பெறுவதைத் தள்ளிப்போட முடிவு செய்வதாலும் தான். பௌத்தர்களுக்கு உயிரைச் சிதைப்பதற்கு இவை சரியான காரணங்களாகத் தோன்றாது.

வினா: தற்கொலை செய்து கொள்பவர்கள், முதல் நல்லொழுக்கப் போதனையைக் கடைப்பிடிப்பதில்லை என்று கூறலாமா?

விடை: ஒரு மனிதன் இன்னொருவனைக் கொன்றால் அதற்குப் பயம், கோபம், வெறி, பேராசை போன்ற தீய உணர்ச்சிகளே காரணமாக இருக்கும். ஒருவன் தற்கொலை செய்து கொள்வதும் அதே காரணங்களாலும் அல்லது அது போன்ற தீய உணர்ச்சிகளான மனச்சஞ்சலம், தோல்வி மனப்பான்மை போன்ற காரணங்களாலும் தான். தீய உணர்ச்சிகளை மற்றவர் மீது காட்டுவது கொலையில் முடிகிறது. தீய உணர்ச்சிகளைத் தம் மீதே காட்டுவது தற் கொலையில் முடிகிறது. இதனால் தற்கொலை செய்து கொள்பவர்கள் முதல் நல்லொழுக்கப் போதனையை மீறுகின்றவரே ஆவர்.

அதற்காகத் தற்கொலை செய்ய நினைப்பவர்களிடமோ அல்லது செய்ய முயற்சித்தவர்களிடமோ அவர்கள் தவறு செய்து விட்டதாகச் சொல்லத் தேவையில்லை. அவர்களுக்குத் தேவை நமது உதவியும், ஆறுதலுமே. தற்கொலையினால் அவர்களது பிரச்சனை தீராது; அது தொடரவே செய்யும்; தற்கொலையினால் அவர்கள் பிரச்சனையிடம் சரணடைந்து விடுகின்றனர், ஆனால் பிரச்சனை முடிவுறப் போவதில்லை என்பதை அவர்களுக்குப் புரியவைப்பதுதான் முக்கியம்.

வினா: இரண்டாம் நல்லொழுக்கப் போதனையைப் பற்றிக் கூறுங்கள்.

விடை: இந்த ஒழுக்கத்தை ஏற்றுக்கொண்டால் நமதல்லாத எப்பொருளையும் எடுப்பதைத் தவிர்க்கிறோம். பேராசையைக் கட்டுப்படுத்தி மற்றவர் உடைமைக்கு மதிப்புத் தருவது தான் இரண்டாம் நல்லொழுக்கப் போதனை.

வினா: மூன்றாம் நல்லொழுக்கப் போதனை தவறான பாலியல் உறவுகளில் ஈடுபடக் கூடாது என்று கூறுகிறது. தவறான பாலியல் உறவுகள் என்றால் என்ன?

விடை: வஞ்சித்தோ அல்லது செல்வாக்கைப் பயன்படுத்தியோ இரகசியங்களை வெளியிடுவதாக அச்சுறுத்தியோ அல்லது பலாத்காரப்படுத்தியோ ஒருவரை நம்முடன் உடலுறவு கொள்ள வைத்தால் அது தவறான பாலியல் உறவு எனலாம். விபசாரமும் ஒரு வகைத் தவறான பாலியல் உறவே. ஏனெனில் ஒருவரை மணம் புரியும் போது அவரிடம் விசுவாசத்தோடு இருப்போம் என்று சத்தியம் செய்கிறோம். விபசாரத்தில் ஈடுபட்டால் அந்த சத்தியத்தை மீறி நமது வாழ்க்கைத்துணையை ஏமாற்றுகிறோமல்லவா? உடலுறவு என்பது இருவரிடையே உள்ள நெருங்கிய நட்பையும் அன்பையும் உறுதி செய்வதாக அமைய வேண்டும். அப்படி அமைந்தால் அது நமது மனத்திற்கும் மன உணர்வுகளுக்கும் நன்மை புரிகிறது.

வினா: திருமணத்திற்கு முன் உடலுறவு கொள்வது ஒரு வகையான தவறான பாலியல் உறவா?

விடை: இருவருக்குமிடையே அன்பும், அன்னியோன்னிய உடன்பாடும் இருந்தால் அது தவரான பாலியல் உறவு அல்ல. ஆனால், உடலுறவின் முக்கிய நோக்கமே இனப்பெருக்கம் செய்வது தான். அப்படி இருக்க, திருமணமாகாத பெண் கர்ப்பமுற்றால், பல சிக்கல்கள் ஏற்படக்கூடும். எனவே சிந்தித்து முடிவெடுக்கும் திறனுடையோர் பலர் உடலுறவை திருமணத்திற்குப் பிறகு வைத்துக் கொள்வதுதான் சரி என்றே கருதுகின்றனர்.

வினா: திருமணமான ஒருவன் திருமணமாகாத ஒரு பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்தால் அவன் மூன்றாம் நல்லொழுக்கப் போதனையைக் கடைப் பிடிப்பதில்லை. ஆனால் அவளும்

கடைபிடிப்பதில்லை என்று கூற முடியுமா?

விடை: ஒரு செயல் சரியானதா தவறானதா என்று தீர்மானிப்பது செய்வோரின் நோக்கம் தான். அந்தப் பெண்ணுக்கு அவன் திருமணம் ஆனவன் என்பது தெரியவில்லையென்றால் அவள் நல்லொழுக்கப் போதனையை முரிப்பதில்லை. ஆனால் அவளுக்கு அவன் திருமணமானவனாக இருக்ககூடும் என்ற ஐயம் இருந்தும் தன் பொறுப்பைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்தோடு அதைப் பற்றி அவனிடம் கேட்காமலே இருந்தால் நல்லொழுக்கப் போதனையை மீறவில்லையென்றாலும் நல்ல எண்ணத்தோடு நடந்து கொள்ளாததால் நன்மையற்ற கர்ம வினைப்பயனைச் செய்தவளாகிறாள். முன் சொன்னது போல எந்த ஒரு செயலிலும் நூறு சதம் நல்லதும் இல்லை; நூறு சதம் கெட்டதும் இல்லை. நாம் செய்யும் பல செய்கைகள் நல்லதும், கெட்டதும், இரண்டும் அல்லாததுமாகக் கலந்து இருக்கின்றன. நாம் எப்போதும் நேர்மையோடும், உண்மையாகவும் ஏமாற்றாமலும் நடந்து கொள்ளவே முயற்சிக்க வேண்டும்.

வினா: குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பற்றிப் பௌத்தம் என்ன சொல்கிறது?

விடை: சில சமயங்கள் உடலுறவு கொள்வது இனப் பெருக்கத்திற்கு மட்டுமே என்று கருதுவதால், வேறு காரணங்களுக்கு உடலுறவு கொள்வது நெறிகெட்டவை என்றும், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளும் தவறு என்றும் கூறுகின்றன. பௌத்தம் உடலுறவுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்கிறது. இனப் பெருக்கத்திற்காக, கேளிக்கைக்காக, இருவரிடையே அன்பையும் பாசத்தையும் காண்பிக்கும் செயலாகவும் அது இருக்கலாம். அதனால் கருச்சிதைவைத் தவிர, எல்லாவிதக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளையும் பௌத்தம் ஏற்றுக்கொள்கிறது. ஏன், இன்றைய வரம்பற்ற மக்கட் பெருக்கத்தினால் ஏற்படும் பெரும் பிரச்சினைகளின் காரணமாகப் பௌத்தம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை ஒரு வரமாகவே கருதி வரவேற்கிறது என்று கூடச் சொல்லலாம்.

வினா: பொய் சொல்லுவது பற்றி என்ன கூறுகிறீர்கள்? பொய் சொல்லாது வாழ்வது சாத்தியமாகுமா?

விடை: சமூகத்தில் பொய் சொல்லாமல் வாழவோ ஒரு வணிகத்தைச் செய்யவோ முடியாது என்ற நிலை நிலவுமானால், அத்தகைய திகைப்பூட்டும் நேர்மையற்ற, வெறுக்கத்தக்க முறையை மாற்றி அமைத்தாக வேண்டும். பௌத்தர்கள் நடைமுறைக்குச் சாத்தியமானவற்றைச் செய்வதிலும், பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பதையே விரும்புகின்றனர்.

வினா: பூங்கா ஒன்றில் அமர்ந்திருக்கும் போது உங்களைக் கடந்து பதற்றத்தோடு ஒருவன் ஓடுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு சில நொடிகளுக்குப்பின் கத்தியுடன் ஓடி வரும் இன்னொருவன் முதலில் வந்தவன் எத்திசையில் சென்றான் என்று கேட்டால், அவனிடம் உண்மையைச் சொல்வீர்களா அல்லது பொய் சொல்வீர்களா?

விடை: இரண்டாம் ஆள் முதலில் வந்தவனுக்குத் தீங்கு விளைவிப்பான் என்ற ஐயம் எழுந்தால், ஒரு அறிவுள்ள பொறுப்புள்ள பௌத்தர் பொய் சொல்வதற்குத் தயங்க மாட்டார். ஏற்கெனவே கூறியிருப்பதைப் போல், ஒரு செயல் சரியானதா தவறானதா என்பது செய்வோரின் நோக்கத்தை வைத்துத்தான் தீர்மானிக்கப் படுகிறது. இது போன்ற சூழ்நிலைகளில் ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கம், பொய் சொல்லக் கூடாதென்ற நோக்கத்தைவிடப் பல மடங்கு நன்மை பயப்பதாகும். பொய் சொல்லியோ, குடித்தோ, ஏன் திருடியோ கூட ஒரு உயிரைக் காப்பாற்ற முடியுமானால் அதைச் செய்ய வேண்டும். பின்னர் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்காததற்காக முறையான ஈடு செய்து கொள்ளலாம். ஆனால் உயிர் போய்விட்டால் அதைத் திரும்பப் பெற முடியாதல்லவா?

ஆனால் முன்னர் சொன்னது போல நமது வசதிக்கேற்ப, நினைத்தபோதெல்லாம் நல்லொழுக்கப் போதனைகளை முரித்துக் கொள்ளத் தரப்பட்ட அனுமதிச் சீட்டாக இதைக் கருதக் கூடாது. நல்லொழுக்கப் போதனைகளை மிகவும் கவனத்துடன் கடைப் பிடிக்க

வேண்டும். மிக அரிய சூழ்நிலைகளில் மட்டுமே அதை விட்டு விலகலாம்.

வினா: ஐந்தாம் நல்லொழுக்கப் போதனை நம்மை மது அருந்தவோ, பிற போதைப் பொருட்களைப் பயன் படுத்தவோ கூடாது எனக் கூறுகிறது. ஏன்?

விடை: பொதுவாக மனிதர்கள் சுவைக்காக மது அருந்துவதில்லை. அவர்கள் தனிமையில் குடிப்பது, தங்கள் பதட்டத்தைத் தணித்துக் கொள்ளவே. மற்றவர்களுடன் சேர்ந்து குடிப்பது பெரும்பாலும் அவர்களுடன் ஒத்துப் போகவே; சிறிதளவு குடிப்பது கூட நினைவை மறக்கடித்துக் கவனத்தைப் பிறழச் செய்கிறது. அதிகமாகச் சாப்பிட்டு விட்டாலோ, அவனையே பாழ்படுத்தி விடுகிறது. ஐந்தாம் நல்லொழுக்கப் போதனையை மீறினால் மற்ற அனைத்து ஒழுக்கப் போதனைகளையும் மீறுவது எளிதாகிவிடுகிறது என்று பௌத்தர்கள் கூறுவார்கள்..

வினா: ஆனால், சிறிதளவு மது குடிப்பது, அந்த ஐந்து ஒழுக்கங்களில் ஒன்றான போதைப் பொருளைத் தவிர்ப்பதைப் பாதிக்காதே? அல்லது பாதிக்குமா? குடிப்பது சிறிதளவுதானே?

விடை: ஆமாம். குடிப்பது சிறிதளவுதான். உங்களால் இந்தச் சிறிதளவு கூட ஒழுக்கத்தைக் காப்பாற்ற முடியாவிட்டால் உங்கள் வாக்குறுதியிலும் தீர்மானத்திலும் வலிமை இராதல்லவா?

வினா: புகைப் பிடிப்பது ஐந்தாம் நல்லொழுக்கப் போதனையை மீறுவதாகுமா?

விடை: புகைப் பிடிப்பது உடலுக்குக் கெடுதலை விளைவித்தாலும் மனதுக்குச் சிறிய அளவில் தான் பாதிப்பு இருக்கும். புகை பிடித்தாலும் ஒருவர் விழிப்புடனும், கவனத்துடனும், தன்னுணர்வோடும் தான் இருப்பார். ஆகவே புகைப் பிடிப்பது ஏற்புடைய செயல் அன்றெனினும், அது நல்லொழுக்கப் போதனைகளை மீறும் செயல் அல்ல.

வினா: அந்த ஐந்து நல்லொழுக்கப் போதனைகளும் எதிர்மறையானவை! அவை இவற்றைச் செய்யாதே என்றுதான் கூறுகின்றன. இவ்விவற்றைச் செய் என்று கூறவில்லயே?

விடை: அந்த ஐந்து நல்லொழுக்கப் போதனைகளும் பௌத்த சமய அடிப்படை ஒழுக்க நெறிகளாகும். அவை பௌத்தத்தின் முழுமையான போதனைகளல்ல. நாம் நமது தீய வழக்க ஒழுக்கங்களையுணர்ந்து, அவற்றைத் தவிர்ப்பதற்குக் கடுமையாக முயல்கின்றோம். அதற்காகவே, அவ்வைந்து ஒழுக்கங்களும் போதிக்கப்பட்டன. தீமை செய்வதை நிறுத்திவிட்டோமேயானால், நன்மை செய்ய ஆரம்பித்து விடுவோம். சான்றாக நான்காவது நல்லொழுக்கப் போதனையை எடுத்துக் கொள்ளுங்கள். புத்தபெருமான் கூறுகிறார், "பொய் சொல்வதைத் தவிர்ப்பதிலிருந்து ஆரம்பியுங்கள்" என்கிறார். பிறகு நாம் உண்மை பேசவேண்டும்; பண்புடன் பேசவேண்டும்! மரியாதையாகப் பேசவேண்டும்; மேலும் பேசவேண்டிய நேரத்தில் மட்டுமே பேச வேண்டும்.

புத்த பெருமான் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"ஒருவன் பொய்யுரையைத் தவிர்த்து விட்டாலே, அவன் உண்மை பேசுபவனாகிவிடுகிறான்; நம்பகமானவனாகி விடுகிறான், பொறுப்பானவனாகி விடுகிறான்; எவரும் அவனை நம்பி வாழலாம். அவன் இவ்வுலகத்தை ஏமாற்ற மாட்டான். தீய எண்ணங் கொண்ட வார்த்தைகளை அவன் என்று விட்டு விட்டானோ, அன்றே அங்கு பேசுவதை இங்கும், இங்கு பேசுவதை அங்கும் புனைந்து, புறங்கூற மாட்டான். அவன் பிரிந்திருப்பவர்களை ஒன்று சேர்ப்பான்; நண்பர்களை மேலும் நெருங்கிய நண்பர்களாக்குவான்; ஒற்றுமையே அவனது மகிழ்ச்சி; ஒற்றுமையே அவனது தெளிவு; ஒற்றுமையே அவனது அன்பு; அவனது பேச்சுக்களின் நோக்கமே இவைதாம்: கடுஞ்சொற்களைத் தவிர்த்தல்; அவனது சொற்கள் குற்றமற்றவை; குறையற்றவை; காதுகளுக்கு இனிமையானவை; எல்லாராலும் ஏற்று கொள்ளக் கூடியவை; உள்ளத்தைத் தொடுபவை; நாகரிகமானவை; எல்லாராலும் விரும்பப்படுபவை; பயனற்ற பேச்சைத் தவிர்த்துச் சரியான நேரத்தில், சரியானவற்றை மட்டுமே அறத்தைப் பற்றியும் ஒழுக்கத்தைப்பற்றியும் பேச வேண்டியவை பற்றிமட்டுமே பேசுவான். அவன் பேசுஞ் சொற்கள்

புதையலைப் போன்று காக்க வேண்டியவை; காலத்துக்குகந்தவை; சரியான காரணங்களுடையவை; எதை விளக்க வேண்டுமோ, அதைமட்டும் மிகச்சரியாக விளக்குபவை. "

* * * * * * * *

5. மறு பிறப்பு

வினா: மனிதன் எங்கிருந்து வந்தான்? எங்கு செல்கிறான்?

விடை: இவ்வினாவுக்கு மூன்று தகுதியான விடைகள் உள. கடவுள் அல்லது கடவுளர் மீது நம்பிக்கை யுள்ளவர்கள் நம்புவது, ஒரு மனிதனைக் கடவுள் படைக்கு முன் இருப்பதில்லை; கடவுளின் எண்ணப்படிதான் அவரால் அவன் உலகத்துக்கு அனுப்பப் படுகிறான். பிறகு, அவன் நம்பிக்கையின்படியோ, செயலின்படியோ உலகத்தில் வாழ்கிறான். கடைசியாக அவன் மோட்சத்துக்கோ, நரகத்துக்கோ செல்கிறான் என்பதாகும். மனிதப் பண்பாட்டியல் நூலார், மற்றும் அறிவியல் அறிஞர் இயற்கைக் காரணங்களால் கருத்தரித்து, உருவாகி ஒவ்வொரு மனிதனும் பிறப்பதாகவும், பிறந்து, வாழ்ந்து பிறகு மறைகின்றான் என்றும் கூறுகின்றனர். பௌத்தம் இவ்விரு கூற்றுகளையுமே ஏற்றுக் கொள்வதில்லை.

முதல் கூற்று பல ஒழுக்கப் பிரச்னைகளை ஏற்படுத்துகின்றது. ஒரு நல்ல கடவுள் நம் ஒவ்வொருவரையும் படைத்திருந்தால், பலரை ஏன் பயங்கரமான அருவருப்பான தோற்றத்துடன் படைத்தார் என்பதற்கான காரணத்தைச் சரியாக விளக்குவது கடினமாக இருக்கிறது; அல்லது எத்தனையோ குழந்தைகள் கருவிலேயே கலைந்து விடுகின்றன; சில இறந்தே பிறக்கின்றன. கடவுளை நம்புபவர்களின் விவரிப்பில் இன்னொரு பிரச்னை என்னவென்றால், ஒருவன் அறுபது அல்லது எழுபது ஆண்டுகள் உலகத்தில் செய்த தவறான செய்கைக்கு அவன் நரகத்தில் என்றென்றும் துன்புற வேண்டு மென்பது நியாமற்றதாகத் தோன்றுகிறது. அதைப் போலவே அறுபது எழுபது ஆண்டுகள் மாசற்ற வாழ்வு வாழ்ந்தவர்களுக்கு மோட்சலோகத்தில் நித்திய பேரின்பம் கிடைக்கும் என்று கூறுவதும்

தகுதிக்கு மேற்பட்ட பரிசாகவே தோன்றுகிறது.

இரண்டாவது விரிவான கணிப்பு முதல் விவரக் கணிப்பைவிட, அறிவியல் பூர்வமாக ஏற்புடையாதாக இருக்கிறது. இருந்தாலும், அவற்றில் பல முக்கியமான வினாக்கள் பதிலளிக்கப்படாமலேயே விடப்பட்டுள்ளன. இரண்டு உயிரணுக்கள் (தாய் தந்தையிடமிருந்து) இணைவதாலே, அதுவும் ஒன்பதே மாதங்களில், எப்படி ஆச்சரியப்படும்படியான சிக்கலான நினைவு உணர்வுகள் வளரமுடியும்? PARAPSYCHOLOGY (எதிர்காலத்தை ஊகிக்கும் தன்மை, மறுபிறப்பு போன்றவை) என்னும் இயல் அறிவியலின் ஒரு கிளையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் இக்காலத்தில் TELEPATHY (மற்றவர் மனதில் உள்ள எண்ணங்களைத் தெரிந்து கொள்ளும் இயல்பு) போன்ற அற்புத நிகழ்வுகளுக்கு உலகாயத வாதத்தினரிடம் திருப்தியான விளக்கம் கிடைக்கவில்லை.

மனிதன் எங்கிருந்து வந்தான், எங்கு செல்கிறான் என்பதற்குப் பௌத்தம் திருப்திகரமான விளக்கத்தைத் தருகிறது. நாம் இறக்கும்போது, மனம் வாழ்ந்த போது இருந்த எண்ணங்கள், விருப்பங்கள், தகுதிகள், குணாதிசயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியவாறு, ஒரு கருவில் மீண்டும் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. பிறகு அது பிறந்து, முற்பிறவியின் குணாதிசயங்களாலும். இப்பிறவியின் சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டுத் தனி மனிதனாக வளர்கிறது. அவனுடைய ஆளுமை அவன் நோக்கத்தோடு எடுக்கும் முயற்சியாலும், பெறும் கல்வி, பெற்றோரின் வளர்ப்புமுறை, சமுதாயச் சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றப் படுகிறது. வாழ்ந்து கடைசியில் மறுபடியும் மரணம் என்னும் முடிவு உருவாகி, ஒரு புதிய கருவில் தன்னை நிலைநாட்டிக்கொள்கிறது.

மறு உரு எடுக்க வேண்டும் என்ற தாகமும், பேதமையுமே இந்தப் பிறப்பும், இறப்பும், மறுபிறப்பும் தொடர்வதற்கான காரணங்களாகும்.

பேதைமையும், ஆசையும் முடிவுக்கு வந்த பின் மறுபிறப்பெடுக்காமல் மனம் இறுதியாக அடையும் நிலையே பிறப்பறுக்கும் நிர்வாணம் என்னும் இறுதிநிலை! இந்த நிர்வாண நிலையை அடைவதே பௌத்தத்தின் இறுதிக் குறிக்கோளும், வாழ்க்கையின் நோக்கமும் ஆகும்.

வினா: மனம் அல்லது நினைவு எப்படி ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்குச் செல்லும்?

விடை: மனத்தை வானொலியின் அலைகளுடன் ஒப்பிடுங்கள். வானொலி அலைகள் வார்த்தைகளாகவோ, இசையாகவோ இருப்பதில்லை. அவை இடைவெளிகளுடன் கூடிய வேறுபட்ட அலைவரிசைகளடங்கிய சக்திகள். விண்வெளியில் பயணிக்கும் அவற்றை வானொலிப் பெட்டி மூலம் தேர்ந்தெடுத்துச் சொற்களாகவும் இசையாகவும் அனுபவிக்கிறோம்; மனமும் இப்படிப்பட்டதே. மரணத்தில் மன சக்தி அந்தரத்தில் பயணம் செய்து ஒரு கருவினால் ஈர்க்கப்பட்டு அதனுடன் கலக்கிறது. அப்படிக் கலந்த கரு வளர்ந்து, மூளையில் மையமிட்டு அங்கிருந்து பரப்பப்பட்டுப் புது மனிதனாக உருவெடுக்கிறது.

வினா: ஒருவன் மறுபிறப்பெடுக்கும் போது ஆத்மா அல்லது சுயம் தானே ஓர் உடலிலிருந்து மறு உடலுக்குச் செல்கிறது?

விடை: புத்தரின் போதனை அப்படி இல்லை. நித்திய ஆத்மா அல்லது சுயம் என்பதில் நம்பிக்கை வருவதற்கு நமது ஆணவமே காரணம் என்று புத்தர் கூறுகிறார். ஆணவத்தால் நாம் ஏமாற்றப்படுகிறோம். இந்த நம்பிக்கை, ஆணவத்தை மேலும் ஊக்குவிக்கிறது. நித்திய ஆத்மா என்று எதுவும் இல்லை என்பதை உணரும் போது ஆணவமும், அகந்தையும், போலித் தற்பெருமையும், சுயநலம் மட்டுமே கருதும் இயல்பும் மறைந்துவிடுகின்றன. தனிமனிதன் ஒரு கெட்டியான (மாற்றமில்லாத) பாறை இல்லை. தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நீரோடை.

வினா: இது முரண்பாடாகத் தெரிகிறதே? ஆத்மா என்று ஏதும் இல்லை என்றால் ஒரே தன்மை (மாறாத நமக்கென்ற ஓர் அடையாளம்) என்றும் ஏதும் இருக்க முடியாது. ஒரே தன்மை என்று ஏதும் இல்லையென்றால் நாம் மறுபிறப்பெடுப்பதாக எப்படிக் கூற முடியும்?

விடை: 95 வருடங்களாகத் தொடர்ந்து உள்ள ஒரு கால்பந்து அணியை

எடுத்துக்கொள்ளுங்கள். அத்தனை வருடங்களாக நூற்றுக்கணக்கானோர் அந்தக் குழுவில் இணைந்து ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் விளையாடிய பிறகு விலகியிருப்பார்கள். அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் குழுவில் நியமிக்கப் பட்டிருப்பார்கள். முதலில் விளையாடியவர்கள் இன்று குழுவில் உறுப்பினராக இருக்கமாட்டார்கள். அவர்கள் இறந்து போயுமிருப்பார்கள். ஆரம்பத்தில் இருந்த அணியினர் இன்று அணியில் இல்லையென்றாலும் 'அந்த அணி' இன்னமும் இருக்கிறது என்று சொல்லலாம் அல்லவா?

அணியின் உறுப்பினர்கள் மாறிக்கொண்டே தான் இருக்கிறனர். அதே சமயம் 95 வருடங்களுக்கு முன்பு இருந்த அணி தான் இன்றும் இருக்கிறது. விளையாட்டு வீரர்களும் தொடர்ந்து அணியில் இருக்கின்றார்கள். ஆனால் அந்த அணியின் மாறாத தன்மை என்ன? அதன் பெயர், பழைய வெற்றிகளின் நினைவுகள், விளையாடுபவர்களுக்கும் இரசிகர்களுக்கும் அணியின் மீதுள்ள உணர்ச்சிகள், அணியினர் மத்தியில் உள்ள கூட்டுறவு போன்றவைதான்.

தனி நபர்களும் அது போலத்தான்.

மனமும் உடலும் எந்நேரமும் மாறிக்கொண்டே இருந்தாலும் மறுபிறப்பெடுக்கும் ஒருவர் இறந்தவரின் தொடர்ச்சியே. மாறாத எதுவும் தொடர்ந்து மறுபிறப்பெடுப்பதில்லை. அந்த நபரின் தனித்தன்மையைக் குறிக்கும் நினைவுகளும், மனப் போக்கும், குணாதிசயங்களும், மனப் பழக்க வழக்கங்களும், மனம் சம்பந்தமான இயல்புகளும் தான் மறுபிறப்பெடுக்கின்றன.

வினா: சரி. நாம் முன்பே பிறந்திருந்தோமேயானால், ஏன் முன் வாழ்க்கைகளை நினைவு படுத்த முடிவதில்லை?

விடை: சிலரால் முடிகிறது. அவர்களின் இளம் வயதிலாவது அவர்களால் நினவுகூற முடிகிறது. அதிகமானோரால் நினைவுகூற முடிவதில்லை என்பது உண்மை தான். தாயின் வயிற்றில் இருக்கும் ஒன்பது மாதங்களில் பழைய நினைவுகள் எல்லாம் அழிந்து விடுகின்றனவோ என்னவோ! அல்லது ஒன்பது மாதம் உணர்ச்சிகளே இல்லாமல் இருந்து விட்டுப் பிறந்தவுடன் புலன்களால் ஏற்படும் பல புதிய உணர்ச்சிகளால் அதிர்ச்சி

ஏற்பட்டுப் பழைய நினைவுகள் அழிக்கப் பட்டிருக்கக்கூடும்.

வினா: ஒருவன் எப்பொழுதும் மனிதனாகவே பிறப்பானா?

விடை: இல்லை. பல ஆட்சி மண்டலங்களுள் ஒன்றில் மறுபிறப்பெடுக்கலாம். சிலர் சொர்க்கத்தில் பிறக்கலாம்; சிலர் நரகத்தில் பிறக்கலாம்; சிலர் பசிப்பிணி மிக்க பிசாசுகளாகப் பிறக்கலாம்! சொர்க்கமென்றால், அது தனியானதொரு உலகமில்லை! ஓர் இடமில்லை. அது ஒரு நிலை. அங்கு நுண்ணிய உடலும் மனமும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றன. சில சமயங்கள் சொர்க்கமென்ற நிரந்தரமானதோர் உலகம் இருப்பதாகத் தவறாக எண்ணி, அதனை அடையக் கடினமாக உழைக்கக் கூறுகின்றன. ஆனால் அது தவறு. எல்லா நிலைகளையும் போலச் சொர்க்கமென்பதும் நிலையற்ற ஒன்று. எப்பொழுது அங்கு ஒருவனது வாழ்வு முடிகிறதோ அவன் மறுபடியும் மனிதனாகப் பிறக்கலாம்.

நரகம் என்பதும் சொர்க்கம் போலவே ஓர் இடமன்று; இருக்கும் நிலை! அங்கு நுண்ணிய உடலும் மனமும் கவலையையும் வருத்தத்தையும் மட்டுமே அனுபவிக்கும். பசிப்பிணி மிக்க பிசாசென்றால், அதுவும் ஒரு நிலையே. அங்கு நுண்ணிய உடலும் மனமும் திருப்தியற்ற நிலையையும் தொடர்ந்து எல்லாவற்றுக்கும் ஏங்கும் நிலையையும் அனுபவிக்கும்.

ஆக மோட்சலோக வாழ்க்கை அனுபவமென்பது முக்கியமாக மகிழ்ச்சியே. நரகலோக வாழ்க்கை அனுபவமும், பிசாசுகளின் வாழ்க்கையனுபவ மென்பதும் முக்கியமாக வேதனையே! மனிதர்கள் பொதுவாக இவ்விரண்டையும் கலந்தே அனுபவிக்கின்றனர்.

ஆக மனித மண்டலத்துக்கும் மற்ற மண்டலங்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், உடலின் உருவத்தோற்றமும், மன உணர்ச்சிகளின் தரமுமேயாகும்.

வினா: நாம் எங்கு பிறப்போமென்பதை எது முடிவு செய்கிறது?

விடை: நாம் எப்படிப்பட்டவராக மறு பிறவி எடுப்போம் என்பதற்கான பல காரணிகளுள் மிக முக்கியமான காரணி ‘கம்மா’ என்னும் வினைப்பயனே! 'கம்மா' என்னும் பாலி மொழிச் சொல்லுக்குச் செயல், வினை என்பவையே பொருளாகும். உடலாலும், பேச்சாலும், அறிவோடும் நோக்கத்தோடும் செய்வதுதான் வினை. இதைச் சரியாக விளக்க வேண்டுமென்றால், இப்பிறப்பில் நாம் எப்படி வாழ்கிறோமோ அவையனைத்தும் நாம் கடந்த காலத்தில் நினைத்தவை, செயல்பட்டவைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே இப்பொழுது நாம் செய்யும் செயலும் வினையும் எதிர் காலத்தில் பிரதிபலிக்கும்!

கண்ணியமான, எல்லாராலும் விரும்பப்படும் ஒரு மனிதன் சொர்க்கமண்டலத்தில் அல்லது இவ்வுலகில் மகிழ்ச்சி நிறைந்த அனுபவங்களை உணரும் மனிதனாகப் பிறக்கலாம். ஆவலும், கவலைகளும் அல்லது மிதமிஞ்சிய கொடுமையான குணமுடைய ஒருவன் நரகமண்டலத்தில் அல்லது இவ்வுலகில் வேதனை தரும் அனுபவங்களை அதிகமாக உணரும் மனிதனாகப் பிறக்கலாம். ஒவ்வொரு பொருள் மீதும் பேராசை கொண்டு, பயங்கர ஏக்கங் கொண்டு, ஆசைத் தீயால் எரிந்து, திருப்தியே அடையாத ஒருவன், பிசாசு உலகில் அல்லது எல்லாவற்றுக்கும் ஏங்குகிற தேவை தேவையென அலைகிற மனிதனாகப் பிறக்கலாம். இப்பிறப்பில் மனதில் எவ்வித வழக்க ஒழுக்கங்களைப் பலமாக வளர்த்துக் கொள்கிறானோ அவையே அவனுக்கு அடுத்த பிறவியிலும் பிரதிபலிக்கும். பெரும்பாலான மக்கள் மனிதர்களாகவே மறுபிறப்பெடுக்கின்றனர்.

வினா: நரகத்தில் வாழ்வதைப் பற்றிக் கூறினீர்கள். பௌத்தர்கள் நரகத்தில் நம்பிக்கையுள்ளவர்களா என்ன?

விடை: நீங்கள் நரகம் என்று சொல்வது, அப்படி ஒரு இடம் இருப்பதாகவும், நீதிஅளிக்கும் கடவுள் என்று ஒருவர் அங்கு இருந்து, அவர் மீது நம்பிக்கை இல்லாதவர்களை என்றென்றும் நரக வேதனையை அனுபவிக்க வைப்பார் என்றும் நினைத்தால், அப்படி ஒரு நரகத்தை பௌத்தர்கள் நம்புவதில்லை. அப்படி ஒரு கருத்தே பழி வாங்கும் மனத்தில் தான் தோன்றக்கூடும் என்று பௌத்தர்கள் கூறலாம். 'நிரயா' மற்றும் 'அபயா' என்ற பாலி மொழிப்

பௌத்தச் சொற்கள் பொதுவாக நரகம் என்று மொழிபெயர்க்கப் படுகின்றன. ஆனால் அவற்றின் சரியான பொருள் 'தேய்வு/சரிவு' அல்லது 'இழப்பு/நட்டம்' என்பது தான். கொடுமையான குணமுடைய அல்லது சுயநல முள்ளவர்கள் தங்களுக்கென ஒரு மனநிலையை ஏற்படுத்திக்கொள்கின்றனர். இதனால் உருவாகும் அனுபவங்கள் மேலதிகமாக வேதனையான அனுபவங்களாகவே இருக்கும். புத்தர் கூறுகிறார்:

"முட்டால் நரகம் கடலுக்கடியில் இருப்பதாகக் கூறுகிறான். நரகம் வேதனையான அனுபவத்திற்கு ஒரு பெயர் என்று நான் கூறுகிறேன்"

உங்களுக்கு ஒரு உதாரணம் தருகிறேன். விசர் பிடித்தவன் எங்கும் எதிலும் அபாயத்தையும், சதியினையும், வஞ்சனையையும் காண்கிறான். உண்மையில் அப்படி எதுவும் இல்லை. அவன் மன நிலைதான் அவனை எப்போதும் சந்தேகங்கொள்ளவும், அச்சங்கொள்ளவும், கவலைப்படவும் செய்கிறது. வேறு யாரும் அவன் மீது தீர்ப்புத் தந்து வேதனையை அனுபவிக்கச் செய்யவில்லை. அவனே உருவாக்கிய உலகம் இது. மேலும் இந்த நிலையில் உள்ளவர் தாங்களாகவே இந்த மன நிலையிலிருந்து மேம்படுத்திக் கொள்ளவும் முடியும். ஆகவே பௌத்தச் சிந்தனைப்படி நரகம் ஒரு நிரந்தர இடம் இல்லை. நமக்கு எப்போதும் நரகத்திலிருந்து விடுபட இன்னொரு வாய்ப்பு உள்ளது.

வினா: நம்மை நமது வினைப்பயன் மட்டுமே தீர்மானிக்க முடியாது. நாம் அதை மாற்றலாம்!

விடை: ஆம்; வினைப்பயனையும் நாம் மாற்றலாம்; பௌத்த நோக்கமே இதுதான். அதனால் தான், புத்தபெருமான் நமக்களித்த அஷ்டாங்க மார்க்கமெனும் எட்டு நேர்மையான வழிகளில் ‘முழுமையான நல்முயற்சி’ என்று ஒன்றிருக்கிறது. வினைப்பயனை மாற்றுவதென்பது நாம் எவ்வளவு நேர்மையாக இருகிறோம், நாம் நம் சக்தியை எவ்வளவு செலவு செய்கிறோம், நம் ஒழுக்க வழக்கங்களில் நாம் எவ்வளவு உறுதியாக இருக்கிறோம் என்பனவற்றைப் பொறுத்திருக்கிறது. ஆனால், ஒரு சிலர் எவ்வித முயற்சியுமின்றி முந்தைய பழக்கங்களின் காரணமாக,

அவற்றை மாற்ற நினைக்காது, தீய வினைப்பயன்களுக்குப் பலியாகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் தீய செயல்களை மாற்றாவிட்டால் இறுதிவரை துன்பமே அடைவர். தீய செயல்கள் எவ்வளவு நாள் நீடிக்கிறதோ, அதை மாற்றுவதற்கும் நீண்டகாலம் அவர்கள் சிரமப்பட வேண்டும். இதனைப் பௌத்தர்கள் அறிந்துள்ளபடியால், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி மகிழ்ச்சியற்ற துன்பந்தரும் எண்ணத்தால் ஏற்படும் வழக்க ஒழுக்கங்களைத் தவிர்த்து எண்ணத்தாலும் செயலாலும் நல்வினை தரக்கூடிய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

மனத்தின் வழக்க ஒழுக்கங்களைத் திருத்தப் பயன் படும் முறைகளில் தியான முறையும் ஒன்று. கட்டுப்பாட்டோடு பேசுவதும், பேசாதிருப்பதும், நடந்து கொள்வதும் மற்ற முறைகளாம்.

ஒரு பௌத்தனின் முழு வாழ்க்கையும் அவன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி நேர்மையான வாழ்வுக்குப் பயிற்சியளித்து மனத்தை விடுதலை செய்வதேயாம் . சான்றாக நீங்கள் பொறுமை யானவராகவும் இரக்க சிந்தனையுள்ளவராகவு மிருந்தால், அவை உங்கள் முற்பிறப்பின் குணமே. அந்த மென்மை இப்பிறப்பிலும் தொடர்கிறது. அக்குணங்களை இப்பிறப்பில் பலப்படுத்தி நல்ல வளர்ச்சியடையச் செய்தோமேயானால், அவை எதிர்காலத்தில் மேலும் பலப்பட்டு மேன்மையுறச் செய்யும். இப்படிக் கூறுவது நீண்ட நாட்களாகக் கடைப்பிடித்து வரும் நல்ல பழக்க வழக்கங்களை மீறுவது கடினம் என்பதை நம்மால் சுலபமாக அவதானிக்க முடிகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டது.

இப்பொழுது நீங்கள் பொறுமையைக் கடைபிடிப்ப வராகவும் இரக்க சிந்தனையுள்ளவராகவு மிருந்தால் உங்களை எவராலும் சுலபத்தில் குழப்பிவிட முடியாது. நீங்களும் எவர்மீதும் வெறுப்படைய மாட்டீர்கள். மற்றவர்க்கும் உங்களைப் பிடிக்கும். அதுவே உங்களை மிக மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

மீண்டும் நாம் வேறொரு சான்றினைக் காண்போம். கடந்த காலப் பழக்கத்தின் காரணமாக நீங்கள் மென்மையாகவும், இரக்க சிந்தனை யுள்ளவராகவும் பொறுமையைக் கடைப்பிடிப்ப வராகவும் இருப்பதாக

வைத்துக் கொள்வோம். இப்பிறப்பில் நீங்கள் அந்த நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளத் தவறிவிடுகிறீர்கள் என்றால், அவை மெல்ல மெல்ல அழிந்து எதிர்காலப் பிறவியில் முழுமையாகவே இல்லாது போய்விடலாம். இங்கு பொறுமையும் இரக்கமும் பலவீனமாகி விடுகின்றன. இப்பிறப்பிலோ, அடுத்த பிறப்பிலோ முன்கோபம் கொள்ளுதல், கோபம், கொடுமை போன்றவையெல்லாம் வளர்ந்து, உருவாகி, மகிழ்ச்சியற்ற நிலைகளை உற்பத்தி செய்யும்.

இறுதியாக மற்றொரு சான்றினைப் பார்ப்போம். உங்களுடைய முற்பிறவியின் வழக்க ஒழுக்கங்களால் இப்பிறவியில் முன்கோபக்காரராக எடுத்ததற்கெல்லாம் கோபப்படுபவராக இருந்தால், அஃது உங்களுக்கே மகிழ்ச்சியற்ற தன்மையைக் கொடுக்கும். ஆகையால், அவ்வழக்க ஒழுக்கங்களை, உங்கள் முயற்சியாலேயே மாற்றிக் கொள்ள வேண்டும். அவற்றை நற்குணங்களால் நிரப்புங்கள். நீங்கள் முயற்சி செய்து அத்தீய குணங்களை முழுமையாக நீக்கி விட்டீர்களேயானால், மகிழ்ச்சியற்ற தன்மையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். முன்கோபமும், உங்களிடமிராது. அக்குணாதிசயங்களை நீங்கள் அறவே ஒழிக்காது சிறிது மட்டும் குறைத்துக் கொள்வீரகளேயாயின், அவை மறுபடியும் மறுபிறவியில் தலைதூக்கச் சந்தர்ப்பமிருக்கிறது. அடுத்தப் பிறவியில் மீண்டும் சிறிது முயற்சி எடுத்து முழுமையாக அக்குணங்களை அறவே ஒழித்துவிட்டால் தீய வினைப்பயனிலிருந்து நீங்கள் விடுதலை பெறலாம்.

வினா: தடங்களிலா எண்ணம் (தன்னிச்சை, சுவாதீனம், விரும்பியவாறு செய்தல்) இருப்பதாகப் பௌத்தம் போதிக்கிறதா?

விடை: மனித அனுபவங்களைப் பற்றி மூன்று தவறான கருத்துக்கள் இருப்பதாகப் புத்தர் கூறுகிறார். 1. அனைத்தும் காரணமின்றி ஒரு நோக்கம் இல்லாமல் நடக்கிறது, 2. அனைத்தும் முழுமுதற்கடவுளின் எண்ணப்படி நடக்கிறது, 3. அனைத்தும் கடந்த கால வினையின் பயனாக நடக்கிறது.

ஏற்கனவே நாம் சொன்ன படி வினையின் பயன் நம்மைப் பாதிக்கிறது. இன்றைய சூழ்நிலைக்கு அடிப்படைக் காரணம் அது. ஆனால் அதுவே தீர்மானிப்பதில்லை. (பனிக்கட்டி எப்படி உருவானது? ஒரு சமயத்தில்

தண்ணீர் இருந்திருக்க வேண்டும். இல்லையேல் இப்போது பனிக்கட்டி இருந்திருக்காது. ஆனால் தண்ணீர் இருப்பதால் அது தானாகப் பனிக்கட்டி ஆகிவிடுமா? குளிர்ச்சியும் தேவையல்லவா?)

மனித எண்ணம் என்பது குதிரை மீது சவாரி செய்வது போன்றது. குதிரை ஒரு குறிப்பிட்ட திசையில் செல்ல, ஒரு குறிப்பிட்ட வேகத்தோடு செல்ல, ஒரு குறிப்பிட்ட வாறு அடி எடுத்து வைக்க ( சீரான ஓட்டம்/குதித்து ஓடும் ஓட்டம்) நாம் விரும்புவோம். ஆனால் குதிரைக்கு வேறு நோக்கம் இருக்கலாம். நமக்கு அனுபவமும் தன்னம்பிக்கையும் இருந்தால் குதிரையை அடக்கி நாம் விரும்பியவாறு செலுத்தலாம். குதிரை நமக்கு அனுபவமில்லை என்பதையோ நாம் பலவீனமாக இருப்பதையோ உணர்ந்து கொண்டால், நம்மைப்பற்றிக் கவலை கொள்ளாமல் அது தான் விரும்பியதையே செய்யும்.

அதேசமயம் நமது விருப்பம் ஒரு பக்கம் இருக்க குதிரையின் திறமைக்கும் சக்திக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? நாம் குதிரை 50 கி.மீ வேகத்தில் செல்ல வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் குதிரைக்கு அந்த அளவு சக்தி இல்லாவிட்டால் நாம் எவ்வளவு தான் அதை விரட்டினாலும் அந்த வேகத்தில் அது போகப் போவதில்லை. எனவே குதிரைச் சவாரி விரும்பியவாறு இனிதாய் அமைய அது பலதரப்பட்ட காரணங்களால் கட்டுப்பட்டிருக்கிறது. அது போலத்தான் மனித எண்ணமும். மனித எண்ணம் மட்டுமல்ல, எந்தச் சுய விருப்பமும் மற்ற எல்லாவற்றையும் போலப் பிற காரணங்களால் கட்டுப்பட்டுள்ளது தான்.

ஆனால் நாம் எந்த அளவு நமது தீர்மானிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்கிறோமோ, எந்த அளவு பொறுமையையும் விடாமுற்சியையும் கடைப் பிடிக்கிறோமோ அந்த அளவு நாம் நம்மையே சிறந்த முறையில் மாற்றம் செய்துக்கொள்ள முடியும். இதுவே புத்தரின் அஷ்டாங்க மார்க்கமெனும் எட்டு நேர்மையான வழிகளின் நோக்கம்.

வினா: இந்தப் பிறவியில் சந்தித்த மக்களை அடுத்த பிறவியிலும் சந்திக்க முடியுமா?

விடை: ஆம். முடியும். ஒருமுறை பல ஆண்டுகளாகச் சேர்ந்து வாழ்ந்து, ஒருவருக்கொருவர் அன்பு கொண்டிருந்த ஒரு பெரியவரும் அவரது மனைவியும் புத்தரைச் சந்தித்தனர். இவ்வாழ்வில் இணைந்து வாழ்ந்தது போலவே அடுத்த பிறவியிலும் ஒன்றாகவே இருக்க விரும்புவதாகக் கூறினார்கள். 'ஒருவர்க்கொருவர் அன்போடு இருந்தால், அதே அளவு நம்பிக்கையும், பண்பும், தயாள குணமும், புரிந்துணர்வும் அவர்களிடையே இருந்தால் மறுபிறப்பிலும் அவ்விருவரும் சேர்ந்திருக்க முடியும்' என்று புத்தர் அவர்களுக்குக் கூறினார்.

இருவர் சந்திக்கும்போது அவர்களுக்குள் உடனே பிரியமும் பாசமும் உண்டாகி அது நீண்ட ஆழந்த அன்புக்கும் நட்புணர்வுக்கும் வழிகோலினால் ஒரு பௌத்தர் அவர்களுக்கு முற்பிறவியிலேயே ஒரு ஒட்டுதல் இருந்திருக்கலாம் என்று சொல்வார். மறுபிறப்பிற்கு மற்றுமொரு சாதகமான அம்சம் இது. மக்களிடையே உள்ள இணக்கம் மறுபிறவியிலும் தொடரக்கூடும்.

வினா: மறுபிறப்பைப் பற்றி நீங்கள் அதிகம் கூறி விட்டீர்கள். ஆனால், அப்படி இறப்புக்குப்பின் மறுபிறப்பு நிகழ்ந்ததற்கான சான்றுகள் ஏதுமுளவா?

விடை: அறிவியல் பூர்வமான சான்று மட்டுமின்றிப் பௌத்தர்களின் மறுபிறப்பு நம்பிக்கைக்கு மட்டுமே  சான்றுகள் உள. மோட்சலோகம் இருக்கிறதென்பதை நிரூபிக்க ஒரு துளி சான்றுமில்லை. மேலும், இறந்தபின் ஏதுமில்லை என்று சொல்பவர்களிடம் சான்றுகள் கிடைக்கப் போவதுமில்லை.

கடந்த முப்பது ஆண்டுகளில் உளநூலறிஞர்கள் பலர் பல அறிக்கைகளைப் படித்து ஆய்ந்து கண்டதில் பலர் முற்பிறப்பின் நினைவுகளை மிகத் தெளிவாகக் கூறுவதைக் கேட்டறிந் திருக்கின்றனர். சான்றாக, இங்கிலாந்தில் ஓர் ஐந்து வயதுச் சிறுமி தனது முற்பிறப்பின் தாய் தந்தையரை நினைவில் வைத்திருப்பதாகக் கூறினாள். முற்பிறப்பில் அவளோடு வாழ்ந்தவர்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை மிகத்தெளிவாகக் கூறினாள். உளநூலறிஞர்கள் அவளைத் தனியாக

அழைத்து நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கேட்டனர். அவற்றுக்கெல்லாம் அவள் சரியான விடைகளைக் கூறினாள். அவள் ஸ்பெயின் நாட்டில் ஒரு சிற்றூரில் வாழ்ந்ததாகக் கூறினாள்; அந்தக் கிராமத்தின் பெயரைக் கூறினாள்; தெருவின் பெயரைக் கூறினாள்; அவள் வீட்டுக்கும் அக்கம்பக்கத்திலிருந்தவர்களின் பெயர்களையெல்லாம் கூறினாள்; பின் அவள் கண்ணீர்மல்கத் தான் ஒரு கார்விபத்தில் படுகாயமுற்று இரண்டு நாட்களுக்குப் பிறகு இறந்ததையும் கூறினாள். இவ்விவரங்களைச் சோதித்த பொழுது, அவையனைத்தும் உண்மையே என்பது தெரிந்தது. ஸ்பெயின் நாட்டில் அவள் கூறிய பெயருடைய கிராமம் இருந்தது. அந்த ஐந்து வயதுச் சிறுமி விவரித்த தெருவும் இருந்தது; அவள் வாழ்ந்த வீடுமிருந்தது. அங்கு மேலும் விசாரித்ததில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு, ஒரு 23 வயதுப் பெண் ஒருத்தி கார் விபத்தில் இறந்ததும் தெரியவந்தது.

இப்பொழுது, இதுவரை ஸ்பெயின் நாட்டுக்கே செல்லாத ஓர் ஐந்து வயதுச் சிறுமிக்கு, இங்கிலாந்தில் வாழ்பவளுக்கு, இவ்விவரங்கள் எப்படித் தெரிந்தன? இது மட்டும் ஓர் நிகழ்ச்சியன்று; இப்படி எத்தனையெத்தனையோ. விர்ஜீனியா பல்கலைக் கழகத்தின் உளவியல் துறைப் பேராசிரியர் திரு. அயன் ஸ்டீவன்சன் (Ian Stevenson of University of Virginia's Department of Pshycology) இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகளைத் தாம் எழுதிய புத்தகத்தில் விவரிக்கிறார். (See Twenty Cases Suggestive of Re-incarnation and Cases of Re-incarnaion type. University Press of Virginia, Charlotteville USA 1975)

பேராசிரியர் ஸ்டீவன்சன் அங்கீகரிக்கப்பட்ட அறிவியல் அறிஞர். அவர் சுமார் இருபத்தைந் தாண்டுகள் ஆராய்ச்சி செய்து முற்பிறப்பின் நினைவுகளை இப்பிறப்பிலும் சொல்வோர் பலரைக் கண்டு எழுதிய நூல், மறுபிறப்பை நம்பும் நமது பௌத்த சமயத்தினர்க்கு மிகப்பலம் வாய்ந்த சான்றாக விளங்குகிறது.

வினா: முற்பிறப்பின் நினைவுகளை இப்பிறப்பில் கூறுவது பிசாசுகளின் வேலையென்று சிலர் கூறுகின்றனரே?

விடை: உங்கள் நம்பிக்கைக்கு எது ஒத்து வர வில்லையோ அதனை

அப்படியே ஒதுக்கித் தள்ள வேண்டா. அதனைப் பேய் பிசாசுகளின் வேலை என்று ஏன் கூறவேண்டும்? ஒன்றை நிரூபிக்கச் சரியான சான்றுகள் கிடைக்கும்போது பகுத்தறிவுக்கு ஒப்பக் கூடிய - தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! பிசாசுகளைப் பற்றிப் பகுத்தறிவுக்கொவ்வாத மூடநம்பிக்கைகளால் பேசாதீர்கள்.

வினா: பிசாசுகளைப் பற்றிக் கூறும்போது மூடநம்பிக்கை என்று கூறுகிறீர்கள்! ஆனால், மறுபிறப்பும் சிறிது மூடநம்பிக்கை உடையது தானே?

விடை: ஆங்கில ஆகராதியில் மூடநம்பிக்கை ('Superstition') என்ற சொல்லுக்கு 'அடிப்படையான காரணம் இல்லாத ஒரு நம்பிக்கை' என்றும் அல்லது 'மந்திரங்களுடன் கூடுகின்ற கருத்து' என்றும் கூறப்படுகிறது. பேய் பிசாசு இருக்கிறதென்பதைச் சரியான சான்றுகளுடன் ஓர் அறிவியல் அறிஞர் எழுதிய கருத்துகளைக் காட்டினால், நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், பிசாசுகளைப் பற்றி எந்த ஓர் அறிஞரும் ஆராய்ச்சி செய்ததாக நான் கேள்விப்படவில்லை. அதனால் பிசாசு என்று ஒன்று இருக்கிறது என்பதற்கு எந்தச் சான்றும் கிடையாது. ஆனால், மறுபிறப்பு உண்டு என்பதற்கான ஒரு சான்றினை மேலே கண்டோம்! ஆகையால், மறுபிறப்பை மூடநம்பிக்கை என ஏற்றுக்கொள்ள முடியாது.

வினா: சரி. அப்படி என்றால், மறுபிறப்பை ஏற்றுக் கொள்ளும் அறிவியல் அறிஞர்கள் இருக்கின்றனரா?

விடை: உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியலை உலகுக்குப் பிரிட்டிஷ் கல்வி முறையில் அறிமுகப்படுத்துவதற்குக் காரணமானவரும், டார்வின் ஆராய்ச்சியை ஏற்றுக் கொண்டவருமான தாமஸ் ஹக்ஸ்லி (Thomas Huxley) மறுபிறப்பை நம்புவதற்குச் சரியான காரணங்கள் இருப்பதாகக் கூறினார். அவருடைய புகழ்பெற்ற நூலான 'பரிணாம வளர்ச்சி, ஒழுக்கநெறி மற்றும் கட்டுரைகள்' (Evolution and Ethics and Other Essays) என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"இடம் விட்டு இடம் பெயரும் அல்லது கூடு விட்டுக் கூடுபாயும் கோட்பாடு, அது பிராமணக் கோட்பாடோ அல்லது பௌத்தக் கோட்பாடோ, அண்டத்திலிருந்து மனிதனுக்கு வரும் வழியை விவரிக்கின்றன. ஆனால், இக்கூற்று மற்றவர் கூற்றுக்குக் குறைவானதல்ல. சரியான முடிவெடுக்கத் தெரியாத அவசர ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே இதனை அபத்தமென ஒதுக்குவர். பரிணாம வளர்ச்சித் தத்துவத்தைப் போலவே, இடம் விட்டு இடம் பெயரும் அல்லது கூடுவிட்டுக் கூடுபாயும் தத்துவம் உண்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதே! ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சரியான ஆதாரங்களுடன் அதை நிரூபிக்கலாம்".

ஸ்வீடிஸ் வானூலாரும், இயற்பியல் அறிஞரும் திரு. ஐன்ஸ்டின் அவர்களின் நண்பருமான, புகழ் பெற்ற பேராசிரியர் குஸ்டாஃப் ஸ்ட்ராம்பெர்க் (Prof. Gustaf Stromberg) அவர்களுக்கு மறுபிறப்பு எண்ணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

'மனித ஆன்மாக்கள் மறுபடியும் இவ்வுலகில் பிறக்குமா, பிறக்காதா, என்பதற்குப் பலவித வேறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. 1936 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியாவில், ஆங்கிலேயர்கள் ஆளும் போது ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. டெல்லியைச் சேர்ந்த சாந்திதேவி என்னும் ஒரு பெண், டெல்லியிலிருந்து சுமார் ஐநூறு கல் தொலைவிலிருக்கும் மட்ராவில் நடந்த தனது முற்பிறப்பைப் பற்றி நன்றாக விவரித்தார். அவருடைய மறுபிறப்புக்கும் சுமார் ஓறாண்டுக்கு முன்பு நடந்ததைக் கூறினார். அவருடைய கணவரின் பெயரை, குழந்தையைப் பற்றி, வீட்டைப்பற்றிய வரலாற்றினைப் பற்றி விவரித்தார். அந்த விசாரணைக்குழு அப்பெண்ணை அவருடைய முற்பிறப்பின் உறவினர்கள் வாழ்ந்த இடத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்பெண் கூறியவை அனைத்தும் சரியாக இருந்தன. பொதுவாக இந்தியர்கள் அனைவருமே மறுபிறப்பில் நம்பிக்கையுள்ளவர்கள். ஆனால், இந்நிகழ்ச்சியில் அதிசயிக்கத்தக்க செயல் என்னவென்றால், அப்பெண்ணின் முற்பிறப்பிலே நடந்த நிகழ்ச்சிகளில் அதிகமானவற்றை அவள் நினைவு கூர்ந்ததுதான். நினைவுகள் அழியா என்பதற்கு அந்நிகழ்ச்சி ஒரு கூடுதல் சான்றாகும்.'

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், கலாச்சார நிறுவனத்தின்

(UNESCO) இயக்குநர் தலைவராக (Director General) விருந்த பேராசிரியர் ஜூலியன் ஹக்ஸ்லி (Julian Huxley) மறு பிறப்புப் பற்றிய கருத்து அறிவியலுக்குப் பொறுத்தமானதே என்கிறார்.

தெளிவான கம்பியில்லா ஊடகங்களால் அனுப்பப்படும் செய்திகள் (Wireless Message) ஒரு கருவியால் ஒலிபரப்பப் படுவதைப் போல, 'நிரந்தரமாக வாழும் தனித்தன்மை / ஒரு சக்தி 'சாவு' என்ற ஒன்றால் ஒலிபரப்பப்படலாம். . அந்த ஒலிபரப்பு மீண்டும் செய்தியாக வேண்டுமென்றால் இன்னொரு கருவி அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதைத்தான் ரிசீவர் என்கிறோம். ஒரு சில கருவிகள் (செய்தியை அனுப்பும் சாதனங்களில் உள்ள கருவிகள்) பழுது பட்டுவிட்டால் செய்திகள் தடைப்பட்டு விடுகின்றன. மீண்டும் அந்தக் கம்பியில்லாத் தந்தி, ஒரு புதிய பழுதுபார்த்து இணைக்கப்பட்ட சாதனம் கிடைத்தவுடன், இயங்கத் தொடங்குகிறது; அதாவது நமது ஆத்மாவைச் சரியாக இயக்கக் கூடிய-வெளிப்படுத்தக் கூடிய வழியே பிறப்பு உடல்களும். ஒருமுறை விடுபட்ட ஆத்மா, மறுபிறப்பு எடுக்கும் வரை நினைப்பதோ, உணர்வதோ இல்லை. நமது ஆளுமை உடலின்றி இயங்க முடியாத நிலையில் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. ஒயர்லெஸ் எந்திரத்தின் செய்திகளை எடுத்துச் செல்லும் கருவியைப் போலவே ஆண்-பெண் இருபாலாரிடையே ஒரு கருவி இயங்குகிறது. ஆனால், மரணம் என்னும் ஒரு நிலை அவ்வுடலுக்கு ஏற்பட்டுவிட்டால், அது கொண்டுசென்ற செய்தி தடைப்படுகிறது. அது தொடர்வது மறுபடி பிறப் பெடுக்கும் போதுதான். சாவு என்பது என்ன? அது ஒரு தொடர்ச்சியைத் தடைப்படுத்துவதுதான். கம்பியில்லாத் தந்திமூலம் சென்று கொண்டிருக்கும் ஒரு செய்தியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சாதனம் கிடைத்துவிட்டால், செய்திகள் வந்து கொண்டேயிருக்கும், அதை அனுப்பக்கூடிய மனமும் இயங்கும்.'

வாழ்க்கையைச் செயல்முறையாகக் கொண்ட அமெரிக்காவின் தொழிலதிபர் ஹென்றி ஃபோர்டு (Henry Ford) மறுபிறப்பில் நம்பிக்கை வைத்திருந்தார். மறுபிறப்பை ஏற்றுக் கொள்கிறார். கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் போலல்லாது, சுக போக விரும்பிகள் போலவுமின்றித் திரு ஃபோர்டின் கருத்து வேறுவிதமாக இருக்கிறது. அவர்,

மறுபிறப்பு நம்மை மேலும் அபிவிருத்தி செய்து கொள்ள இரண்டாவது சந்தர்ப்பம் அளிப்பதாகக் கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:

'எனக்கு இருபத்தாறு வயது நடக்கும் போதுதான் நான் மறுபிறப்பை ஏற்றுக் கொண்டேன்; சமயமும் (மதமும்) மறுபிறப்பைப் பற்றி ஒன்றும் கூறவில்லை; என் தொழிலும் எனக்கு முழுத் திருப்தியை அளிக்கவில்லை. ஒரு பிறப்பில் நாம் பெற்ற அனுபவத்தை மறுபிறப்பில் உபயோகப்படுத் தவில்லையென்றால், அத்தொழில் பயனற்றதாகி விடுகிறது. மறுபிறப்பை நான் கண்டு பிடித்த போது, ஓர் உலகமளாவிய திட்டத்தை நான் கண்டு பிடித்ததாக உணர்ந்தேன். என் எண்ணங்களைப் பயன்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததாக நான் உணர்ந்தேன். காலம் இனிமேல் குறுகியதன்று! கடிகார முட்களுக்கு நான் இனி அடிமையல்லன். அனுபவமே மேதைத்தனம். சிலர் இதைப் பரிசென்றும் மேதைத்தனமென்றும் எண்ணுவர். ஆனால், இது பல பிறப்புகளால் பெற்ற அனுபவக்கனியாகும். சிலர் மற்றவர்களைவிட முதுமையான ஆத்மாக்களாகும்; அதனால், மற்றவர்களைவிட அதிகம் தெரிந்தவர்கள். மறுபிறப்பை நான் கண்டுபிடித்தவுடன் என் மனம் ஓய்வெடுக்கிறது. இந்த உரையாடலைப் பதிவு செய்தால் அது மனிதர்களின் மனத்துக்கு ஓய்வளிக்குமாறு எழுதிவையுங்கள் . நமக்குக் கிடைக்கும் அந்த நீண்ட வாழ்க்கைப் பார்வையின் அமைதியை நான் மற்றவர்களுக்கும் கூற விரும்புகிறேன்.'

ஆக, பௌத்தர்களின் மறுபிறப்புப் பற்றிய போதனைக்கு ஆதரவாகச் சில அறிவியல் பூர்வமான சான்றுகளுமுள. இந்நம்பிக்கை தர்க்கபூர்வமாக உறுதியானது. தெய்வ நம்பிக்கையுள்ளவர்களாலும் சுகபோகவிரும்பிகளாலும் நிரூபிக்க முடியாத ஒன்றை நிரூபித்துக் காலாகாலத்துக்கும் காட்டக் கூடியது. மேலும், இது நமக்கு அதிக ஆறுதலளிக்கக் கூடியதுமாகும். உங்களுக்கு இரண்டாவது சந்தர்ப்பமளிக்காத நமது தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியாத, சக்தியையும் செயல் திறனையும் வளர்த்துக் கொள்ளமுடியாத நிலை ஒரு பிறப்பில் ஏற்பட்டால், மறுபிறப்பில் அது கிடைத்தாலல்லவோ சிறப்பு? ஆனால், புத்தபிரானின் போதனைப்படி இப்பிறப்பில் உங்களால் நிர்வாண நிலை அடைய முடியவில்லையென்றால் அடுத்து முயல்வதற்கு ஒரு

சந்தர்ப்பம் கிடைக்கிறது. இப்பிறப்பில் தவறுகள் செய்து விட்டீர்களேயாயின் அடுத்த பிறப்பில் அதனைத் திருத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. உண்மையிலேயே உங்கள் தவறுகளிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளலாம். இப்பிறப்பில் உங்களால் செய்ய இயலாதவற்றை, நிறைவேற்ற முடியாதவற்றை மறுபிறப்பில் அதனை அடைய-நிறை வேற்றச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. எவ்வளவு அற்புதமான போதனைகள்!

வினா: நீங்கள் சொல்வது மனதுக்குத் திருப்தி அளிக்கிறது. இருந்தாலும் மறுபிறப்பை என்னால் முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

விடை: அதனால் தவறில்லை. பௌத்தம் தன் போதனைகளை முழுவதும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்துகின்ற சமயமன்று. நம்ப முடியவில்லையென்றால் நம்பியே ஆக வேண்டுமென்று உங்களையே வருத்திக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? பௌத்தத்தில் உங்களுக்கு உதவும் போதனைகளைப் பயிற்சி செய்யுங்கள். உங்களுக்குப் புரிந்த, பயனளித்த போதனைகளை ஏற்றுக்கொள்ளுங்கள். காலப்போக்கில் மறுபிறப்பின் உண்மையும் உங்களுக்குத் தெளிவாகலாம்.

* * * * * * * *

## 6. தியானம்

வினா: தியானம் என்றால் என்ன?

விடை: தியானம் என்பது தன்னுணர்வுடன் மனம் வேலை செய்யும் முறையை மாற்ற முற்படும் முயற்சியாகும். பாலி மொழியில் இது ‘பாவனா’ எனக் கூறப்படும். அதன் பொருள் ‘வளரச் செய்தல்’ அல்லது ‘அபிவிருத்தி செய்தல்’.

வினா: தியானம செய்வது அவசியமா?

விடை: ஆம், மிக அவசியம். நாம் எவ்வளவு தான் நல்லவர்களாக இருக்க

வேண்டுமென விரும்பினாலும் தற்போதைய நமது நடத்தையை உருவாக்கும் ஆசைகளை மாற்ற முடியாவிட்டால் நாம் நல்லவராக வளர்வது கடினம். சான்றாக, ஒருவன் தன் மனைவியுடன் தான் பொறுமையற்று நடந்து கொள்வதை உணர்ந்து “இனி நான் ஒருபோதும் அவளிடம் பொறுமையற்று நடக்க மாட்டேன்” என்று உறுதிமொழி எடுத்துக் கொள்கிறான். ஆனால் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவன் அவளிடம் தன்னை உணராமலேயே பொறுமையிழந்து உறுதிமொழியையும் மறந்து சண்டையிடுகிறான். தியானம் செய்வதால் இந்தத் தன்னுணர்வு வளர்ச்சியுறுவதோடு மனதில் ஊறிப்போன பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு வேண்டிய சக்தியும் அதிகரிக்கிறது.

வினா: தியானம் செய்வது அபாயகரமானதாக இருக்கலாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மையா?

விடை: உயிர் வாழ உப்பு தேவை. ஆனால் ஒரு கிலோ உப்பை உண்டீர்களென்றால் அது உங்களைக் கொன்று விடக் கூடும். நவீன உலகில் இயங்க வாகனம் தேவைப்படுகிறது. ஆனால் சாலை விதிகளைப் பின்பற்றாமலோ, குடித்து விட்டு வண்டியை ஓட்டினாலோ அதே வாகனம் ஒரு அபாயகரமான பொருளாகிவிடுகிறது. தியானமும் அப்படித்தான். நம் மன நலத்திற்கும் நல்வாழ்வுக்கும் தியானம் அவசியமானது. ஆனால் தவறான வழியில் பயிற்சி செய்தால் பிரச்சனை உண்டாகலாம்.

சிலருக்கு மன அழுத்தம், பகுத்தறிவுக்கொவ்வாத அச்சங்கள், மனக் கோளாறு போன்ற பிரச்சனைகள் இருக்கும். அவர்கள் தியானம் செய்தால் தங்கள் மனப் பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வு கிடைத்துவிடும் என்றெண்ணித் தியானம் செய்யத் துவங்குகிறார்கள். சிலசமயம் அது பிரச்சனையை அதிகரிக்கச் செய்துவிடக் கூடும். அத்தகைய பிரச்சனைகள் இருப்பின் அவர்கள் மருத்துவரை நாடிச் சென்று நலம் அடைந்த பின் தியானம் செய்வதைத் துவங்க வேண்டும்.

வேறு சிலர் அளவுக்கு அதிகமாகத் தியானிக்கத் தொடங்குகிறார்கள். தியானம் செய்யத் தொடங்கிப் படிப்படியாக நிதானமாகச் செய்வதற்குப் பதில், அதி உற்சாகத்துடன் நீண்ட நேரம் செய்யத் துவங்கி விரைவில்

களைப்படைந்து விடுகிறார்கள்.

ஆனால் முக்கியமாக மக்களுக்குத் தியானத்தால் பிரச்சனை ஏற்படுவது 'கங்காரு தியானத்தின்' காரணமாகத்தான். அதாவது, சிலர் ஓர் ஆசிரியரிடம் சென்று அவருடைய தியான வழியைப் பின்பற்றித் தியானம் செய்வார்கள். பின்பு ஒரு புத்தகத்தைப் படித்து விட்டு அதில் கூறப்படும் தியானப் பயிற்சியையும் செய்யத் துவங்குவார்கள். மீண்டும் ஒரு வாரம் கழித்து ஒரு பெயர் பெற்ற தியான குரு ஊருக்கு வருகிறார் என்றால் அவருடை தியான வழியையும் சேர்த்துக் கொள்ளலாமே என்று அதையும் சேர்த்துச் செய்கின்றனர். இதன் விளைவு மிக விரைவிலேயே அவர்கள் பெரிதும் குழம்பிப் போய் விடுகிறார்கள். கங்காரு போல ஒரு ஆசிரியரிடமிருந்து இன்னொருவரிடம் அல்லது ஒரு பயிற்சி முறையிலிருந்து மற்றதற்குக் தாவிக் குதிப்பது தவறான வழியாகும்.

ஆனால், உங்களுக்குப் பெரும் மனக் கோளாறு ஏதுமில்லையெனில், நீங்கள் தியானத்தைத் துவங்கிப் பயிற்சியை முறையாகச் செய்தால் உங்களுக்காக நீங்கள் செய்து கொள்ளும் மிகச் சிறந்த நன்மை பயக்கும் செயலாக இது அமையும்.

வினா: தியானத்தில் எத்தனை வகைகள் உள்ளன?

விடை: ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைப் போக்குவதற்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட மன நிலையை வளர்ப்பதற்கும் பயன்படத்தக்க பல்வேறு தியானங்களைப் புத்தர் போதித்தார். ஆனால் பொதுவான, பயனுள்ள இரண்டு வகைத் தியானங்கள் மூச்சைக் கவனித்தல் (பாலி மொழியில் அனாபனா சதி) மற்றும் அன்பு-கருணைத் தியானம் (மெத்த பாவனா).

வினா: மூச்சின் மேல் மனக்கவனம் செலுத்தும் பயிற்சியினை எவ்வாறு செய்வது?

விடை: நீங்கள் சுலபமான இந்த நான்கு படிகளைப் பின் பற்றலாம்: இடம், உட்காரும் நிலை, பயிற்சி மற்றும் பிரச்சனைகள்.

முதற் படியாக அமைதியான, தொந்தரவற்ற நல்ல இடத்தை – ஒரு அறையைத் தேர்ந்து கொள்ளுங்கள்.

இரண்டாவதாக வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள். உட்காருவதற்கான சிறந்த முறை - கால்கள் இரண்டையும் மடித்துச் சம்மனமிட்டுப் பிட்டத்துக்கடியில் ஒரு தலையணையை வைத்து, முதுகை நிமிர்த்துக் கைகளை மடியில் வைத்துக் கண்களை மூடிக்கொள்ளுங்கள். அல்லது முதுகு நிமிர்ந்த நிலையில் ஒரு நாற்காலியிலும் அமர்ந்து கொள்ளலாம்.

மூன்றாவதாக வருவது செய்முறைப் பயிற்சி. கண்களை மூடி அமைதியாக உட்கார்ந்து, உங்கள் கவனத்தை மூச்சின் மீது திருப்புங்கள். மூச்சு உள் இழுப்பதையும் வெளி விடுவதையும் கவனியுங்கள். மூச்சை எண்ணிக் கொண்டே கவனிக்கலாம் அல்லது வயிறு மேலே உயர்வதையும் கீழே தாழ்வதையும் கவனிக்கலாம்.

இதைச் செய்யும் போது சில பிரச்சனைகளும் சிக்கல்களும் எழலாம். உங்கள் உடலில் எரிச்சல் தரத்தக்க அரிப்பு ஏற்படலாம் அல்லது முட்டியில் வலி உண்டாகலாம். இவ்வாறு நிகழ்ந்தால் உடலைத் தளர்த்தி அசையாமல், மூச்சின் மீதே கவனத்தை வைத்திருங்கள். உங்கள் மூச்சின்மீதுள்ள கவனத்தைத் திசை திருப்பும் பல எண்ணங்கள் மனதில் தோன்றலாம். இதைச் சமாளிக்க ஒரே வழி பொறுமையாக உங்கள் கவனத்தை மீண்டும் மீண்டும் மூச்சிற்கே கொண்டுசெல்வது தான். இப்படிச் செய்து கொண்டே இருந்தால் அதன் விளைவாக இறுதியில் உங்கள் கவனத்தைத் திசை திருப்பும் எண்ணங்கள் பலவீனப் பட்டு, மன ஒருமுகச்சிந்தனை உறுதி பெற்று உங்களுக்கு ஆழ்ந்த மனச் சாந்தியும், உள்ள அமைதியும் கிடைக்கும்.

வினா: எவ்வளவு நேரம் இவ்வாறு தியானம் செய்ய வேண்டும்?

விடை: முதல் ஒரு வாரத்திற்குத் தினம் பதினைந்து நிமிடங்கள் தியானம் செய்வதில் தொடங்கி, பின் ஒவ்வொரு வாரத்திற்கும் ஐந்து நிமிடங்கள் என அதிகரித்து , தினம் முக்கால் மணி நேரம் தியானம் செய்யும்வரை நீட்டித்துக் கொள்ளுங்கள். ஒரு சில வாரங்கள் சீராகத் தியானம் செய்த பின்

ஒருமுகச் சிந்தனை சிறப்படைவதை உணரலாம்.

வினா: அன்பு-கருணைத் (பாலி மொழியில் 'மெத்தா') தியானத்தை எவ்வாறு பயிற்சி செய்வது?

விடை: மூச்சின் மீது மனக்கவனத்தை முறையாகப் பின்பற்றத் துவங்கியபின் அன்பு-கருணைத் தியானத்தைத் துவங்கலாம். இந்தத் தியானத்தை வாரம் இரண்டு அல்லது மூன்று முறை மூச்சின் மேல் மனக்கவனத் தியானம் செய்த பின் செய்ய வேண்டும்.

முதலில், உங்கள் மீதே கவனத்தை வைத்துக் கொண்டு கீழ்க்காணும் சொற்றொடர்களை உங்களுக்கே சொல்லிக் கொள்ளுங்கள்: 'நான் நலத்தோடும் மகிழ்வோடும் இருப்பேனாக. நான் நிம்மதியோடும் அமைதியோடும் இருப்பேனாக. நான் ஆபத்துகளிருந்து பாதுகாக்கப்படுவேனாக. என் மனம் வெறுப்பில்லாமல் இருக்குமாக. என் உள்ளம் அன்பு நிறைந்திருக்குமாக. நான் நலத்தோடும் மகிழ்வோடும் இருப்பேனாக.'

பின் ஒவ்வொருவராக முதலில் உங்களுக்குப் பிடித்த ஒருவரையும், அடுத்து பட்சபாதமற்ற ஒருவரையும், அதாவது உங்களுக்குப் பிடித்தவர் என்றும் பிடிக்காதவர் என்றும் சொல்ல முடியாத ஒருவரையும், இறுதியாக உங்களுக்குப் பிடிக்காத ஒருவரையும் மனதில் எண்ணிக்கொண்டு அவர்களுக்கும் அன்பும் கருணையும் கொண்ட எண்ணங்களைப் பரப்ப வேண்டும்.

வினா: இவ்வாறு செய்யும் தியானத்தினால் என்ன பலன் கிடைக்கும்?

விடை: நீங்கள் அன்பு-கருணைத் தியானத்தை அடிக்கடியும் சரியான மனோநிலையோடும் செய்தால் உங்களுக்குள் மிக நல்ல மாற்றங்கள் ஏற்படுவதைக் கவனிக்கலாம். உங்களையே நீங்கள் அதிகம் ஏற்றுக்கொள்வதையும், மன்னித்துக்கொள்வதையும் கவனிக்கலாம். அன்புடையோரிடம் உங்கள் உணர்ச்சிகள் அதிகரிப்பதைப் பார்க்கலாம். இதுவரை நாம் பொருட்படுத்தாதவர்கள் மீதும் நட்புணர்வு அதிகரிப்பதைக்

கவனிக்கலாம். உங்களுக்குப் பிடிக்காதவர்கள் மீதான வெறுப்போ, மனக்கசப்போ குறைவதைக் கவனிக்கலாம். இறுதியில் அந்த வெறுப்பு முழுவதும் கரைந்து மறைந்து விடுவதைக் கவனிக்கலாம். சில சமயம் உங்களுக்குத் தெரிந்த ஒருவர் உடல் நலமின்றியோ, மகிழ்வற்றோ அல்லது சிக்கலில் அகப்பட்டோ இருந்தால் அவர்களையும் நீங்கள் அன்பு-கருனைத் தியானத்தில் சேர்த்துக் கொண்டால், அவர்கள் நிலைமை சீரடைவதையும் காணலாம்.

வினா: அது எப்படி முடியும்?

விடை: சரியான பயிற்சி தந்தால், மனம் ஒரு சக்திவாய்ந்த கருவியாக மாறுகிறது. உங்கள் மனோ சக்தியை ஒரு நிலைப்படுத்தி அதை மற்றவர் மீது திசை திருப்பினால், அது அவர்கள் மீது ஒரு விளைவை உண்டாக்கும். உங்களுக்கும் இத்தகைய அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு ஜனநெருக்கமான அறையில் இருக்கும் போது யாரோ உங்களைக் கவனிப்பது போன்ற பிரமை ஏற்படலாம். திரும்பிப் பார்த்தால், உங்களை ஒருவர் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதும் தெரிய வரும். என்ன நடந்ததென்றால் உங்களைப் பார்ப்பவரின் மனச் சக்தியை நீங்கள் தெரிவு செய்து கொண்டுள்ளீர்கள். அன்பு-கருணைத் தியானமும் அப்படித்தான். நாம் நல்ல எண்ணங்களோடு ஒருவரை நினைக்கும் போது அது அவர்களைப் படிப்படியாக மாற்றும்.

வினா: இவை தவிர வேறு தியான முறைகள் இருக்கின்றனவா?

விடை: இருக்கிறது. இறுதியானதும் எல்லாவற்றினும் மிக முக்கியமானதுமான தியானம் விபாஸனா எனப்படும். இந்தப் பாலி மொழி வார்த்தையின் பொருள் 'உள் நோக்கிப் பார்ப்பது' அல்லது 'ஆழமாகப் பார்ப்பது' என்பதாகும். பொதுவாக இது நுண்ணறிவுத் தியானம் என மொழிபெயர்க்கப் படுகிறது.

வினா: விபாஸனா தியானத்தை விளக்குங்கள்.

விடை: விபாஸனா தியானத்தின் போது ஒருவர் தங்களுக்கு நடப்பதை, அதைப் பற்றி எண்ணாமலோ, செயற்பாட்டில் ஈடுபடாமலோ, கவனிப்பதாகும்.

வினா: அதன் நோக்கம் என்ன?

விடை: பொதுவாக நமக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டால் அந்த அனுபவம் பிடிக்கிறது அல்லது பிடிக்கவில்லை என்ற நம் செயல்பாட்டை உடனே வெளிப்படுத்தி விடுகின்றோம். அதைப் பற்றிய எண்ணங்களும், பகற் கனவுகளும், நினைவுகளும் உடனே தொடங்கிவிடுகின்றன.

இவையெல்லாம் அந்த அனுபவத்தைப் பேதப்படுத்திக் குலைத்து விடுவதால் அதனை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

செயற்பாடற்ற ஒரு கவனத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் நாம் நினைக்கும் விதம், பேசும் விதம், நடந்து கொள்ளும் விதம் ஆகியவற்றுக்கான அடிப்படைக் காரணங்களை அறிய முடிகிறது.

மேலும் நம்மையே நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் போது அது நம் வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தை விளைவிக்கிறது.

விபாஸனா செய்வதின் மற்றொரு அனுகூலம் என்னவெனில் சிறிது காலம் கடந்த பின் நமக்கும் நம் அனுபவத்துக்கும் இடையே ஒரு இடைவெளியை அது உண்டாக்குகிறது. இதனால் ஒவ்வொரு தவறு செய்யத் தூண்டும் அனுபவத்தின் பின்னும் அல்லது சினமூட்டுகிற அனுபவத்தின் பின்னும் நாம் தானாகவே உணர்வில்லாமலே செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு மாறாக நம்மால் ஒரு அடி பின் வைக்க முடிகிறது. இந்த இடைவெளியின் காரணமாக, நாம் ஏதாவது செய்ய வேண்டுமா வேண்டாமா என்பதையும் செய்யவேண்டுமென்றால் எப்படிச் செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் சிந்திக்க அவகாசம் கிடைக்கிறது. இவ்வாறு நமது வாழ்க்கையை நாமே கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. இந்த கட்டுப்பாடு ஒரு அகங்காரத்திலிருந்து வருவதல்ல.

மாறாக அனுபவங்களை நாம் தெளிவாகப் பார்ப்பதனால் வருவதாகும்.

வினா: விபாஸனா தியானம் செய்வது நம்மை மேம்படுத்தி மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்பது சரியா?

விடை: முக்கியமான ஆரம்பப் பயன் அதுதான். ஆனால் விபாஸனா தியானத்திற்கு அதைவிட மேலோங்கிய நோக்கம் உள்ளது. நம் பயிற்சி முழுமையாக வளர வளர, நம் மனக் கவனம் ஆழம் பெறப்பெற, நம் அனுபவங்கள் நமக்குரியதல்ல எனத் தெரிய வருகிறது. அதாவது நடப்பதெல்லாம் 'நான்' என்று ஒருவர் நடத்துவதுமில்லை 'நான்' என்ற ஒருவர் அதை அனுபவிப்பதுமில்லை. ஆரம்பத்தில் தியானிப்போருக்கு அவ்வப்போது இந்த உண்மை தெரிய வரும். காலம் செல்லச் செல்ல இந்த அறிவு உறுதி பெறும்.

வினா: இந்தச் செய்தி கேட்பதற்குச் சற்றுப் பயப்படுத்துவதாக இருக்கிறதே!

விடை: ஆம். அப்படித்தான் தோன்றுகிறது, இல்லையா? சிலர் இந்த அறிவை முதன்முதலில் பெறும்போது சற்று பயப்படக் கூடும். ஆனால் விரைவில் இந்தப் பயம் இருந்த இடத்தில் ஒரு ஆழ்ந்த அறிவு இடம் பெறும் - 'நாம்' என்று இது நாள் வரை நினைத்திருந்தது தவறான கருத்து என்பது தெளிவாகும். மெல்ல மெல்ல நமது ஆணவம் வலிமை இழந்து நாளடைவில் முற்றாகக் கரைந்துவிடும். அதே சமயத்தில் 'நான்', 'என்', 'எமது' என்ற எண்ணங்களும் மறைந்து போய் விடும். இந்தச் சமயத்தில் தான் ஒவ்வொரு பௌத்தருடைய வாழ்க்கையும், அவர்களது உலகைப் பற்றிய வெளி நோக்கமும் உண்மையில் மாறத் தொடங்குகிறது.

எத்தனை வாழ்க்கைப் பிரச்சனைகள், சமுதாயப் பிரச்சனைகள், உலகளாவிய பிரச்சனைகள் தோன்ற இனவாதம், தேசப் பெருமை என்ற அகங்காரம் அடிபடையாக இருந்துள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள்! தனக்குத் தவறிழைக்கப் பட்டதாக நினைப்பு, தான் அவமதிக்கப்பட்டதாக, அச்சுறுத்தப்பட்டதாக எண்ணும் எண்ணம், இவ்வாறு நினைப்பதால் 'இது என்னுடையது!', 'அது எங்களுக்குரியது' எனப் போடும் கூச்சல்,

இவைதானே மேற்கூறிய பிரச்சனைகள் எழக் காரணமாக அமைந்தவை.

பௌத்தப் போதனைகளின்படி உண்மையான அமைதியும் மகிழ்ச்சியும் நம்முடைய சரியான அடையாளத்தை உணர்ந்த பின்னரே காண முடியும். இதைத்தான் ‘ஞானம்’ எனச் சொல்கிறோம்.

வினா: இது ஓர் ஈர்க்கத்தக்க கருத்து. அதே சமயத்தில் திடுக்கிடச் செய்வதாகவும் தோன்றுகிறது. ஒரு சுயம் இல்லாமலோ அல்லது ஒரு உரிமையாளன் இல்லாமலோ ஓர் ஞானி எப்படிச் செயல்படுவான்?

விடை: ஒரு ஞானியும் நம்மைச் சில கேள்விகள் கேட்கலாம் அல்லவா?

'நீங்கள் எப்படி ஒரு உரிமையாளன் இருப்பதாக நினைத்துச் செயல் படுகின்றீர்?'

உங்கள் மத்தியிலும் மற்றவர் மத்தியிலும் உள்ள பயம், பொறாமை, துயரம், அகம்பாவம் போன்ற மனதுக்குப் பிடிக்காத மாசுக்களை எப்படித்தான் பொறுத்துக் கொள்கின்றீர்கள்? அது வேண்டும் இது வேண்டும் என்று பொருள் சேர்க்கும் போராட்டத் தோடும், அடுத்தவனைவிட ஒரு படி முன் நிற்க வேண்டும் என்ற ஆவேசத்தோடும், எல்லாம் இழந்துவிடுவோமோ என்ற அச்சத்தோடும் உங்களால் எப்படி வாழ முடிகிறது?'

ஞானிகள் வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவே இருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஞானம் பெறாதவரான நீங்களும் நானும் தான் பிரச்சனைகளோடு இருக்கிறோம், பிரச்சனைகளை உருவாக்குகிறோம்.

வினா: நீங்கள் சொல்வது புரிகிறது. ஆனால் ஞானம் பெற எத்தனை நாட்களுக்குத் தியானம் செய்ய வேண்டும்?

விடை: அதை அறுதியிட்டுக் கூற முடியாது. மேலும் அது முக்கியமும் இல்லை. ஏன் நீங்கள் உடனே தியானத்தைத் துவங்கி அது உங்களை எங்கு இட்டுச் செல்கிறது என்று பார்க்கக் கூடாது? நேர்மையோடும் அறிவோடும் தியானம் செய்தால் அது உங்கள் வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத்தக்க

அளவு மேம்படுத்துவதைக் காணலாம். காலப்போக்கில் தியானத்தையும் தர்மத்தையும் ஆழமாக ஆராய்ந்து பார்க்க உங்களுக்கு ஆர்வம் எழலாம். பின் அதுவே உங்கள் வாழ்வில் மிக முக்கியச் செயலாகி விடலாம். பயணத்தைத் துவங்கும் முன்பே பாதையின் மேலான படிகளை எண்ணிக் குழப்பப்பட்டுக் கவலையுறாதீர்கள். ஒவ்வொரு படியாக எடுத்து வையுங்கள்.

வினா: தியானம் கற்றுக்கொள்ள ஒரு ஆசிரியர் தேவையா?

விடை: ஆசிரியர் தேவையில்லையென்றாலும் தியானம் நன்கு தெரிந்தவர் உங்களுக்கு வழி காட்டி ஆலோசனை கூறுவது உதவிகரமாக இருக்கும். துரதிஷ்டவசமாக, தியானம் செய்வதுபற்றி ஒன்றுமே தெரியாத சில பிக்குகளும், அறியாத மனிதர்களும் இன்று தியான ஆசிரியர்கள் என்று நாட்டில் உலவி வருகின்றனர். எனவே நல்ல பேரும் புகழும் சமநிலையான தன்மையும், புத்தரின் போதனைகளைப் பின்பற்றிக் கற்பிக்கும் திறன் படைத்த ஆசிரியரைத் தேர்வு செய்ய முயலுங்கள்.

வினா: தியானத்தை இன்றைய நவீன மன நோய் நிபுணர்கள் பரவலாகப் பயன் படுத்துவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இது உண்மையா?

விடை: ஆம், இது உண்மையே. நோயைக் குணப்படுத்தும் வைத்திய இயல்பு தியானத்திற்கு உள்ளதாக மன நோய் நிபுணர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இன்று பல மன நல மருத்துவர்கள் மன அழுத்தத்தைக் குறைக்கவும், காரணமற்ற அச்சங்களைப் போக்கவும், சுய கவனத்தை அதிகரிக்கச் செய்யவும் தியானத்தைப் பயன் படுத்துகின்றனர். மனத்தைப் பற்றிய புத்தரின் நுண்ணறிவு பழங்கால மக்களுக்குப் பயன்பட்டதைப் போலவே, இன்றைய மக்களுக்கும் பயன்படுகிறது.

* * * * * * * *

## 7. மெய்யறிவும் இரக்கவுணர்வும்

வினா: பௌத்தர்கள் அடிக்கடி மெய்யறிவு, இரக்கவுணர்வு என்று பேசுவதைக் கேள்விப்படுகிறேன். இவ்விரு சொற்களின் பொருளென்ன?

விடை: சில சமயங்கள் இரக்கம் அல்லது அன்பு ஆகியவை (கிட்டத்தட்ட இரண்டும் ஒரே பொருள் கொண்டுள்ளன) மிக முக்கியமான ஆன்மீகப் பண்புகள் என நம்புகின்றன. ஆனால் அவை மெய்யறிவை வளர்ப்பதற்கு எவ்வித முக்கியத்துவமும் தருவதில்லை. அதன் முடிவு, நீங்கள் நல்ல மனமுடைய முட்டாளாகவும், எதையும் புரிந்து கொள்ள முடியாத இரக்க குணமுள்ள மனிதராகவும் ஆகிவிடக்கூடும். அறிவியல் போன்ற மாற்றுச் சிந்தனைகள், இரக்க குணம் உட்பட்ட எல்லா உணர்ச்சிகளையும் நமது வழியிலிருந்து அகற்றி விட்டால் தான், நாம் மெய்யறிவை மிகச் சிறப்பாக வளர்த்துக் கொள்ள முடியும் எனக் கூறுகின்றன. இதன் விளைவு, அறிவியல் புதிய புதிய விஞ்ஞானத் தத்துவங்களுக்கு விடை காண்பதில் மட்டுமே கவனம் செலுத்துகிறது. மனிதனுக்குச் சேவை செய்வதே விஞ்ஞானத்தின் நோக்கம் என்பதை மறந்து அவனைக் கட்டுப்படுத்தி அவன்மீது ஆதிக்கம் செலுத்த முற்படுகிறது. அறிவியல் அறிஞர்கள் அவர்களது திறமைகளை அணு ஆயுதங்களைத் தயாரிப்பதிலும், போருக்கு உதவுவதிலும் முன்னிறுத்தி அழிவுத் துறையில் ஈடுபடுவதிலிருந்தே இதை நாம் புரிந்து கொள்ளலாம்.

பௌத்தம், ஒவ்வொருவரும் நிறைவான மனிதர்களாக வாழவேண்டுமேயானால் மெய்யறிவையும் (Wisdom) இரக்கவுணர்வையும் (Compassion) ஒருசேர வளர்த்துக் கொள்ள வேண்டுமெனப் போதிக்கிறது.

வினா: பௌத்த சமயக் கூற்றுப்படி மெய்யறிவு (Wisdom) என்றால் என்ன?

விடை: உயர்ந்த மெய்யறிவு என்பது, உணரக்கூடிய பொருள் அனைத்தும் முழுமையற்றவை; நிரந்தர மற்றவை, தாம் என்ற உணர்வுமற்றவை என்பதை அறிந்து கொள்வதே. இப்படிப்பட்ட அறியுந்தன்மை முழுமையாக நம்மை விடுவித்து நிர்வாணம் என்றழைக்கப்படும் சிறந்த பாதுகாப்பையும் மகிழ்ச்சியையுமளிக்கும் இடத்துக்கு இட்டுச் செல்கிறது. இத்தகைய உயர்ந்த மெய்யறிவைப் பற்றிப் புத்த பெருமான் அதிகம் பேசியதில்லை.

மற்றவர்கள் என்ன கூறுகிறார்களோ அதை அப்படியே நம்புவது மெய்யறிவாகாது. நாமே நேராகப் பார்த்து ஆய்ந்து உணர்ந்து கொள்வதே உண்மையான மெய்யறிவு ஆகும். மாற்றுக் கருத்துக்களுக்கு இடந்தராது மனத்தை மூடி வைக்காமல் எதையும் திறந்த மனத்தோடு ஆராய்வது; மற்ற கருத்துக்களை உடனே மூடத்தனமாக நிராகரிக்காமல், அக்கருத்துக்களையும் கேட்டு முடிவெடுப்பது; பிற கருத்துக்கள் எதையும் கேட்க மறுத்து நமது தலைகளை மணலில் புதைத்துக் கொள்வதை விட, நமது நம்பிக்கைகளுக்கு மாறுபட்ட கருத்துகளையும் கேட்டுக் கவனமாக ஆராய்வது; பாரபட்சமாக வெறுப்புக் காட்டாது, நியாயமாக நடப்பது; மற்றவர்கள் நமக்குக் கூறும் உணர்ச்சிகரமான கருத்துகளை உடனே ஏற்றுக் கொள்ளாமல் கால அவகாசம் எடுத்து நன்கு சிந்தித்து தெளிந்த முடிவெடுப்பது; நமது நம்பிக்கைகளுக்கு எதிரானதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தக்க புதிய கருத்துக்கள் கூறப்படுமேயானால் நமது நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பது; இத்தகைய செயல்களே மெய்யறிவு எனப்படும்.

எவனொருவன் இதைச் செய்கிறானோ அவன் உண்மையிலேயே அறிஞனாவான்; இறுதியில் உண்மையையும் அறிந்துகொள்வான். ஒருவர் காட்டுகிற வழியை நாம் பின்பற்றுவதென்பது மிக எளிதான வழியாகும். ஆனால், பௌத்த வழியைப் பின்பற்ற வேண்டுமென்றாலோ துணிவு, பொறுமை, இணங்குகிற தன்மை, மதி நுட்பம் ஆகியன தேவைப்படுகின்றன.

வினா: நான் நினைக்கிறேன் ஒரு சிலரே இதனைச் செய்யவியலும்! ஒரு சிலரே இதனைக் கடைப்பிடிக்க முடியுமென்றால், பௌத்தத்தில் என்ன பொருளிருக்கிறது?

விடை: உண்மைதான். பௌத்தத்தை ஏற்றுக்கொள்ள இன்று அனைவரும் தயாராக இல்லை. சிலருக்கு இப்போது புத்தரின் போதனைகளை விளங்கிக் கொள்ள முடியவில்லயென்றாலும் அவர்கள் அடுத்த பிறவியிலாவது பௌத்தத்தைப் புரிந்து கொள்ளும் தகுதி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படலாம். எனினும் பலர் சரியான நற்சொற்களாலும், ஊக்கத்தாலும் விளங்கிக் கொள்ளும் சக்தியைப் பெருக்கிக்

கொள்கின்றனர். இதன் காரணமாகவே கண்ணியத்துடனும் அமைதியுடனும் பௌத்தர்கள் பௌத்தத்தின் உட்கருத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். புத்த பெருமான் நமக்கு இவற்றைப் பேரன்புடனும் இரக்கவுணர்வுடனும் போதித்தார். நாமும் மற்றவர்களுக்குப் பேரன்புடனும் இரக்கவுணர்வுடனும் போதிப்போம்.

வினா: நம்பிக்கைக்கு பௌத்தத்தில் இடம் உள்ளதா?

விடை: சில சமயங்கள் நம்பிக்கையே மனிதனை மோட்சத்திற்கு எடுத்துச் செல்லும் என்று போதிக்கின்றன. அதாவது அந்த சமயத்தின் போதனைகளை உண்மையென்று ஏற்றுக்கொண்டால், அந்த சமயக் கடவுளை அது திருப்திபடுத்துகிறது. அந்தக் கடவுளுக்கும் மனிதனுக்கும் ஒரு உறவை ஏற்படுவதால் அந்தக் கடவுள் அவனை மோட்சம் அடையச் செய்வார். பௌத்தத்தில் நம்பிக்கை (பாலிமொழியில் சத்தா) வேறு மாதிரி புரிந்து கொள்ளப்படுகிறது.

எனக்கு காய்ச்சல் இருப்பதாக எடுத்துக்கொள்ளுங்கள். நண்பன் ஒருவனிடம் இதைச் சொல்ல அவன் தன்னுடைய மருத்துவரைப் பார்க்கச் சிபாரிசு செய்கிறான். அந்த மருத்துவர் சரியாகக் கவனிப்பாரா மாட்டாரா என்று எனக்கு தெரியாது. ஆனால் எனது நண்பனின் கருத்தில் எனக்கு நம்பிக்கை (அவன் பொறுப்பானவன், நம்பக்கூடியவன்) இருக்கிறது. மருத்துவரைச் சந்திக்கக் குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவமனைக்குச் செல்கிறேன். காத்திருக்கும் அறையில் சுவற்றில் மாட்டியிருக்கும் அவர் படித்த பட்டச் சான்றிதழ்களைப் படிக்கிறேன். மருத்துவர் உள்ளூர் கல்லூரியில் படித்துவிட்டு மேற்படிப்பிற்கு லண்டன் சென்றதாகத் தெரிகிறது. அந்தச் சான்றிதழ்கள் உண்மை யானவையா போலியானவையா என்பது தெரியாது. ஆனால் நம்பிக்கையோடு அவை உண்மையானவை என்று ஏற்றுக்கொள்கிறேன். சுகாதாரத்துறை அமைச்சகமும், மருத்துவர் சங்கமும் தகுதி இல்லாத மருத்துவரைத் தொழில் செய்ய அனுமதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மருத்துவரைச் சந்திக்கும் நேரம் வந்தது. அவர் (பெண் மருத்துவர்) தொழில் அறிவு மிக்கவராகவும், இனிமையாகப் பழகுபவராகவும், நோயாளியிடம் அக்கறை காட்டுபவராகவும் இருந்தார். மேலும் அவர்

கொடுத்த மருந்து என்னை விரைவில் குணப்படுத்தியது. இதற்கு முன் இந்த மருத்துவர் நன்றாகக் கவனிக்கக் கூடியவரா இல்லையா என்பது தெரியாது. ஆனால் இப்போது அவரிடம் சென்று வந்த அனுபவத்தின் பிறகு அவர்மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனால் அடுத்து ஓரிரு முறை நான் உடல் நலம் குன்றிய போது மீண்டும் அதே மருத்துவரிடமே சென்றேன். முன்பு போலவே சிறப்பாகக் கவனித்தார்.

இப்போது அவர் நல்ல மருத்துவர் என்ற வெறும் நம்பிக்கை மட்டும் அல்ல, நல்ல மருத்துவர் தான் என்பது உறுதியாகத் தெரிந்து விட்டது. ஆனால் இந்த அறிவைப் பெறுவதற்கு முதலில் நம்பிக்கை தேவைப் பட்டது. என் நண்பன் மீது நம்பிக்கை; மருத்துவர் படித்த சான்றிதழ்கள் மீது நம்பிக்கை; மருத்துவ அதிகாரிகளின் சட்டதிட்டங்களின் மீது நம்பிக்கை.

பௌத்தத்திற்கு நம்பிக்கையின் மீதான நோக்கமும் இவ்வாறு தான். ஒன்றை முயற்சி செய்யத் திறந்த மனமும் விருப்பமும் வேண்டும். பௌத்தப் போதனைகள் மீது நீங்கள் வைக்கும் சிறிய நம்பிக்கை அவற்றைப் பயிற்சி செய்ய ஊக்குவித்து, விளைவுகளைக் காணும் வரை விடாப்பிடியாக தொடர்ந்து செய்யத் தூண்டும். காலப் போக்கில் உங்களுக்கு நம்பிக்கை தேவையிராது. அதற்கு மாறாகத் தெளிந்த அறிவு வந்துவிடும்.

வினா: பௌத்த நெறிப்படி இரக்க உணர்வென்றால் (Compassion) என்ன?

விடை: மெய்யுணர்வு (WISDOM) என்பது இயல்பான நமது அறிவார்ந்த தன்மையை நிரப்புவதைப்போல, இரக்கவுணர்வு (COMPASSION) என்பது இயல்பான நமது மனவெழுச்சியுள்ள உணர்வுகளை நிரப்புகிறது. மெய்யுணர்வைப் போலவே இரக்கவுணர்வும் மனிதனின் தனித் தன்மை வாய்ந்த குணமாகும். COMPASSION என்னும் ஆங்கிலச் சொல் இரண்டு வார்த்தைகளைக் கொண்டதாகும். 'COM' என்றால் ‘சேர்ந்து’ என்றும் 'PASSION' என்றால் 'துயர்ப்படல்' என்றும் பொருள்படும். ‘சேர்ந்து துயர்ப்படல்’ என்பதே இரக்கவுணர்வு. நாம் ஒருவர் துன்புறுவதைக் கண்டு அவர்களது வேதனையை நம்முடைய வேதனையாக ஏற்று, அவர்களது வேதனையை நீக்கவோ, குறைக்கவோ முயன்றோமானால், அதுவே

'COMPASSION' என்னும் இரக்கவுணர்வாகும்.

மனித இனத்தின் சிறந்த குணங்கள், புத்தர்களின் குணங்களான பகிர்ந்துகொள்ளல், மற்றவருக்கு வசதி செய்தல், இரக்கப்படுதல், பிறர் மீது அக்கறை  கொண்டிருப்பது, மற்றவரைக் கவனித்தல் இவையே இரக்க உணர்வின் பட்டியலாகும். இரக்க குணமுடைய மனிதரொருவரிடம், மற்றவரைக் கவனித்தல், மற்றவரிடம் அன்பு செலுத்துதல் முதலியன நம்மையே கவனித்தல், நம்மிடம் அன்பாக இருத்தலின் மூலமாகவே உதிக்கும். நாம் நம்மைப் புரிந்து கொண்டோமேயானால், அது மற்றவர்களையும் புரிந்து கொண்டதற்கு இணையாகும். நாம் மற்றவரை உணர்ந்தோமேயானால், நம்மையே உணர்ந்ததற்கு இணையாகும். ஆக பௌத்தத்தில் ஒரு தனி மனிதனின் சமய உணர்வுகள் மலர்ந்தால், அது இயற்கையாகவே மற்றவரின் நலத்தைப் பற்றி அக்கறை கொள்ளச்செய்யும். இதைப் புத்தபெருமானின் வாழ்க்கை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. புத்தபெருமான் ஆறாண்டுகள் தன் சுயநலத்துக்காக அரும்பாடு பட்டார். அதற்குப் பிறகு இந்த மனித சமுதாயமே பயனடைய அவர் காரணமானார்.

வினா: நமக்கு நாமே உதவிக் கொண்ட பிறகே மற்றவர்களுக்கு உதவச் சொல்கிறீர்கள். இது ஒரு வகைச் சுயநலமாகாதா?

விடை: பொதுவாக நாம் பொதுநல சேவையை (தன் நலம் பேணும் முன் பிறர் நலம் பேணும் தன்மையை) சுயநலத்திற்கு (பிறர் நலம் பேணும் முன் தன் நலம் பேணுவதற்கு) எதிரானதாகக் கருதுகிறோம்.

ஆனால் பௌத்தம் இதனை இதுவா அதுவா என்று ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்காமல் இரண்டும் கலந்த கலவையின் சாரத்தையே விரும்புகிறது. உண்மையான சுயநலக் கவலை படிப்படியாக முதிர்ந்து மற்றவர்களும் நம்மைப் போன்றவர்களே என்ற உணர்வு எழக் காரணமாகிறது. இதுவே உண்மையான இரக்க உணர்வாகும். புத்தபெருமானின் போதனை என்னும் மகுடத்தில் இரக்க உணர்வு என்பது ஒரு மின்னும் வைரமாகும்.

வினா: நீங்கள் இரக்க உணர்வும் அன்பும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி என்று கூறினீர்கள். அவை எப்படி மாறுபடுகின்றன?

விடை: இரண்டும் தொடர்புடையவை என்று சொல்வதே சரியாக இருக்கும். ஆங்கிலத்தில் 'Love' என்ற வார்த்தையால் பல விதமான உணர்ச்சிகளை விவரிக்கலாம். தம்பதியரிடையே உள்ள காதல், பெற்றோரிடம் காட்டும் அன்பு, நம் குழந்தைகளிடம் காட்டும் பாசம், நெருங்கிய நண்பரிடம் காட்டும் நேசம், அண்டை வீட்டாருடன் காட்டும் பிரியம். இந்த உணர்ச்சிகள் எல்லாமே ஒன்றுக்கொன்று சற்று மாறுபட்டவை என்பது தெளிவாகத் தெரியும். அதே சமயம் இந்த உணர்ச்சிகளுக்குப் பொதுவான பல குணங்களும் இருப்பதால் 'Love' என்ற ஒரே வார்த்தையை அனைத்திற்கும் பயன்படுத்துகிறோம். அந்தப் பொதுவான குணங்கள் எவை? ஒருவர் மீது அன்பு கொண்டால் அவர்களுடன் நெருங்கிப் பழகப் பார்க்கிறோம். அவர்கள் மீது நாம் உரிமை கொண்டாடுகிறோம். அவர்கள் நலனில் நமக்கு அக்கறை ஏற்படுகிறது. அவர்களுடை பழக்கங்களும் குணாதிசயங்களும் மற்றவர்களுக்கு எரிச்சல் ஊட்டினாலும் நம்மைப் பாதிப்பதில்லை. நாம் அவர்களுக்கு ஆதரவு காட்ட முயற்சியேதும் செய்யத் தேவையேயில்லை. இயல்பாகவே அது நிகழ்கிறது. மற்றவர்களிடம் இணைந்திருத்தல், தயை, அக்கறை பரிவு போன்ற அனைத்து உணர்வுகளையும் காட்டப் பயன்படும் ஒரே சொல் அன்பு என்பதாகும். இத்தகைய உணர்ச்சிகள் நெருங்கிய உறவினர்களிடம் இயல்பாகவே ஏற்படும். புத்தர் எல்லோரிடமும் இத்தகைய உணர்ச்சிகள் எழ முயற்சிக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

புத்தர் கூறுகிறார்:

'ஒரு தாய் தான் பெற்ற ஒரே குழந்தையை எப்படித் தன் உயிரைத் திரணமாக மதித்துப் பாதுகாப்பாளோ, அதைப் போலவே இந்த உலகில் உள்ள எல்லா உயிரினங்களிடத்தும் எல்லையற்ற அன்பைக் காட்டப் பழகிக் கொள்ள வேண்டும்.'

பௌத்தத்தில் இந்த 'எல்லையற்ற அன்பு  'மெத்தா' என்ற பாலி மொழிச் சொல்லால் அழைக்கப்படும். இடயூறுகளையும் துன்பத்தையும்

அனுபவிக்கும் ஒருவரை நாம் சந்திக்கும் போது, அன்பின் ஒரு குணாதிசயமான 'பிறர் நலனில் அக்கறை' என்பது உறுதி பெற்று இரக்க உணர்ச்சியாக வெளிப்படுகிறது. ஆக இரக்க உணர்ச்சி என்பது ஒரு அன்பு பூண்ட மனம், துக்கம் அனுபவிப்பவரோடு கொண்ட அன்னியோன்னியத்தைக் காட்டுகிறது.

வினா: ஒருவர் அன்போடும் சாந்தமாகவும் இருந்தால் மக்கள் அவர் தலையில் உட்கார்ந்து விடுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

விடை: அப்படியும் நடக்கலாம். மாறாக நீங்கள் சுயநலவாதியாகவும் முரட்டுத்தனமானவராகவும் இருந்தாலும் அப்படிச் செய்பவர்கள் இருப்பார்கள். ஏனெனில் உங்களைவிட முரடர்களும், அச்சுறுத்துகிறவர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்வார்கள். இருக்க மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் ஏதும் இல்லை. சிலர் உங்கள் நல்ல குணத்தை அவர்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டாலும், அதே சமயம் பலர் உங்கள் உயர்குணத்தை உணர்ந்து உங்களுக்குரிய மரியாதை அளிப்பார்கள். எப்போதுமே உங்களைப் பிடிக்காதவர்களைவிட உங்களுக்கு நண்பர்களும், உதவி செய்பவர்களும் அதிகம் இருப்பார்கள். மேலும் உங்களுக்குப் பிடிக்காதவர்களைப் போலவே நீங்களும் ஏன் மாற வேண்டும்?

ஒரு பழைய பௌத்த புத்தகம் இவ்வாறு அறிவுரை கூறுகிறது:

'ஒரு கீரி, பாம்பை அணுகுமுன் தன் உடல் பாதுகாப்புக்கு ஒரு மருந்தை அருந்தி விட்டுத் தான் செல்கிறது. அதைப் போல ஒரு அறிவாளி, தியானம் செய்பவன், உலகை அணுகுமுன் அதில் உள்ள கோபம், பொறாமை, சண்டை சச்சரவுகள், வெறுப்பு போன்றவைகளால் அவன் பாதிக்கப்படாமல் இருக்க, அன்பு என்ற மருந்தை மனதில் நிறைத்துத் தான் அணுக வேண்டும்.'

* * * * * * * *

## 8. மரக்கறி உணவுமுறை

வினா: பௌத்தர்கள் மரக்கறி உணவு உண்பவர்களாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தானே?

விடை: அவசியமில்லை! புத்த பெருமான் மரக்கறி உணவாளர் அல்லர். புத்த பெருமான் அவர்தம் மாணவர்களை மரக்கறியுணவு மட்டும் உண்ணச் சொல்லவில்லை. இன்றும் பல நல்ல பௌத்தர்கள் மரக்கறி உணவுமட்டும் உண்பவர்களல்லர்.

பௌத்த நூட்களில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது:

"முரட்டுத்தனமுடையவராயும், இரக்கமற்றவராயும் இருப்பதும், ஒருவரைக் காணாதபோது பழியுரைப்பதும், ஒருவரின் நண்பர்களுக்குத் துன்பம் விளைவிப்பதும், கல்நெஞ்சுடையவராய் இருப்பதும், அகந்தையுடனும், பேராசையுடனும் இருப்பதும் - இவையே ஒருவரை தூய்மையற்றவராக்குகிறது. புலால் உண்பதால் ஒருவர் ஒழுக்கங்கெட்டவராவதில்லை.

நெறிகெட்ட நடத்தையும், வாங்கிய கடனைத் திருப்பித் தராததும், தொழில் முறையில் ஏமாற்றுவதும், மக்களிடையே பிளவை உண்டாக்குவதும் - இவையே ஒருவரைத் தூய்மையற்றவராக்குகிறது. புலால் உண்பதால் ஒருவர் ஒழுக்கங்கெட்டவராவதில்லை.

வினா: நீங்கள் புலால் உண்டால் மறைமுகமாக ஓருயிரின் சாவுக்குக் காரணமாக மாட்டீர்களா? இச்செய்கை முதல் நல்லொழுக்கத்தை மீறியதாக ஆகாதா?

விடை: நீங்கள் புலால் சாப்பிட்டால் ஓருயிரின் சாவுக்கு மறைமுகமாகவும், பகுதியாகவும் காரணமாகிறீர்கள். அதே சமயத்தில் காய்கறி உணவு உண்ணும் போதும் ஓருயிரின் சாவுக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள் என்பதும் உண்மைதான். விவசாயி பூச்சிக் கொல்லி மருந்துகளையும், நச்சுக் கலவையையும் பயிர்களின் மேல் தெளிப்பதால் காய்கறிகள் துளைகள் ஏதுமின்றி நம் உணவாகின்றன. மேலும் விலங்குகள் கொல்லப்படுவதால்தான், உங்களுக்கு இடைவார்கள்,

கைப்பை, எண்ணெய், சோப்பு மற்றும் நாம் உபயோகிக்கும் ஆயிரக்கணக்கான பொருள்கள் கிடைக்கின்றன. மற்ற உயிர்களின் மரணத்துக்கு மறைமுகமாகவோ, பகுதியாகவோ காரணமாகாமல் வாழ்வோமென்பது இயலாத காரியம். அடுத்து, உயிரினமாகப் பிறந்து விட்டால், புத்த பெருமான் போதித்த நான்கு பேருண்மைகளில் ஒன்றான, முதல் உண்மையான எல்லா உயிர்களும் அனுபவிப்பது "துக்கம்" என்பது உறுதியானது.  முதல் நல்லொழுக்கத்தை ஏற்கும் போது நாம் நேரடியாக எந்த உயிரையும் கொள்ளுதலைத் தவிர்க்க முற்படுகிறோம்.

வினா: மகாயானப் பௌத்தப் பிரிவினர் புலால் உண்பதில்லையல்லவா?

விடை: அப்படிச் சொல்வது சரியல்ல. சீனநாட்டு மகாயானப் பௌத்தர்கள் மரக்கறியுணவையே வலியுறுத்துகின்றனர். ஆனால், ஜப்பான், மங்கோலியா மற்றும் திபெத்து நாட்டைச் சேர்ந்த பௌத்தத் துறவிகளும் இல்வாழ்வோரும் வழக்கமாகவே புலால் உண்கின்றனர்.

வினா: இருந்தாலும் பௌத்தர்கள் மரக்கறியுணவு உண்பவர்களாக இருப்பதையே நல்லதென்று நான் நினைக்கிறேன்.

விடை: ஒருவன் மிகக் கடுமையான மரக்கறியுணவு உண்பவனாக இருந்தும்,  சுயநலக்காரனாகவும், நேர்மையற்றவனாகவும், கேவலமானவனாகவும் இருந்து மற்றொருவன் புலால் உண்பவனாக இருந்தும், மற்றவர்களைப் பற்றிச் சிந்திப்பவனாக, நேர்மையானவனாக எல்லாரிடத்திலும் அன்பு செலுத்துபவனாக இருந்தால், இவ்விருவரில் எவன் சிறந்த பௌத்தனாவான்?

நேர்மையானவனும் அன்பு கொண்டவனும் தான்.

ஏன்?

அப்படிப்பட்ட ஒருவன் தெள்ளத்தெளிவான நல்ல மனத்தைக் கொண்டவனாவான்.

மிகவும் சரி. புலால் உண்ணும் ஒருவன் தூய்மையான மனத்தை

உடையவனாகவும், புலால் உண்ணாத ஒருவன் தூய்மையற்ற மனத்தை உடையவனாகவும் இருக்கலாம். புத்தபெருமானின் போதனைகளில் முக்கியமானது உங்கள் மனத்தின் தன்மையே. உங்கள் உணவில் என்ன கலந்திருக்கிறது என்பதல்ல. பல பௌத்தர்கள் புலாலைத் தவிர்ப்பதில் மிகத் தீவிரமாக இருக்கிறார்கள். ஆனால், சுயநலக்காரர்களாக இருப்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை! நேர்மையற்றவர்களாகவும், கொடுமையானவர்களாகவும், பொறாமைக் காரர்களாகவும் இருக்கிறார்கள்! அவர்கள் மிகச் சுலபமாகக் கடைப்பிடிக்கக் கூடிய உணவு முறையை மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால், தங்கள் மனத்தை மாற்றிக் கொள்ள முடிவதில்லை. அது அவர்களுக்குச் சிரமமாகத் தோன்றுகிறது. நீங்கள் புலால் உண்பவரோ, இல்லையோ ஆனால் பௌத்த சமயத்தில் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதே முக்கியமாகும்.

வினா: ஆனால் பௌத்தர்களின் நோக்கின்படி, நல்ல உள்ளம் கொண்ட மரக்கறி உண்பவர், நல்ல உள்ளம் கொண்ட புலால்  உண்பவரை விட மேலோங்கியவர் தானே?

விடை: நல்ல உள்ளம் கொண்ட மரக்கறி உண்பவரின் நோக்கம் என்ன என்பது முக்கியம். இக்காலத்தில் புலால் உணவு உற்பத்தியாகும் தொழிற்சாலைப் பண்ணைகளில்  மிருகங்கள் கொடூர வாழ்வு வாழ்கின்றன. (சான்றாக இக்காலக் கோழிப் பண்ணைகளில் சிறு கூண்டுகளில்  இரண்டு மூன்று கோழிகள், மூக்கு வெட்டப் பட்டு, வாழ்நாள் முழுதும் சிறகு விரிக்கக்கூட முடியாமல்  வதைப் படுகின்றன.) இப்படிப்பட்ட பண்ணைகளின் கொடூரத்தோடு தொடர்பேதும் வைத்துக்கோள்ள வேண்டாமென்பதாலும், மிருகங்களின் மீதான அக்கரையுமே  மரக்கறி உண்பரின் நோக்கமென்றால் அவர் தனது இரக்கவுணர்வை புலால் உண்பவரை விட மேலோங்கி வளர்த்துக் கொண்டுள்ளார் என்று தான் சொல்லவேண்டும். பலரும் அவர்கள் உள்ளத்தில் தம்மம் வளர இயல்பாகவே மரக்கறி உண்பவர்களாக மாறுகிறார்கள்.

வினா: புத்தர் கெட்டுப்போன பன்றிக் கறி உண்டதனால் தான் இறந்தார் என்று கேள்விப்பட்டேன். இது உண்மையா?

விடை: இல்லை, உண்மை இல்லை. பௌத்த சமய அறநூல்களின்படி புத்தரின் கடைசிச் சாப்பாடு 'சுகர மத்தாவா' என்ற உணவு கொண்டதாகக் கூறப்படுகிறது. இதன் பொருள் இன்றைக்குத் தெளிவாகத் தெரியவில்லை. 'சுகர' என்றால் பன்றி, எனவே பன்றிக்கறி கொண்ட உணவாக இருக்கலாம். ஆனால் அது ஒரு வகையான காய்கறிப் பொரியலாகவோ ஒரு வகைப் பண்டமாகவோகூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் இந்த உணவின் பெயர் குறிப்பிட்டிருப்பதால் அது தான் புத்தரின் இறப்பிற்குக் காரணம் என்று சிலர் நினைக்கின்றனர். புத்தர் அவரது 80 ஆவது வயதில் இறக்கும் போது சில காலமாக உடல் நலம் சரியில்லாமல் இருந்தார். உண்மையென்னவென்றால் அவர் வயோதிகத்தினால் தான் இறந்தார்.

* * * * * * * *

## 9. நல்லதிர்ஷ்டமும் விதியும்

வினா: புத்த பெருமான் மாயமந்திரங்களைப் பற்றியும் ஊழ் அல்லது விதியைப் பற்றியும் என்ன கூறுகிறார்?

விடை: அதிர்ஷ்டத்தைப் பற்றிக் கூறுவது, பாதுகாப்புக்காக மந்திரிக்கப்பட்ட தாயத்துகளைக் கட்டுவது, வீடுகட்டுவதற்கு அதிர்ஷ்டமான மனைகளைத் தேர்ந்தெடுப்பது; வருவதுரைப்பது, அதிர்ஷ்டமான நாட்களை நிர்ணயிப்பது போன்றவை மூட நம்பிக்கைகளென்றும், அவற்றைத் தவிர்க்கு மாறும் புத்த பெருமான் தம் மாணவர்களுக்கு கட்டளையிட்டார். இவற்றை அவர் "கேவலமான கலைகள்" என வருணித்தார்.

"சில சமயவாதிகள் தாம் வாழ்வதற்காக வேண்டி அவர்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு உணவளிப்பவர்களுக்குக் கீழ்த்தரமான கலைகளான கைரேகை பார்த்துச் சொல்லல், சகுனங் கூறல், கனவுகளைப்பற்றிப் பலன் கூறல், நல்ல, தீய அதிர்ஷ்டங்களைக் கொண்டு வருதல், அதிர்ஷ்ட தேவதையை வணங்குதல், வீடுகட்ட அதிர்ஷ்டமான மனையைத்

தேர்ந்தெடுத்தல் போன்றவற்றைக் கௌதம முனிவர், கேவலமான கலையென்றும், தவறான வாழ்க்கை முறையென்றும் கூறினார்."

வினா: அப்படியென்றால், ஏன் மக்கள் சில சமயங்களில் அவற்றின் மீது நம்பிக்கை கொண்டு அவற்றைச் செய்கிறார்கள்?

விடை: பேராசை, பயம், அறியாமை ஆகியவை ஆட்கொண்டு இருப்பதால் அவற்றைச் செய்கிறார்கள்! மக்கள் புத்தபெருமானின் போதனைகளை நன்கு அறிந்து, புரிந்து கொண்டவுடன் தூய்மையான உள்ளம் பெற்று விட்டால், இவற்றைத் துண்டுக் காகிதங்களாக, உலோகத் தகடுகளாக, முணு முணுக்கும் சொற்களாக நினைத்து இவற்றை நம்பாது நிராகரித்து விடுவார்கள். புத்த பெருமானின் போதனைப்படி நேர்மை, இரக்கம், புரிந்து கொள்ளல், பொறுமை, மன்னித்தல், பெருந்தன்மை, உண்மை போன்ற நற்குணங்களே உங்களை உண்மையில் பாதுகாத்து உண்மையான முன்னேற்றத்துக்கு அழைத்துச் செல்லும்.

வினா: சில அதிர்ஷ்ட வசியங்களும் தாயத்துகளும் பலனளிக்கின்றனவே, இல்லையா?

விடை: எனக்குத் தெரிந்த ஒருவன் தாயத்துகளை விற்றே வாழ்க்கை நடத்துகிறான். அவனுடைய தாயத்துகள் நல்லதிர்ஷ்டத்தையும், முன்னேற்றத்தையும் கொண்டு வருமெனக் கூறுகிறான். உங்களுக்கு வெற்றி தரும் லாட்டரி  எண்களை உங்களால் தேர்ந்தெடுக்க முடியுமென உறுதி கூறுகிறான். அவன் கூறுவது உண்மையாக இருந்தால், அவன் ஏன் கோடீசுவரனாகக் கூடாது? அவனுடைய அதிர்ஷ்டத் தாயத்துகள் உண்மையிலேயே வேலை செய்தால் அவனுக்கு ஏன் வாரந்தோறும் லாட்டரி அடிக்கக் கூடாது? அவனுக்குள்ள ஒரே அதிர்ஷ்டம் என்னவென்றால் அவனிடம் தாயத்துகளை வாங்கப் போதுமான அளவில் மூடத்தனமான மக்கள் இருக்கிறார்கள்.

வினா: அதிர்ஷ்டம் என்று ஒன்றிருக்கிறதா?

விடை: அகராதியில் அதிர்ஷ்டம் என்னும் சொல்லுக்குப் பொருள், மனித வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு, அது நன்மையோ, தீமையோ அவை சந்தர்ப்பத்தால், விதியால், நல்வினையால் நடப்பதாக நம்புவது எனக் கூறப்படுகிறது. புத்தபெருமான் இதனை முழுமையாக நிராகரித்துவிடுகிறார். நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் காரண காரியத் தொடர்பிருக்கும். சான்றாக நோய் வருவதற்கு ஒரு காரணமிருக்கும். ஒருவன் கிருமிகளால் தாக்கப்பட்டிருக்கலாம். அல்லது கிருமிகள் அவனை எளிதாகத் தாக்குவதற்கேற்ப அவன் உடல் நலிவுற்றிருக்கலாம். அதனால், நிகழ்ச்சிக்கும் (நோய்) காரணத்துக்கும் (கிருமிகள் அல்லது நலிவுற்ற உடல்) தொடர்பிருப்பது நமக்குத் தெரிகிறது. இரத்த அணுக்களைக் கிருமிகள் தாக்கி நோய்வர வைக்கின்றன. ஆனால் ஒரு தாளிலோ, தகட்டிலோ ஏதோ ஒன்றை எழுதி அதைத் தாயத்தில் அணிந்து கொண்டு பணக்காரனாகிவிடலாம்; தேர்வில் வெற்றியடைந்துவிடலாம் என்றால் இவ்விரண்டுக்கும் என்ன தொடர்பிருக்கிறது?

எவையெவை நிகழ்கின்றனவோ அவையெல்லாம் காரண காரியத் தொடர்புடையவை; அதிர்ஷ்டத்தாலோ 'சந்தர்ப்பத்தாலோ' விதியாலோ அல்ல எனப் பெளத்தம் நமக்குப் போதிக்கிறது. அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை யுள்ளவர்கள் எதையாவது பெறவே அலைவார்கள். (வழக்கமாக அதிகப்பணம், செல்வம் முதலியனவற்றையே). புத்தபெருமான் நம் உள்ளத்தைத் தூய்மையாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்கிறார். அவர் கூறுகிறார்:

'ஆழமாகவும் திறமையாகவும் படித்து நல்லமுறையில் பயின்று நல்வார்த்தைகளைப் பேசினால் அதுவே நமக்குச் சிறந்த நல்லதிர்ஷ்டமாகும்.

தாய் தந்தையரைப் பேணி, மனைவி குழந்தைகளிடம் அன்புடன் ஒழுகி எளிமையான வாழ்வு வாழ்ந்தால் அதுவே நல்லதிர்ஷ்டமாகும்.

ஈகைக் குணமுடனும், நேர்மையுடனும் உறவினர்களைப் போற்றிப் பழிச்சொல்லற்ற செய்கைகளைச் செய்தால் அதுவே நல்லதிர்ஷ்டமாகும்.

தீமையிலிருந்து விலகி, போதை தரும் குடியை விலக்கி எப்பொழுதும்

ஒழுக்கத்துடனிருந்தால் அதுவே நல்லதிர்ஷ்டமாகும்.

மரியாதையுணர்வு, அடக்கம், மனத்திருப்தி, நன்றி, நல்ல அறவுரைகளைக் கேட்டல் இவையே சிறந்த நல்லதிர்ஷ்டமாகும்.'

* * * * * * * *

10. ஆண் மற்றும் பெண் துறவிகள்

வினா: துறவிகள் சங்கம் பௌத்தத்தில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. ஆண் மற்றும் பெண் துறவிகளின் நோக்கம் என்ன? அவர்கள் என்ன செய்கின்றனர்?

விடை: ஆன்மீக வளர்ச்சிக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே துறவிகள் சங்கத்தினைப் புத்தர் உருவாக்கினார். இல்லற மக்கள் துறவிகளின் அடிப்படைத் தேவைகளை - உணவு, உடை, இருப்பிடம், மருந்து ஆகியவற்றை - பூர்த்தி செய்கின்றனர். இதனால் துறவிகளால் ‘தம்ம’ நெறிகளைக் கற்பதிலும், பயிற்சி செய்வதிலும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள முடிகிறது. சங்கத்திலுள்ள நெறிப்படுத்தப்பட்ட எளிமையான வாழ்க்கை முறை மன அமைதிக்கும் தியானம் செய்யவும் ஏற்றதாயுள்ளது. பதிலுக்குத் துறவிகளும் தாங்கள் பெற்ற நுண்ணறிவைச் சமுதாயத்தோடு பகிர்ந்து கொள்கின்றனர். மேலும் ஒரு நேர்மையான பௌத்தர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாகவும் வாழ்கின்றனர். ஆனால் இன்றைய நடைமுறையில் புத்தர் நினைத்த இந்த அடிப்படைச் சேவையோடு நில்லாமல், துறவிகள் பள்ளி ஆசிரியர்களாகவும், சமூக சேவையாளர்களாகவும், கலைஞர்களாகவும், மருத்துவர்களாகவும், ஏன் அரசியல்வாதிகளாகவும் கூட இருக்கின்றனர். ஒருசாரார் இத்தகைய செயல்கள் பௌத்தத்தை வளர்க்க உதவுமேயானால் அதில் ஒன்றும் தவறில்லை என்று வாதிடுகின்றனர். வேறு சிலரோ துறவிகள் இவ்வாறு செய்வதால் உலக நடைமுறைப் பிரச்சனைகளில் ஆழமாகச் சிக்கிச் சுழல நேரிட்டுத் துறவறம் பூண்டதன் நோக்கத்தினையே மறந்து விடக் கூடும்

எனச் சுட்டிக் காட்டுகின்றனர்.

வினா: எத்தகைய இயல்புகொண்ட ஒருவர் துறவி ஆகிறார்?

விடை: ஒவ்வொரு மனிதருக்கும் பல்வேறு துறைகளில் பற்றிருந்தாலும் - குடும்பம், தொழில், பொழுது போக்குதல், அரசியல் போன்றவை - இவற்றுள் ஏதேனும் ஒன்றில் மட்டுமே சிறப்பான ஈடுபாடு இருக்கும். பொதுவாக இது குடும்பம் அல்லது தொழில் மீதான பற்றாக இருக்கும். மற்றவை முக்கிய மற்றவையாக இருக்கும். புத்தரின் போதனைகளைப் படிப்பதும் பயிற்சி செய்வதும் மிக முக்கியம் வாய்ந்ததாகவும், மற்ற எல்லாவற்றையும் விட முதன்மையானதாகவும் ஒருவர் வாழ்வில் அமைந்தால்,அத்தகைய ஒருவர் துறவியாக விருப்பப்படலாம்.

வினா: ஞானம் பெறத் துறவியாகத்தான் இருந்தாக வேண்டுமா?

விடை: இல்லை, கண்டிப்பாக இல்லை. புத்தரின் மேன்மையான சீடர்களில் பலர் இல்லற வாழ்வு நடத்திய ஆண்களும், பெண்களுமே ஆவர். சில இல்லறவாசிகள் துறவிகளுக்குக் கற்றுத்தரத்தக்க அளவிற்கு மிகச் சிறந்த ஆன்மிக அறிவு முதிர்ச்சி பெற்றிருந்தனர். பௌத்தத்தில் புத்தரின் போதனைகளைப் புரிந்து கொள்ளும் தரம் எந்த அளவிற்கு உள்ளது என்பதே முக்கியம். மஞ்சல் ஆடை அணிந்திருக்கிறோமா அல்லது நீல நிற ஜீன்ஸ் அணிந்திருக்கிறோமா என்பதோ, விகாரையில் தங்கியிருக்கிறோமா அல்லது வீட்டில் தங்கியிருக்கிறோமா என்பதோ முக்கியமில்லை. சிலருக்கு விகாரையில் உள்ள வசதிகளும் வாய்ப்புகளும் ஆன்மீக வளர்ச்சிக்கு உகந்த இடமாகத் தோன்றலாம். வேறு சிலருக்கோ இல்லர வாழ்வின் சுக துக்கங்களோடு வீட்டில் வாழ்வதே உகந்ததாகத் தெரியும். எல்லோரும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவர்கள் தான்.

வினா: பௌத்த துறவிகள் மஞ்சல் ஆடை அணிவதேன்?

விடை: பண்டைக் காலத்தில் வாழ்ந்த இந்தியர்கள் காட்டில் உள்ள

மரங்களைக் கவனிக்கும்போது எந்த இலைகள் விழும் நிலையில் இருக்கின்றன என்பதை இலையின் நிறத்தை வைத்தே கூறி விடுவர். ஏனெனில், அவை மஞ்சல், செம்மஞ்சல் அல்லது பழுப்பு நிற இலைகளாகவே இருக்கும். அதன் விளைவாக இந்தியாவில் பற்றறுத்த துறவிகளின் உடை மஞ்சல் நிறத்தில் அமைந்தது. துறவிகளின் ஆடைகள் மஞ்சல் நிறத்தில் இருப்பதால் அவர்களுக்கு அது எந்நேரமும் பற்றற்றிருக்கவும், (மனச் சஞ்சலங்களைக்) கைவிடவும், (ஆசைகளை) விட்டு விடவும் நினைவு படுத்தும் சின்னமாக இருக்கிறது.

வினா: துறவிகள் தலை முடியை மழித்துக் கொள்வது ஏன்?

விடை: பொதுவாக நாம் நமது தோற்றத்தில், குறிப்பாக நம் தலை முடியின் தோற்றத்தில் மிகவும் அக்கறை உள்ளவராக இருக்கின்றோம். பெண்கள் நல்ல தலைஅலங்காரம் செய்து கொள்வது மிக முக்கியமெனக் கருதுகின்றனர். ஆண்களும் தங்களுக்கு எங்கே வழுக்கை விழுந்து விடுமோ என்று மிகவும் கவலைப் படுகின்றனர். தலை முடியை அலங்கரிப்பதற்கே அதிக நேரத்தைச் செலவு செய்கிறோம். எனவே துறவிகள் தங்கள் முடியை மழித்துக் கொள்வதன் மூலம் முக்கியத்துவம் மிக்க செயல்களில் ஈடுபட அதிக நேரத்தை ஒதுக்க முடிகிறது. மேலும் தங்கள் கவனத்தைப் புறத் தோற்றத்தின்பால் திருப்பாமல், உள் நோக்கி 'அகத்தூய்மை செம்மையுறச் செலுத்த வேண்டும்' என்ற கருத்துக்கு மழித்த தலை ஒரு அடையாளச் சின்னமாகவும் விளங்குகிறது.

வினா: துறவறம் பூணுவதெல்லாம் சரி தான். ஆனால் அனைவரும் துறவிகளாய் விட்டால் உலகம் என்னாவது?

விடை: எந்தத் தொழிலைப் பற்றியும் இதே கேள்வியைக் கேட்கலாம் அல்லவா? 'பல் மருத்துவர் ஆவதெல்லாம் சரி தான். ஆனால் அனைவரும் பல் மருத்துவரானால் என்னாவது? ஆசிரியர்கள், சமையற்காரர், டேக்ஸி ஓட்டுனர் எவரும் இருக்க மாட்டார்கள்.' 'ஆசிரியர் ஆவதெல்லாம் சரி தான். ஆனால் அனைவரும் ஆசிரியரானால் என்னாவது? பல் மருத்துவர் போன்றவர்களெல்லாம் இருக்க மாட்டார்களே?' இப்படி எந்தத்

தொழிலைப்பற்றியும் சொல்லிக் கொண்டே போகலாம். புத்தர் அனைவரும் துறவிகளாக வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படி நடக்கப் போவதும் இல்லை. அதே சமயம் ஒரு சிலர் எளிய வாழ்க்கையை விரும்புகின்றனர். அவர்களுக்குப் பொருள் சேர்க்கும் ஆசையும் இல்லை. புத்தரின் போதனைகள் மற்ற எல்லாவற்றையும் விட அவர்களுக்குப் பெருமகிழ்ச்சியூட்டுகிறது. பல் வைத்தியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இருப்பதைப் போல அவர்களுக்கும் தனித் திறமையும் அறிவும் இருப்பதால் அவர்கள் வாழும் சமூகத்திற்கு உதவி செய்ய முடிகிறது.

வினா: தரும போதனை தந்து, புத்தகங்களை எழுதி, சமூக சேவை செய்யும் துறவிகள் சமூகத்திற்கு உதவுபவர்களாக இருக்கலாம். ஆனால் தியானம் மட்டுமே செய்து, வேறு எதுவும் செய்யாத துறவிகளால் சமுதாயத்திற்கு என்ன பயன்?

விடை: தியானம் செய்யும் துறவியை ஒரு ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானியோடு ஒப்பிடலாம். ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிக்கு சமுதாயம் உதவிபுரிகிறது. அத்தகைய விஞ்ஞானி ஆய்வுக் கூடத்தில் அமர்ந்து ஆய்வு செய்கிறார். என்றாவது ஒரு நாள் புதிதாக ஒன்றைக் கண்டு பிடித்தால் அது சமுதாயத்திற்கு பயனளிக்கும் கண்டுப்பிடிப்பாக இருக்கக்கூடும் எனச் சமுதாயம் உதவி செய்கிறது. அதைப்போலவே பௌத்த சமூகமும் தியானிக்கும் துறவியின் தேவையை (அவர்களின் தேவைகள் மிகக் குறைவே) பூர்த்தி செய்கிறது. அவரும் ஒரு நாள் மெய்யறிவும் நுண்ணறிவும் பெற்று அனைவருக்கும் அதைப் போதித்து நன்மை புரிவார் என்று நம்புகிறது. மேலும் அந்த மெய்யறிவை அவர் பெறும் முன்னரே, அல்லது பெறாவிட்டாலும் கூட அவரால் மற்றவர்களுக்கு நன்மை புரிய முடிகிறது. எப்படி? நவ நாகரிகமிக்க இக்காலத்தில் 'செல்வந்தர்களின் அல்லது புகழ் வாய்ந்தவர்களின் நடத்தையும் போக்கும்' நமக்கு எடுத்துக்காட்டாகத் தொலைக்காட்சிகளிலும் பத்திரிக்கைகளிலும் சித்தரிக்கப் படுகிறது. 'நடிக நடகையரின் திருமண வரவேற்பு' என்ற தலைப்பில் தொலைக்காட்சியில் தொடர் காட்சிகளைப் பார்க்கிறோம். ஊதாரித்தனமான வாழ்க்கை, எல்லை மீறிச் செலவு செய்வது, விருப்பம் போலச் செயற்படுவது, டாம்பீக ஆடம்பர

வாழ்க்கை - இவை தான் நாம் மிகச் சிறந்ததாகக் கருத வேண்டும் என்று நினைக்கத் தோன்றும். தியானம் செய்யும் துறவி நமக்கு ஒரு சிறந்த உதாரணமாக இருக்கின்றார். மகிழ்ச்சியான, மன நிறைவான வாழ்க்கைக்கு ஒருவர் செல்வச் செழிப்போடு இருக்க வேண்டு மென்பதில்லை என்பதை அவர் நினைவூட்டுகிறார். அமைதியான, அன்பான, எளிமையான வாழ்க்கை முறையிலும் பயன் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்..

வினா: பௌத்தப் பெண் துறவிகள் இக்காலத்தில் இல்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மையா?

விடை: புத்தர் அவர் வாழ்நாளிலேயே பெண் துறவிகளுக்கான சங்கத்தினை உருவாக்கினார். அதன் பின் ஐந்தாறு நூற்றாண்டுகளுக்குப் பெண் துறவிகளும் பௌத்தம் பரவ முக்கியக் காரணிகளாக இருந்தார்கள். ஆனால், ஏன் என்று தெளிவாகத் தெரியவில்லை, பெண் துறவிகளுக்கு ஆண் துறவிகளுக்குக் கிடைத்தது போன்ற கௌரவமோ உதவியோ கிடைக்க வில்லை. இந்தியாவிலும், இலங்கையிலும், திபெத்திலும், தென் கிழக்கு ஆசியாவிலும் பெண் துறவிகள் சங்கம் பின்னர் அழிந்துபோய் விட்டது. எனினும் தாய்வானிலும், கொரியாவிலும், ஜப்பானிலும் பெண் துறவிகள் சங்கம் சிறப்பாகத் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இன்று இலங்கையில் பெண் சங்கத்தை மீண்டும் நிலை நாட்டத் தாய்வானில் உள்ள பெண் துறவிகள் மூலம் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. இதைச் சில சம்பிரதாயப்படி நடப்பவர்கள் விரும்ப வில்லை. ஆனால், புத்தரின் எண்ணப்படி, பெண் துறவிகளும் ஆண் துறவிகள் பெறும் துறவறம் புகும் வாய்ப்பைப் பெற்று, அதன் பலனை அனுபவிப்பது தான் சரி.

* * * * * * * *

## 11. பௌத்த சமய நூட்கள்

வினா: கிட்டத்தட்ட எல்லா மதங்களிலும் சமய நூட்கள் உள்ளன. பௌத்த

சமய நூட்கள் எவை?

விடை: பௌத்த சமயப் புனித நூல் திரிபிடகம் என்று அழைக்கப்படும். பண்டைய இந்திய மொழியான பாலி மொழியில் இது எழுதப்பட்டது. இந்த மொழி கிட்டத்தட்டப் புத்தர் பேசிய மொழிக்கு நெருங்கிய மொழியாகும். திரிபிடகம் ஒரு மிகப் பெரிய புத்தகம். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு ஏறத்தாழ 40 தொகுதிகள் கொண்டதாகும்.

வினா: திரிபிடகம் என்பதற்கு என்ன பொருள்?

விடை: பாலியில் தி என்றால் 'மூன்று'. பிடகம் என்றால் 'கூடை'. இந்தப்பெயரின் முதல் பாகம் இப்புனித நூலில் மூன்று பகுதிகள் இருப்பதைக் குறிக்கிறது. சுட்ட பிடகம் என்று அழைக்கப்படும் முதல் பகுதியில் புத்தரின் அனைத்துப் போதனைகளும் அவரின் ஞானம் பெற்ற சீடர்களின் சில போதனைகளும் அடங்கியுள்ளன. இந்தப் பகுதியில் உள்ள போதனைகள் பல தரப்பட்ட கருத்துக்களைக் கொண்டவை. இத்தகைய போதனைகளால் புத்தர் மாறுபட்ட பல்வேறு மக்களுக்கும் வாய்மையைப் (தர்மத்தை) போதிக்க முடிந்தது. பல போதனைகள் சமய உரைகளாகவும், மற்றவை உரையாடல் வடிவிலும் உள்ளன. தம்மபதம் போன்ற பிற பகுதிகள் கவிதை வடிவில் உள்ளன. மிருகங்களை முக்கிய பாத்திரங்களாகக் கொண்ட மகிழ்ச்சியூட்டும் ஜாதகக் கதைகளும் சுட்டப் பிடகத்தில் அடங்கும்.

திரிபிடகத்தின் இரண்டாம் பகுதி வினய பிடகம் என்று அழைக்கப்படும். துறவிகளுக்கு வரையறுக்கப்பட்ட நியதிகளும், நடைமுறை விதிகளும், விகாரையை நிர்வகிக்கத் தேவையான அறிவுரைகளும், விதிமுறைகளும், சங்கத்தின் ஆரம்ப கால வரலாறும் அடங்கியது வினய பிடகம்.

திரிபிடகத்தின் மூன்றாம் பகுதி அபிதம்ம பிடகம் என்று அழைக்கப்படும். தனிநபரை நிர்மாணிக்கும் அங்கங்களைத் தர்க்கரீதியில் வகைப்படுத்தி நுணுகி ஆராயும் சிக்கலான முயற்சி இது. அபிதம்ம பிடகம் திரிபிடகத்தின் முதல் இரண்டு பகுதிகளுக்குப் பின்னர் உருவாகியதென்றாலும் அவைகளுக்கு முரண்பாடாக எதுவும் இதில் சொல்லப்படவில்லை.

'பிடகம்' என்ற வார்த்தையை ஆராய்வோம். பண்டைய இந்தியாவில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மூலப் பொருட்களைக் (மணல், செங்கல் போன்றவற்றை) கூடைகளில் எடுத்துச் செல்வது வழக்கம். கூடைகளைத் தலையில் சுமந்து கொண்டு சிறிது தூரம் நடந்து அடுத்தவரிடம் கொடுத்துவிட்டுத் திரும்புவார்கள். கூடையைப் பெற்றவரும் அதைப் போலவே சிறிது தூரம் நடந்து இன்னொருவரிடம் கூடையை ஒப்படைப்பார். புத்தரின் காலத்தில் எழுத்துக்கள் கண்டு பிடிக்கப் பட்டிருந்தாலும் எழுதி வைப்பதை விட நினைவில் கொள்வதைத்தான் நம்பகமான ஊடகமாகக் கருதினார்கள். எழுதப்பட்ட புத்தகங்கள் மழைக் காலத்தில் நைந்து போய் விடலாம் அல்லது கரையானால் அரிக்கப்பட்டு அழிந்து போகலாம் . ஆனால் மனித நினைவாற்றலோ உயிருள்ள வரை நீடிக்கும். அதனால், துறவிகள் புத்தரின் போதனைகளை மனப்பாடம் செய்து ஒருவரிடமிருந்து மற்றவருக்கு, கட்டுமானப் பணித் தொழிலாளர்கள் கூடைகளில் மண்ணையும், செங்கற்களையும் ஒருவரிடமிருந்து மற்றவர் பெற்றுக் கொள்வதைப் போலவே, பரிமாறிக் கொண்டனர். இதன் காரணமாகவே திரிபிடகத்தின் மூன்று பகுதிகளும் 'பிடகம்' அதாவது கூடைகள் என்று அழைக்கப் படுகின்றன. பல நூற்றாண்டுகள் கழித்துத் திரிபிடகம் சுமார் கி.மு 100 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏட்டிலும் எழுதி வைக்கப்பட்டது. இதற்கு முன்னரே இந்தியாவிலும் எழுதிவைக்கப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வினா: சமய நூட்கள் நினைவிலேயே அத்தனை காலம் பாதுகாக்கப் பட்டிருந்தால் அது நம்பகத்தன்மை கொண்டதாகக் கருத முடியாதே? புத்தரின் போதனைகள் பலவும் தொலைந்தோ அல்லது திரிபடைந்தோ இருக்கலாமே?

விடை: திரிபிடகத்தைப் பாதுகாப்பது துறவிகள் சங்கத்தின் கூட்டு முயற்சியாக இருந்தது. அவர்கள் அவ்வப்போது சந்தித்துத் திரிபிடகத்தின் ஒரு பகுதியையோ, முழுவதுமாகவோ ஓதுவார்கள். இதனால் புதிதாக எதையும் சேர்க்கவோ மாற்றவோ முடியாததாக ஆகிவிட்டது. இப்படி யோசித்துப் பாருங்கள்.ஒரு நூறு பேருக்கு ஒரு பாடல் மனப்பாடமாகத்

தெரிகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அவர்கள் ஒன்றாகப் பாடிக்கொண்டிருக்கும் போது ஒருவர் மட்டும் அதை மாற்றிப் பாடினாலோ அல்லது எதையாவது சேர்க்க முயன்றாலோ என்ன ஆகும்? சரியாகப் பாடும் பெரும்பான்மையினர் மாற்றத்தை அனுமதிக்கமாட்டார்களல்லவா? மேலும் அக்காலத்தில் கவனத்தைத் திசை திருப்பவோ மனக் குழப்பம் உண்டாக்கவோ தொலைக்காட்சி, பத்திரிக்கைகள், விளம்பரங்கள் என்று எதுவுமே இல்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். அதன் காரணமாகவும் துறவிகள் தியானத்தில் ஈடுபட்டிருந்ததாலும் அவர்களுக்கு மிகச் சிறப்பான நினைவாற்றல் இருந்தது. இப்போது திரிபிடகம் புத்தக வடிவில் கிடைத்தும், திரிபிடகத்தை முழுவதும் மனப்பாடமாக ஓதக்கூடிய துறவிகள் இன்றும் இருக்கின்றனர். மென்கோங் சயாதேவ் என்ற பர்மியத் துறவி, திரிபிடகத்தை முழுவதும் ஓதக்கூடியவராக இருந்ததால், கின்னஸ் புத்தகத்தில் உலகத்திலேயே சிறந்த நினைவாற்றல் உள்ளவர் என்ற பேர் பெற்றிருக்கிறார்.

வினா: 'பாலி' என்று குறிப்பிட்டீர்கள். அது என்ன?

விடை: பண்டைய பௌத்த நூட்கள் 'பாலி' என்ற மொழியில் எழுதப்பட்டன. புத்தர் எந்த மொழியில் பேசினார் என்று யாருக்கும் உறுதியாகத் தெரிவில்லையென்றாலும் அவர் பாலி மொழியில் பேசியிருப்பார் என்று பொதுவாக நம்பப்படுகிறது. இந்த மொழியில் பேசியிராவிட்டாலும் இதற்கு நெருங்கிய மொழி ஒன்றில் தான் பேசியிருக்கக்கூடும். உண்மையில் புத்தர் வட இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று, பல போதனைகள் நிகழ்த்தியதால் அவர் அவ்வவ்விடங்களில் பேசப்பட்ட வேறுபட்ட பல மொழிகளிலும் பேசியிருக்கக் கூடும்.

வினா: பௌத்த சமய நூட்கள் பௌத்தர்களுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை?

விடை: திரிபிடகத்தை ஒரு தெய்வீக நூலாகவோ, தவறே இல்லாத ஒரு

கடவுளின் அறிக்கையெனவோ, அதன் ஒவ்வொரு வார்த்தையினையும் நம்பியே ஆக வேண்டுமெனவோ பௌத்தர்கள் நினைப்பதில்லை. ஒரு மா மனிதனின் போதனைகள் அடங்கிய குறிப்பேடு தான் திரிபிடகம். அதில் விளக்கங்களும், அறிவுரைகளும், வழிகாட்டுதல்களும், ஊக்க மளித்தலும் அடங்கியிருக்கின்றன. அதனைச் கவனத்தோடும், மரியாதையோடும் படிக்கவேண்டும். நமது குறிக்கோள் திரிபிடகத்தினைப் படித்துப் புரிந்து கொள்வதுதான். அப்படியே நம்ப வேண்டுமென்ப தில்லை. புத்தரும் அவரது போதனைகளை அப்படியே நம்பிவிடாமல், நமது அனுபவத்தோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கச் சொல்கிறார். திரிபிடகத்தின் மீதான ஒரு பௌத்தரின் மனப்போக்கை ஒரு விஞ்ஞானி ஒரு அறிவியல் பத்திரிக்கையில் வெளியிடப்படும் ஆய்வுக் கட்டுரைகளின் மீதான மனப்போக்கோடு ஒப்பிடலாம். ஒரு விஞ்ஞானி பரிசோதனைகளையும் ஆய்வுகளையும் செய்து பின் தனது கண்டுபிடிப்பு களையும் முடிவுகளையும் ஒரு ஆய்வுப் பத்திரிக்கையில் வெளியிடுவது வழக்கம். அதைக் கவனத்தோடு படிக்கும் மற்ற விஞ்ஞானிகள் அதனைச் சரியானதென்றோ நம்பத்தக்கதென்றோ உடனே ஏற்றுக்கொள்வதில்லை. அதே ஆய்வைத் தாங்களும் செய்து அந்த முடிவுகள் சரியானவையே என்று கண்ட பிறகுதான் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

வினா: முன்னர் தம்மபதம் என்பதனைக் குறிப்பிட்டீர்கள். அது என்ன?

விடை: திரிபிடகத்தின் முதல் பகுதியில் உள்ள ஒரு சிறு தொகுதியே தம்மபதம் ஆகும். அதன் பெயரை 'வாய்மையின் வழி' என்றும் 'வாய்மை வரிகள்' என்றும் மொழி பெயர்க்கலாம். புத்தர் கூறிய 423 போதனைகள் கவிதை வடிவில் தம்மபத்தத்தில் அடங்கியுள்ளன. அப்போதனைகளில் சில சாரமுள்ளவை, சில ஆழ்ந்த அறிவுள்ளவை, சில உணர்ச்சிமிக்க உவமானங்கள் கொண்டவை, சில மிகுந்த அழகு கொண்டவை. ஆகையால் தம்மபதம் பௌத்த நூட்களிலேயே மிகவும் புகழ் வாய்ந்த நூல். கிட்டத்தட்ட உலகின் முக்கியமான மொழிகள் எல்லாவற்றிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. மேலும் உலக சமய நூட்களின் தலை சிறந்த படைப்புகளுள் ஒன்றாகத் தம்மபதமும் கருதப்படுகிறது.

வினா: திரிபிடகத்தின் எந்தப் புத்தகங்களையும் தரையிலோ, கைக்கடியிலோ வைக்கக்கூடாதென்றும், ஒரு உயர்ந்த இடத்தில் தான் வைக்க வேண்டும் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது உண்மையா?

விடை: சமீப காலம் வரை பௌத்த நாடுகளில் மத்திய காலஞ் சார்ந்த ஐரோப்பாவைப்போலப் புத்தகங்கள் மிகவும் அபூர்வமானதாகவும் விலைமதிக்கத் தக்கவையாகவும் இருந்தன. ஆதலால் திரிபிடக நூட்களும் மிகவும் மரியாதையுடனும் கவனமாகவும் பாதுகாக்கப்பட்டன. நீங்கள் மேலே குறிப்பிட்ட நடைமுறைகளும் இந்த மரியாதையையே காட்டுகின்றன. இந்தப் பழக்கங்களும், மரியாதையும் சரியானவை தானென்றாலும் திரிபிடக நூட்களுக்கு நாம் காட்டும் உண்மையான மரியாதை அதில் உள்ள போதனைகளைக் கடைப் பிடிப்பதே ஆகும்.

வினா: திரிபிடகப் புத்தகங்களைப் படிப்பது மிகவும் கடினமாக இருக்கிறதே. அவை மிகவும் நீண்டதாகவும், சொன்னதையே திருப்பித் திருப்பிக் கூறுவதாகவும், சலிப்புண்டாக்குவதாகவும் இருக்கின்றனவே.

விடை: ஒரு சமய வேதாகம நூலைப் படிக்கும் போது அதில் அமைந்துள்ள சொற்கள் மேன்மைப் படுத்துவ தாகவும், மகிழ்ச்சியளிப்பதாகவும், பாராட்டத்தக்க தாகவும் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். மேலும் அது நம்மை உயர்வு படுத்துவதாகவும் நமக்கு ஊக்கமளிப்பதாகவும் அமைந்திருக்கும். அதே மன நிலையில் நாம் திரிபிடகத்தைப் படிக்கும் போது சற்று ஏமாற்றம் ஏற்படலாம். புத்தரின் சில போதனைகள் உள்ளம் கவரும் அழகிய தன்மை உடையதென்றாலும், பல போதனைகளில் வேதாந்தக் கோட்பாடுகளும், சொல் விளக்கங்களும், தர்க்க வாதங்களும், தியானம் செய்வதற்கும், நன்னடத்தைக்குமான விரிந்த அறிவுரைகளும், தெளிந்த வாய்மைகளுமே அடங்கியிருக்கின்றன. அவை நம் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளனவேயன்றி உணர்ச்சிக்கு வழிகோலுவதாக அமைந்திருக்கவில்லை. மற்ற மத நூல்களோடு ஒப்பிட்டுப் பாராமல் திரிபிடகத்தை மட்டும் ஆராய்ந்தால் அதில் ஒரு வகைத் தனித்துவம் மிக்க அழகு மிளிர்வது கண்கூடாகத்தெரியும் - அது தெளிவான, ஆழமான,

மெய்யறிவூட்டும் அழகு.

வினா: முதன் முதலில் பனை ஓலைகளில் தான் திரிபிடகம் எழுதப்பட்டதாகப் படித்திருக்கிறேன். ஏன் இவ்வாறு எழுதப்பட்டது?

விடை: திரிபிடகம் முதலில் எழுதப்பட்டபோது இந்தியாவிலும் இலங்கையிலும் காகிதம் கண்டு பிடிக்கப்படவில்லை. கடிதங்கள், ஒப்பந்தங்கள், வரவு செலவு கணக்குப் புத்தகங்கள், பத்திரங்கள் போன்றவை மிருகங்களின் தோல்களிலும், மெலிந்த உலோகத் தகடுகளிலும் அல்லது பனை ஓலைகளிலும் தான் எழுதப்பட்டன. பௌத்தர்கள் மிருகங்களின் தோல்களைப் பயன் படுத்துவதை விரும்பவில்லை. உலோகத் தகடுகளைப் பயன்படுத்துவது மிகவும் விலை மிக்கதாகவும், கடினமான செயலாகவும் இருந்திருக்கக் கூடும். எனவே பனை ஓலைகள் பயன் படுத்தப்பட்டன. ஒலைகளை விசேட முறையில் பதப்படுத்திய பின், மரப் பலகைகளுக்கு இடையே வைத்து, துளையிட்டு நூலினால் ஒன்றாக கட்டினர். அவை இன்றைய புத்தகங்களைப் போலவே படிப்பதற்கு வசதியாகவும் நீடிக்கக் கூடிய தன்மை கொண்டதாகவும் இருந்தன. பௌத்த மதம் சீனாவுக்கு வந்த பிறகு பௌத்த சமய நூட்கள் பட்டுத் துணியிலும், காகிதத்திலும் எழுதப்பட்டன. சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த நூட்களின் பிரதிகள் அதிகமாகத் தேவை பட்டதன் காரணமாக அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப் பட்டது. உலகில் அச்சிட்டு வெளியிடப்பட்ட முதல் புத்தகம் புத்தரின் போதனைகளுள் ஒன்றின் சீன மொழி பெயர்ப்புப் புத்தகமே ஆகும். அது கி.பி 828 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.

* * * * * * * *

## 12. பௌத்த வரலாறும் வளர்ச்சியும்

வினா: பல நாடுகளிலும் இன்று பெரும் அளவில் மக்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். இந்த நிலை எவ்வாறு நிகழ்ந்தது?

விடை: புத்தர் இறந்து 150 ஆண்டுகளில் அவருடைய போதனைகள் வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பரவியிருந்தது. சுமார் கி.மு 262 ஆண்டு மௌரியச் சக்ரவர்த்தி அசோகர் பௌத்த மதத்தைத் தழுவி அவரது இராஜ்ஜியம் முழுவதும் பௌத்த மதம் பரவ வழி வகுத்தார். பெரும்பாலான மக்கள் பௌத்தத்தின் உயர்ந்த ஒழுக்க நியதிகளாலும், அது இந்து சமயச் சாதீய அமைப்பைத் தீவிரமாக எதிர்த்ததாலும் அதன்பால் ஈர்க்கப் பட்டனர். அசோகச் சக்ரவர்த்தியும் ஒரு மாபெரும் ஆலோசனைச் சபையைக் கூட்டிப் புத்த மதத்தைப் பரப்பப் பௌத்தத் துறவிகளைப் பல குழுக்களாக அண்டை நாடுகளுக்கு மட்டுமல்லாது தொலைதூரத்திலுள்ள ஐரோப்பாவரைக்கும் அனுப்பி வைத்தார். அவற்றுள் இலங்கைக்குச் சென்ற மத போதகர்கள் புத்தமதத்தை அங்கு நிலை நிறுத்தினார்கள். அந்நாட்டில் இன்றும் பெரும்பாலானோர் பௌத்த மதத்தையே பின் பற்றுகின்றனர். வேறுபல பிரசாரகர்களின் குழுக்கள் புத்த மதத்தைப் பரப்ப இந்தியாவின் தென் பகுதிக்கும், மேற்குப் பகுதிக்கும், காஷ்மீரத்திற்கும், தென் பர்மாவிற்கும், தாய்லாந்திற்கும் அனுப்பப் பட்டன. அதன் பின் ஒரு நூற்றாண்டுக்குப் பின் இன்றைய ஆப்கானிஸ்தானும், வட இந்தியாவின் மலைப் பிரதேசங்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றின. பின்னர் அங்கிருந்து துறவிகளும் வர்த்தகர்களும் மத்திய ஆசியாவிற்கும் இறுதியாகச் சீனாவிற்கும் பௌத்தத்தைக் கொண்டு சென்றனர். சீனாவிலிருந்து பௌத்தம் கொரியாவிற்கும் ஜப்பானிற்கும் பரவியது.

பிற நாடுகளிலிருந்து சீனாவில் நுழைந்த பல்வேறு கருத்துக்களுள் பௌத்தம் மட்டுமே அங்கு வேர் விட்டு நிலைத்து நின்றது என்பது சுவாரசியமான ஒரு செய்தியாகும். சுமார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பௌத்தம் பர்மா, தாய்லாந்து, லாகோஸ், கம்போடிய போன்ற நாடுகளின் தலையாய மதமானது. அதற்கு இலங்கைத் துறவிகளின் முழு முயற்சியே முக்கியக் காரணமாகும்.

வினா: திபெத் எப்போது எப்படிப் பௌத்த நாடாகியது?

விடை: சுமார் எட்டாம் நூற்றாண்டில் திபெத்திய மன்னர் இந்தியாவிற்குத் தூதுவர் ஒருவரை அனுப்பித் பௌத்தத் துறவிகளையும், பௌத்த சமய நூட்களையும் தன் நாட்டிற்குக் கொண்டு வரச் செய்தார். அதிலிருந்து

பௌத்தம் அங்கு வளரத் தொடங்கியது. ஆனால் திபெத்தில் அப்போது கடைப்பிடிக்கப் பட்ட போன் மதத்தின் மத குருக்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாகப் பௌத்தமதம் உடனடியாகப் பெரும்பான்மை மதமாக மாற வில்லை. இறுதியில் 11ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து அதிக அளவிலான பௌத்தத் துறவிகளும் ஆசிரியர்களும் திபெத்திற்கு வந்த பிறகுதான் பௌத்தம் அங்கு தன்னை உறுதியாக நிலை நிறுத்திக் கொண்டது. அப்போதிருந்து திபெத் மிகவும் பற்றுள்ள பௌத்த நாடுகளுள் ஒன்றானது.

வினா: ஆகப் பௌத்தம் மிகப் பரவலாக விரிவடைந்தது எனக் கூறலாம்.

விடை: அதுமட்டுமல்ல, தன்னை எதிர் கொண்ட பிற மதங்களை அடக்கி ஒடுக்கியதாகவோ, படைபலத்தால் வெற்றி கொண்டு பௌத்தம் பரப்பப் பட்டதாகவோ கூறப்படும் நிகழ்ச்சிகள் மிகக் குறைவே. பௌத்தம் சாந்தமான வாழ்க்கை முறையைப் போதிப்பதால், கட்டாயபடுத்தி மதமாற்றம் செய்வதென்ற எண்ணமே பௌத்தர்களுக்கு முரண்பட்டதாகும்.

வினா: பௌத்தம் பரவிய நாடுகளைப் புத்த மதம் எவ்வாறு பயனடையச் செய்தது?

விடை: பிரசாரகத் துறவிகள் மற்ற நாடுகளுக்குச் சென்ற போது அவர்கள் புத்தரின் போதனைகளை மட்டுமல்லாது இந்திய நாகரிகத்தின் உயர்ந்த பண்பாடுகளையும் எடுத்துச் சென்றார்கள். சில பௌத்தத் துறவிகள் சிறந்த மருத்துவர்களாகவும் விளங்கினார்கள். அதுவரை இல்லாத புதுப்புது மருத்துவ முறைகளைத் தாங்கள் சென்ற நாடுகளில் அறிமுகப் படுத்தினார்கள். இலங்கையிலும், திபெத்திலும் மத்திய ஆசிய நாடுகளிலும் எழுத்து முறையை அறிமுகப்படுத்தியது பௌத்தத் துறவிகள் தான். எழுத்து முறை வந்தபின் புதிய புலமையும் எண்ணங்களும் மக்களிடையே மலரத் தொடங்கின. பௌத்தம் வருமுன் திபெத்தியரும், மங்கோலியரும் கட்டுப்படாத காட்டுமிராண்டிகளாகவே இருந்தனர். பௌத்தம் அவர்களைச் சாந்தகுணமுள்ளவர்களாகவும்

நாகரிகம் மிக்கவர்களாகவும் மாற்றியது. இந்தியாவிலும் உயிர்ப்பலி கொடுக்கும் பழக்கம் குறைந்ததோடு கொஞ்ச காலமே நீடித்தாலும் சாதீயக் கொடுமையின் குரூரமான பழக்கங்களும் சற்றுத் தளர்ந்தது. இன்றும்கூட பௌத்தம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வளர வளர, நவீன மேற்கத்திய மனோ தத்துவ இயல், பௌத்தத்தின் மனித மனத்தின் ஆழ்ந்த அறிவினால் பாதிப்படையத் துவங்கியுள்ளது.

வினா: பௌத்தம் இந்தியாவில் மறைந்ததற்குக் காரணம் என்ன?

விடை: இந்த வருந்தத்தக்க நிகழ்வுக்கு யாருமே ஏற்கத்தக்க விளக்கத்தை இதுவரை கூற வில்லை. சில வரலாற்று நிபுணர்கள் பௌத்தம் நேர்மையின்றி ஒழுக்கமற்றுப் போனதால் மக்கள் அதை எதிர்க்கத் தொடங்கியதாகக் கூறுகின்றனர். வேறு சில நிபுணர்கள் இந்து மதத்தின் பல கொள்கைகளைப் பௌத்தம் அப்படியே ஏற்றுக் கொண்டதால் பௌத்தத்துக்கும் இந்து மதத்திற்கும் வேறுபாடே இல்லாமல் போய்விட்டதாகக் கூறுகின்றனர். இன்னொரு கருத்து அரசர்கள் ஆதரவோடு மாபெரும் விகாரைகள் உருவாகி அதில் துறவிகள் திரள ஆரம்பித்ததால் சராசரி மக்களுடன் இருந்த தொடர்பு முற்றாக அற்றுப் போய்விட்டதாகக் கூறுகிறது. காரணம் எதுவாயினும் 8ஆம் 9ஆம் நூற்றூண்டு இறுதியில் இந்தியாவில் பௌத்தத்தின் செல்வாக்கு மிக வேகமாகச் சரியத் தொடங்கிவிட்டது. 13ஆம் நூற்றண்டில் இஸ்லாமியப் படையெடுப்பின் போது நிகழ்ந்த வன்முறையும் குழப்பமும் பௌத்தத்தை இந்தியாவிலிருந்து அறவே ஒழித்து விட்டது.

வினா: ஆனால் இன்றும் இந்தியாவில் சில பௌத்தர்கள் வாழ்கின்றனரல்லவா?

விடை: ஆம். வாழ்கின்றனர். மேலும் 20 ஆம் நூற்றாண்டின் மையப் பகுதியிலிருந்து பௌத்தம் மீண்டும் இந்தியாவில் துளிர்விடத் தொடங்கியுள்ளது. 1956 ஆம் ஆண்டில் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் (பாபா சாகேப் அம்பேத்கார் அவர்கள்) அவரது மக்கள், இந்து மதத்தின் சாதிப் பாகுபாட்டால் மிகவும்

மோசமாக நடத்தப்பட்ட காரணத்தினால், அதிலிருந்து விலகிப் பௌத்தத்தைத் தழுவினார். அதன் பின்னர் கிட்டத்தட்ட 80 லட்சம் மக்கள் பௌத்த மதத்திற்கு மாறினார்கள். இந்த எண்ணிக்கை இன்றும் வளர்ந்து கொண்டே போகிறது.

வினா: மேற்கத்திய நாடுகளுக்கு முதலில் பௌத்தம் எப்போது வந்தது?

விடை: கி.மு.3-ஆம் நூற்றாண்டில் மாமன்னர் அலக்சாண்டரின் இந்தியப் படையெடுப்புக்குப் பின் கிரேக்க மக்கள் இந்தியாவில் குடியேறத் துவங்கினார்கள். முதல் முதலாகப் பௌத்தம் தழுவிய மேற்கத்தியர்கள் அவர்களாகத் தான் இருக்க வேண்டும். மிகப்பழமையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான மிலிந்தபன்ஹா என்னும் பௌத்த நூல் நாகசேனா என்னும் பௌத்தத் துறவிக்கும், இந்திய-கிரேக்க மன்னனான மிலிந்தாவிற்கும் நடந்த உரையாடலை விவரிக்கிறது.

சமீப காலமாக,19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நூலாசிரியர்கள் பௌத்த மதப் புனித நூல்களையும், பௌத்தம் பற்றிய நூல்களையும் மொழிபெயர்க்கத் தொடங்கியவுடன் மேற்கத்திய நாடுகளில் புத்தமதம் மதிப்பும் மரியாதையும் ஈர்க்கத் தொடங்கியுள்ளது. 20-ஆம் நூற்றண்டின் துவக்கத்தில் சில மேற்கத்திய நாட்டவர் தங்களைப் பௌத்தர்கள் என்று கூறிக் கொண்டதுடன் ஒன்றிரண்டு பேர் பௌத்தத் துறவிகளாகவும் மாறினார்கள். 1960 க்கு பின் மேற்கத்திய நாடுகளில் பௌத்தர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. இன்று பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் குறைந்த அளவே எனினும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பௌத்தர்கள் உளர்.

வினா: பௌத்த சமயத்தின் பிரிவுகளைப் பற்றிக் கூறமுடியுமா?

விடை: பௌத்தத்தின் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்த போது பௌத்தம் மங்கோலியாவிலிருந்து மாலத் தீவு வரையும், பால்க் கிலிருந்து (இன்றைய ஆப்கானிஸ்த்தான்) பாலி (இந்தோனேசியா) வரையும் பரவியிருந்ததால், இந்த நாடுகளின் பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட

மக்களையும் பௌத்தம் அணைத்துச் செல்ல வேண்டியிருந்தது. அது பல நூற்றாண்டுகளாக அந்நாடுகளில் நிலைத்திருந்ததால், அவ்வப்போது மக்களின் சமூக வாழ்வும் அறிவாற்றலும் மாற்றமடைந்ததற்கேற்பப் பௌத்தமும் தன்னை மாற்றிக் கொள்ளவும் வேண்டியிருந்தது. அதன் காரணமாகத் தருமத்தின் அடிப்படைச் சாராம்சம் மாறவில்லையென்றாலும் அதன் புறத் தோற்றம் பெருமளவில் மாற்றம் கண்டது. இன்று மூன்று வகையான பௌத்தப் பிரிவுகள் உள்ளன. அவை தெராவாதா, மகாயானா மற்றும் வஜ்ரயானா என்பனவாகும்.

வினா: தெராவாதா என்றால் என்ன?

விடை: தெராவாதா என்பதற்குப் பெரியோரின் போதனைகள் என்பதே பொருள். மிகப் பழமையானதும் புத்தரின் முழுப் போதனைகளும் அடங்கியதுமான பாலி திரி பிடகத்தை ஆதாரமாகக் கொண்டது இது. பழமையைப் பாதுகாப்பதும், விகாரைகளைச் சார்ந்து வளர்வதுமான பௌத்தப் பிரிவு தெராவாதா ஆகும். அது தருமத்தின் அடிப்படைப் போதனைகளை வலியுறுத்தி மிக எளிமையான நெறி தவறா அணுகு முறையைக் கொண்டது. இலங்கை, பர்மா, தாய்லாந்து, லாகோஸ், கம்போடிய நாடுகளில் தெராவாதா பிரிவு அதிகமாகப் பின்பற்றப் படுகிறது.

வினா: மகாயானா பௌத்தம் பற்றிக் கூறுங்கள்.

விடை: கி.மு 1ஆம் நூற்றாண்டில் புத்தரின் போதனைகளின் விளைவுகள் மேலும் ஆழமாக ஆராயப்பட்டன. மேலும் சமூக வளர்ச்சியின் காரணமாகத் தம்மத்தின் போதனைகளுக்குக் காலத்துக் கேற்ற மாறுதலுடன் விளக்கமளிக்க வேண்டிய அவசியமிருந்தது. இதன் விளைவாகத் தோன்றிய பல்வேறு அமைப்புகள் தந்த விளக்கங்களால் உருவான புதிய கருத்துக்கள் கூட்டாக மஹாயானா அதாவது துறவிகளுக்கு மட்டுமல்லாமல், அனைத்து மக்களுக்கும் உகந்த 'தலைசிறந்த வழி' என்று அழைக்கப்பட்டது. ஒரு காலக் கட்டத்தில் இந்த மஹாயானா இந்தியாவின் செல்வாக்குள்ள பௌத்தப் பிரிவாக விளங்கியது. இன்றைக்கு இப்பிரிவு சீனா, கொரியா, தைவான், வியட்நாம்,

ஜப்பான் போன்ற நாடுகளில் கடைபிடிக்கப் படுகிறது. புத்தரின் போதனைகளை மஹாயானப் பிரிவினர் திரித்துக் கூறுவதாகத் தெராவாதப் பௌத்தர்கள் கூறுகின்றனர். மஹாயானப் பௌத்தர்களோ, நிலையாமையும் மாற்றமும் வாய்மையின் ஒரு முக்கிய அம்சமாகப் புத்தர் கூறியதால் அவர்கள் புத்தரின் போதனைகளைக் காலத்துக் கேற்றவாறு புரிந்து கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். தேங்காயிலிருந்து தென்னைமரம் வருவது இயல்பே. அது போலவே புத்தரின் போதனைகளிருந்து தான் மஹாயானக் கருத்துக்களும் வந்தன. எனவே அவை ஒரு திரிபு இல்லை என்று மஹாயானப் பௌத்தர்கள் கூறுகின்றனர்.

வினா: ஹினயான என்ற வார்த்தையை கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் பொருள் என்ன?

விடை: மஹாயான வளர்ச்சி பெரும் போது அதன் முன் இருந்த பௌத்த பிரிவுகளோடு வேற்றுமை காண்பிப்பதற்காகத் தன்னைத் 'தலைசிறந்த வழி' என்று சொல்லிக்கொண்டது. பழைய பிரிவுகளை அது ஹினயான 'சிறிய வழி' என்று பெயரிட்டழைத்தது. ஆக ஹினயான என்பது தெரவாதா பிரிவினருக்கு மஹாயான பிரிவினர் வழங்கிய குறுகிய பெயர்.

வினா: வஜ்ரயான பிரிவைப் பற்றி விளக்குங்கள்.

விடை: இந்தப் பௌத்தப் பிரிவு இந்தியாவில் 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில் இந்து மதம் பெரும் மாற்றத்தோடு மறுமலர்ச்சி பெற்ற போது தோன்றியது. இந்துக்களின் உருவ வழிபாட்டையும், விரிவான சடங்குகளையும் சில பௌத்தர்கள் ஏற்றுக் கொண்டனர். வஜ்ரயான பிரிவு 11ஆம் நூற்றாண்டில் திபத் நாட்டில் மேலும் சில மாற்றங்களைப் பெற்றுச் சிறப்புற்று விளங்கியது. வஜ்ரயான என்றால் வைரக்கல் வழி - அதாவது உடைக்க முடியாத தர்க்க வாதத்திற்குப் பொருத்தமான கருத்துகள் தங்கள் வழியில் இருப்பதாகக் கூறினர். வஜ்ரயான பிரிவு தந்திரம் என்ற இலக்கியத்தை அடிப்படையாக கொண்டது. எனவே தந்திரயான என்றும் அழைக்கப்படும். வஜ்ரயான மங்கோலியா, திபெத், இந்தியாவின் லடாக்

பகுதி, நேபாளம், பூடான் மற்றும் இந்தியாவில் வாழும் திபெத்தியர்களால் பின்பற்றப் பட்டு வருகிறது.

வினா: இவையெல்லாம் மிகக் குழப்பமாக இருக்கிறதே. நான் பௌத்தத்தைப் பின்பற்றுவ தென்றால் எந்தப் பிரிவைத் தேர்ந்தெடுப்பது?

விடை: பௌத்தத்தை ஒரு நதியோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். நதி உற்பத்தியாகும் இடத்தைப் பார்த்ததும், கடலில் சேரும் முகத்துவாரத்தைச் சென்று பார்த்தால் அவை ஒன்றோடொன்று தொடர்பற்றதாகவும் மாறுபட்டது போலவும் தோன்றும். ஆனால் அந்த நதி ஆரம்பமாகும் இடத்திலிருந்து அதைத் தொடர்ந்து சென்றால், அது மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஓடி, நீர் வீழ்சிகளில் பாய்ந்து, பல சிற்றோடைகளை இணைத்துக் கொண்டு, சமவெளியில் தவழ்ந்து இறுதியில் கடலில் கலக்கும் முகத்துவாரம் வந்து சேர்வதைக் கண்டால், அப்போது நதியின் ஆரம்பமும் கடலில் கலக்கும் இடமும் ஏன் இவ்வளவு வித்தியாசப் படுகின்றன என்பது தெளிவாக விளங்கும். பௌத்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் அதன் ஆரம்ப கால அடிப்படையான போதனைகளிலிருந்து துவங்குங்கள் - நான்கு மேன்மையான உண்மைகள், அஷ்டாங்க பாதை, புத்தரின் வாழ்க்கை வரலாறு போன்றவைகளிலிருந்து துவங்குங்கள். பின் அந்தப் போதனைகள் எப்படி ஏன் விரிவடைந்தன என்பதைப் பற்றிப் படித்தபின் உங்களுக்குப் பிடித்த பௌத்தப் பிரிவைத் தேர்ந்தெடுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் நதியின் ஆரம்பம் கடலின் கலக்கும் இடத்தை விட மட்டமானதென்றோ, கடலில் கலக்கும் இடம் நதியின் ஆரம்பத்தைத் திரிப்பதனால் வந்ததாகவோ சொல்ல இயலாது.

* * * * * * * *

## 13. பௌத்தராக மாறுவது

வினா: இதுவரை நீங்கள் கூறியது என்னை மிகவும் கவர்ந்தது; நான்

எப்படிப் பௌத்தர் ஆவது?

விடை: உபாலி என்றொருவன் இருந்தான். அவன் வேறு சமயத்தைச் சார்ந்தவன். அவன் புத்த பெருமானிடம் வாதாடி அவரைத் தன் சமயத்துக்கு மாற்றுவதற்காக அவரிடம் சென்றான். அவன் புத்த பெருமானிடம் வாதாடிய பிறகு அவரது கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவரைப் பின்பற்ற விரும்புவதாகக் கூறினான். அதற்குப் புத்த பெருமான்:

'முதலில் நீ சரியான முறையில் ஆராய்ந்து பார். நான்கும் தெரிந்த உன் போன்றவர்களுக்குச் சரியான ஆராய்ச்சி என்பது அத்தியாவசியமானது.'

பௌத்தத்தில். 'புரிந்து கொள்வது' என்பதே முக்கியமானது. ஆனால், அதற்கு நாளாகும். அதனால், தீடீர் வேகத்தோடு வந்து பௌத்தத்தைத் தழுவாதீர்கள். நீங்கள் போதுமான அளவுக்கு கால அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். பல வினாக்களை வினவுங்கள். பிறகு ஒரு முடிவெடுங்கள். புத்தபெருமானுக்கு எண்ணிக்கையில் மட்டும் அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் விருப்பமில்லை. மனிதர்கள் அவரது போதனைகளை நன்கு ஆராய்ந்தறிந்து உண்மையைத் தெரிந்தபிறகே பின்பற்ற வேண்டுமென அக்கறைப் பட்டார்.

வினா: நான் இவற்றை நன்கு தெரிந்து கொண்டு, புத்தபெருமானின் போதனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவை என்றுணர்ந்த பிறகு பௌத்தனாக மாற வேண்டுமென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

விடை: ஆரம்பத்தில் ஒரு நல்ல பௌத்தக் கோவிலிலோ அல்லது சபையிலோ சேரவேண்டும். அவர்களை நீங்கள் ஆதரிக்கவும், அவர்களும் உங்களை ஆதரிக்கவுமான சூழலில் நீங்கள் புத்தரின் போதனைகளை மேலும் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் விரும்பும் போது முறையான பௌத்தராக மும்மணிகளிடம் அடைக்கலம் செல்ல வேண்டும்.

வினா: மூன்று அடைக்கலங்கள் என்றால் அவை எவை?

விடை: அடைக்கலமென்றால் மக்களில் மிகவும் துன்புற்றோர்,

துன்புறுத்தப்பட்டோர் அவர்களுக்குப் பாதுகாப்பும் காவலும் தேவைப்பட்டு எவ்விடத்திற்கு அவற்றை நாடிச் செல்கிறார்களோ அவ்விடமே அடைக்கலம் தரும் இடமாகும். பலவிதமான அடைக்கலங்களுள. மனிதர்கள் மகிழ்ச்சியற்றிருக்கும் போது நண்பர்களிடம் அடைக்கலம் பெறுவார்கள். புத்தபெருமான் கூறுகிறார்:

புத்த தம்ம சங்கமென்னும்
மும்மணிகளுடன் அடைக்கலம் சென்று
நற்சாட்சி பெற்று நான்கு பேருண்மைகளையும்,
துக்கம், துக்கத்துக்கான காரணம், துக்க நீக்கம்,
துக்கத்தை நீக்கும் வழி ஆகிய இவைகளையும்,
துக்கத்தைப் போக்கக் கூடிய எட்டு உயர்குடி வழிகளையும்
காண்கிறவர்களுக்கு,
இதுவே பாதுகாப்பான புகலிடமாகும்.
இதுவே உச்சப் புகலிடமாகும்.
இப்புகலிடமே மனிதர்களுக்கு
எல்லாத் துன்பங்களிருந்தும் விடுதலை யளிக்கும்.

புத்தபெருமானிடம் புகலிடமடைவதென்பது, புத்தபெருமான் எப்படிப் பேரறிவு பெற்றாரோ, அப்படியே பேரறிவும் முழுமையான அறிவும் பெறுவோம் என்ற நம்பிக்கையுடனேயே புகலிடமாக ஏற்றுக் கொள்வதாகும். தம்மத்திடம் சரணடைபவர்கள் நான்கு பேருண்மைகளை நன்குணர்ந்து எட்டு உயர்குடி வழிகளை வாழ்வின் அடித்தளமாக அமைத்துக்கொள்ள வேண்டும். சங்கத்திடம் சரணடைவதென்பது, எட்டு உயர்குடி வழியில் வாழ்பவரிடம் ஆதரவு, உள்ளுணர்வு, அறிவுரை ஆகியவற்றைப் பெறுவதாகும். இவற்றை நிறைவேற்றினால் ஒருவன் பௌத்தனாகி, நிர்வாண நிலையை நோக்கிச் செல்லும் வழியில் முதலடியை வைக்கிறான்.

வினா: நீங்கள் முதன் முதலாக இம்மும்மணிகளைச் சரணடைந்த பிறகு உங்கள் வாழ்க்கையில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டன?

விடை: இந்த 2500 ஆண்டுகளில் கோடானுகோடி மக்கள் அடைந்ததைப் போலச் சிரமங்கள் நிறைந்த இவ்வுலகில் புத்தபெருமானின் போதனைகள் பொருளுடையவையாக இருப்பதையுணர்ந்தேன். பொருளற்றிருந்த வாழ்வுக்குப் பொருள் அளிப்பதையுணர்ந்தேன். அவை எனக்குக் கருணையைக் கொடுத்தன. இரக்கத்தைக் கொடுத்தன; ஒழுக்கத்தைக் கொடுத்தன. இவற்றால் நான் தூய்மையான வழியில் நடக்கவும், தூய்மையான முழுமையான வாழ்க்கையை இவ்வாழ்க்கையிலேயே இல்லையென்றாலும், அடுத்த பிறப்பில் அடையவும் வழிவகுத்தன. புராதன இந்தயாவில் ஒரு கவிஞன் புத்தபெருமானைப் பற்றிக் கீழ்கண்ட வாறு பாடியிருக்கிறான்:

'அவனிடம் சரணடைவதென்பது
அவனைப்புகழ்ந்து பாடுபவதென்பது
அவனுக்கு மரியாதையளிப்பதென்பது
அவனறத்தைப் புரிந்து அதன் படி நடந்து கொள்வதே ஆகும்.'

இவ்வாக்கியங்களை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். நானும் அப்படியே நடக்கிறேன்.

வினா: என்னுடைய நண்பன் ஒருவன் என்னை அடிக்கடி தன் மதத்திற்கு மாற்ற முயல்கிறான். அவன் மதத்தில் எனக்கு ஆர்வம் இல்லை. அதை அவனிடமே சொல்லியுமிருக்கிறேன். இருந்தாலும் என்னை விட மாட்டேன் என்கிறான். நான் என்ன செய்ய?

விடை: முதலில் அவன் உங்கள் உண்மையான நண்பன் இல்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையான நண்பன் உங்களை நீங்கள் உள்ள நிலையிலேயே ஏற்றுக் கொண்டு, உங்கள் விருப்பத்திற்கு மரியாதை கொடுப்பான். அவன் தன் மதத்திற்கு மாற்றுவதற்காகவே உங்களிடம் நண்பனைப்போல நடிக்கின்றான் என்று நான் சந்தேகிக்கிறேன். மற்றவர்கள் தங்கள் விருப்பத்தை உங்கள் மீது திணிக்க முயன்றால் அவர்கள் கண்டிப்பாக உங்கள் நண்பர்களாக இருக்க மாட்டார்கள்.

வினா: ஆனால் அவன் தன் மதக்கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகக் கூறுகிறான்.

விடை: கருத்துக்களைப் பகிர்ந்துக்கொள்வது நல்லது தான். ஆனால் உங்கள் நண்பனுக்குக் கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கும், தன் விருப்பத்தை உங்கள் மீது திணிப்பதற்கும் வேறுபாடு தெரியவில்லை என்று நான் கூறுவேன். என்னிடம் ஒரு ஆப்பில் இருந்து அதை இரண்டாக வெட்டி, ஒரு துண்டை உங்களிடம் தந்து, அதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், அதை நான் உங்களிடம் பகிர்ந்துக்கொண்டதாகச் சொல்லலாம். ஆனால் நீங்கள் என்னிடம், 'நன்றி, ஆனால் நான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டேன்' என்று கூறியும், 'இல்லை இல்லை எடுத்துகொள்ளுங்கள்' என்று வற்புறுத்தி ஏற்க வைத்து விட்டால் அதைப் பகிர்ந்து கொண்டதாகக் கூற முடியாது. உங்கள் நண்பனைப் போன்றோர்கள் அவர்கள் தவறான போக்கைப் 'பகிர்ந்துகொள்ளல்', 'அன்பு', 'சாட்சி கொள்வது' என்று சொல்லிப் பொய்த் தோற்றம் காட்டுகின்றனர். எப்படிச் சொன்னாலும் அவர்கள் நாகரிகமற்ற, முறை கெட்ட, சுயநலமுள்ள நடத்தை கொண்டவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

வினா: அவன் வற்புறுத்தலை எப்படி நிறுத்துவது?

விடை: மிக எளிய செயல் இது. முதலில் என்ன வேண்டும் என்பதில் நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும். இரண்டாவதாகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் அதை அவனிடம் சொல்லி விடுங்கள். மூன்றவதாக உங்களிடம் 'இந்தச் செய்தியில் உங்கள் கருத்து என்ன?' 'அந்தக் கூட்டதிற்கு என்னுடன் வர ஏன் மறுக்கிறாய்?' போன்ற கேள்விகளைக் கேட்டால் தெளிவாகவும், மரியாதையுடனும், நிலையாகவும் முதலில் சொன்னதையே தொடர்ந்து திருப்பித் திருப்பிக் கூறுங்கள்.

'என்னை அழைத்தமைக்கு நன்றி. ஆனால் எனக்கு வர விருப்பமில்லை.'

'ஏன் வர விருப்பமில்லை?'

'அதை நான் விளக்கத் தேவையில்லை. எனக்கு வர விருப்பமில்லை.'

'அங்கு சுவாரசியமிக்கோர் பலர் இருப்பார்கள்.'

'இருக்கலாம். ஆனால், எனக்கு வர விருப்பமில்லை.

'உங்கள் நலனில் அக்கறை இருப்பதால் தான் நான் உங்களை அழைக்கிறேன்.'

'என்னைப் பற்றி அக்கரை இருப்பதில் மகிழ்ச்சி. ஆனால், எனக்கு வர விருப்பமில்லை.

இப்படித் தெளிவாகவும், பொறுமையுடனும், நிலையாகவும் திரும்பத் திரும்ப வர விருப்பமில்லை என்று சொல்வீரகளென்றால், இறுதியில் அவன் உங்களைத் தொந்தரவு செய்வதை நிறுத்தி விடுவான். இப்படிச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது சங்கடமாக இருந்தாலும், அத்தகையோருக்குத் தங்கள் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் விரும்பாதோர் மீது திணிப்பது தவறான செயல் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது மிக அவசியமாகும்.

வினா: பௌத்தர்கள் தர்மத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முயற்சிக்க வேண்டுமா?

விடை: ஆம், முயற்சிக்க வேண்டும். உங்களிடம் யாராவது பௌத்தத்தைப் பற்றிக் கேட்டால், சொல்லுங்கள். புத்தரின் போதனைகளைப் பற்றி அவர்கள் கேட்காமலே அவர்களிடம் சொல்லலாம். ஆனால் சொல்லாலோ, செயலாலோ அவர்களுக்கு அதில் ஆர்வமில்லை என்பதை உணர்த்தினால் அதனை புரிந்து கொண்டு அவர்கள் விருபத்திற்கு மரியாதை தரவேண்டும். முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியதென்ன வெனில், பௌத்தத்தைப் பற்றி மற்றவர்களுக்குப் போதனை செய்து சாதிப்பதை விட, உங்கள் நடத்தை மூலமாகவே அதை மிக அழுத்தமாகச் சாதிக்க முடியும் என்பதே. பரிவு, கருணை, சகிப்புத்தன்மை, பொறுமை, நேர்மை, உண்மை ஆகியவைகளே தர்மத்தின் அருங்குணங்களாகும் என்பதை மக்களுக்கு நம் நடத்தை மூலம் உணர்த்த வேண்டும். உங்கள் பேச்சிலும், நடத்தையிலும் தர்மம் ஒளி விட்டுப் பிரகாசிக்கட்டும்! நாம் ஒவ்வொருவரும், தர்மத்தை நன்கு புரிந்து கொண்டு,

முழுமையாகப் பயின்று, தாராளமாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் நமக்கும் மற்றவருக்கும் பெரும் நன்மை செய்தவர்களாவோம்.

* * * * * * * *

## 14. புத்தரின் பொன் மொழிகள்

மெய்யறிவு நற்பண்பினால் தூய்மையடைகிறது. நற்பண்பு மெய்யறிவினால் தூய்மைபெறுகிறது. எப்போதும் ஒன்றிருக்கும் இடத்தில் மற்றதும் இருக்கும். பண்புடையவன் மெய்யறிவு உள்ளவனாக இருக்கின்றான். மெய்யறிவுடையவன் பண்புடையவனாக இருக்கின்றான். இரண்டும் சேர்ந்திருப்பது உலகிலேயே மிக மேன்மையானது. D.I,84

* *

எண்ணங்கள் மனதிலிருந்தே தோன்றுகின்றன. மனமே முதன்மையானது. மனமே அவைகளை வழி நடத்துகிறது. ஒருவன் தூய எண்ணங்களோடு பேசினாலும், செயற்பட்டாலும் அவற்றினால் உண்டாகும் நன்மைகள், எப்போதும் நீங்காத நிழல் போன்று அவனைப் பின் தொடரும். Dhp.2

* *

ஒருவன் எவரையும், எங்கும், எதற்கும் குறை கூறவோ வெறுக்கவோ கூடாது. கோபத்தினாலோ போட்டியினாலோ பிறருக்கு வேதனை உண்டாக்க விரும்ப வேண்டாம். Sn.149

* *

எப்படி இந்த மாபெருங் கடல் ஒரே சுவையான உப்புச் சுவையை உடையதாக இருக்கிறதோ, அதே போல் இந்தத் தம்மமும் ஒரே சுவையை, விடுதலை என்னும் சுவையை உடையதாக இருக்கிறது. Ud.56

* *

பிறருடைய குற்றத்தை எளிதில் காண முடிகிறது. ஆனால், தன்னுடைய

குற்றத்தைக் காண்பது கடினமாக இருக்கிறது. பிறருடைய குற்றங்களை உமியைத் தூற்றுவது போன்று தூற்றுகிறவர், மிருகங்களின் தோலைக் கொண்டு தன்னை மறைத்துக் கொள்ளும் வேட்டைக்காரனைப் போலத் தன் சொந்தக் குற்றத்தை மறைத்துக் கொள்கிறார். எப்போதும் பிறருடைய குற்றத்தையே தேடிக் கொண்டிருப்பவர்கள் எளிதில் கோபத்தின் வசம் ஆட்படுகிறார்கள். தங்களுடைய குற்றங்களை அழிக்க முடியாத அளவுக்கு வளர விட்டு விடுகிறார்கள். Dhp.252-3

**

பூக்களைக் கொண்டு பலவிதமான மாலைகள் தொடுக்கப்படுவது போல, பூக்களைப் போலவே தோன்றி மறையும் மனிதனாகப் பிறந்தவனும் பல நன்மைகளைச் செய்ய முடியும். Dhp.53

**

நீங்கள் மற்றவர்களிடம் பேசும்பொழுது, சரியான நேரத்திலோ அல்லது தவறான நேரத்திலோ, காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ, அமைதியாகவோ அல்லது கடுமையாகவோ, ஒரு குறிக்கோள் பற்றியோ அல்லது குறிக்கோள் இன்றியோ, மனம் நிறைந்த அன்புடனோ அல்லது மனம் நிறைந்த வெறுப்புடனோ பேசலாம். அப்பொழுது கீழ்க்கண்டவாறு உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளவேண்டும்:

'நம் மனம் தவறான வழியில் செல்லாது, தீயவைகளைப் பேசாது, இரக்கத்துடனும் கருணையுடனும் மனம் நிறைந்த அன்புடனும் வெறுப்பின்றியும் வாழலாம். நாம் நிறைந்த அன்புடன் ஒருவரிடம் தொடங்கி, விசாலமான, நிறைந்த, அளவிட முடியாத, பகைமை இல்லாத கேடற்ற இந்த அன்பை இவ்வுலகெலாம் பரப்பி அனைவரிடமும் அன்பு காட்டி வாழலாம்.' இவ்வாறு உன்னை நீ பயிற்று வித்துக் கொள்ள வேண்டும். M.I,126

**

சில சமயம் கட்டாயம் நடக்கும் என்று நினைப்பது நடப்பதில்லை. நிச்சயமாக நடக்காது என்று நினைப்பது நடந்துவிடும். ஆண், பெண்களின் மகிழ்ச்சி அவர்களின் எதிர்பார்ப்புகளைச் சார்ந்திருப்பதில்லை. Ja.VI,43

**

மெய்யறிவுடையவனை மூன்று விதத்தில் தெரிந்து கொள்ளலாம். எந்த மூன்று? அவன் தன் குற்றங்களை உள்ளபடியே தெரிந்து கொள்கிறான். தெரிந்தகொண்ட பின் அதனைத் திருத்திக் கொள்ள முற்படுகிறான். மற்றவர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டால் அவர்களை மன்னித்து விடுகிறான். A.I,103

**

தீமையைத் தவிர், நன்மை செய்யப் பழகு, மனத்தைத் தூய்மையாக்கு. இவையே புத்தர்களின் போதனையாம். Dhp.183

**

நீரில் இருந்து அறிந்து கொள்வீர்:
மலையில் பிளவுகளிலும் வெடிப்புகளிலும் மோதுண்டு
மிகுந்த இரைச்சலுடன் புரண்டோடும் சிற்றோடைகள் உண்டு.
ஆனால் மாபெரும் நதிகளோ அமைதியாகவே தவழ்ந்து செல்லும்.

வெறுமைக் கலமே ஒலி செய்யும்,
நிறை குடம் தளும்பாது.
அறவிலி அரை நிறை குடம்
அறிஞனோ ஆழமான அமைதியான குளம். Sn.720-1
**

கேவலமான குற்றவாளி இரட்டைப் பிடியுள்ள இரம்பத்தால் உங்கள் கை கால்களைத் துண்டிக்கும் போது
உங்கள் உள்ளத்தைப் பகைமையால் நிரப்பிக் கொண்டால்
உங்களை என் போதனைகளைப் பின் பற்றுபவராகக் கூறமுடியாது.
M.I,126
**

அன்பின் காரணமாக உருவாகும் மனச் சுதந்திரத்தினைப் பேணி வளர்த்து, எப்போதும் பயின்று, தனது வாகனமாகவும் அத்திவாரமாகவும் அமைத்து, உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி ஒன்று சேர்த்தால் ஒருவர் இந்தப் பதினொரு விதங்களில் ஆசீர்வதிக்கப்படுவார். எப்போதுமே மகிழ்வோடு தூங்குவார், மகிழ்வோடு விழிப்பார், தீய கனவுகள் காணார், மனிதர்களின்

அன்புக்குரியவராவார், மற்ற உயிர்களின் அன்புக்குரியவராவார், கடவுளர் ஆதரிப்பர், தீயிலிருந்தும், விஷங்களிலிருந்தும், ஆயுதங்களிடமிருந்தும் காப்பாற்றப்படுவார், மன ஒருமைப்பாடு எளிதாக அடைவார், பொலிவுடன் காணப்படுவார், அமைதியாக மரணம் அடைவார், மரணத்தின் பின் சொர்க்கத்தில் மறுபிறப்பெடுப்பார். (A.V,342).

**

நல்லவர்கள் சண்டையிட்டுக் கொண்டால் அவர்கள் விரைவில் சமாதானத்தை நாடி நீண்ட நாள் நிலைக்கக் கூடிய ஒரு பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எதற்கும் உதவாத உடைந்த விரிசலுடைய பானைகளைப் போல முட்டாள்கள் சமாதானத்தை நாடுவதில்லை. இதைப் புரிந்த கொண்ட ஒருவன், இந்தப் போதனையைச் சிந்தித்துப் பார்ப்பவன் எது கடினமானதோ அதைச் செய்ய முற்படுகிறான். அவன் போற்றத்தக்கவன். யார் ஒருவன் மற்றவரின் தூற்றுதல்களைப் பொறுத்துக் கொள்கிறானோ அவனே சமரசம் செய்வதற்குத் தகுதியானவன். Ja.III,38

**

சுவையுள்ளதோ சுவையற்றதோ அதிகமோ கொஞ்சமோ அன்போடு செய்த எதையும் உண்ண முடியும். உண்மையில் அன்பே உயர்ந்த சுவை. Ja.III,145

**

பொறாமைகொண்ட, சுயநலமுள்ள அல்லது நேர்மையற்ற ஒருவன், சிறந்த பேச்சாளியாகவும், கட்டுடலோடும் இருந்தாலும் கவர்ச்சியற்றவனாகவே தோன்றுவான். ஆனால் இந்தத் தீய எண்ணங்களை அகற்றியவன், வெறுப்பில்லாதவன், அவனே (அல்லது அவளே) உண்மையிலேயே அழகானவன்(ள்). Dhp.262-3

**

அடக்கமில்லாத, ஒழுக்கமில்லாத அல்லது நிறைவடையாத ஒருவன் மற்றொருவனை அடக்கத்தோடு, ஒழுக்கத்தோடு, நிறைவோடு வாழ வைக்க முடியாது. ஆனால் அடக்கமுள்ள, ஒழுக்கமுள்ள, நிறைவுள்ள ஒருவன் மற்றவரையும் தன்னைப் போலவே உருவாக்க முடியும். M.I,45

**

மனநிறைவே மாபெரும் செல்வமாம். Dhp.204

**

யாராவது என்னையோ தம்மத்தையோ அல்லது சங்கத்தையோ திறனாய்வு செய்தாலோ அல்லது குறை கூறினாலோ நீ கோபப்படவோ ஆத்திரப்படவோ கூடாது. ஏனென்றால் அத்தகைய செயல் உன்னைத் தெளிவற்றவனாக்கி அவர்கள் கூறியது நன்மையா தீமையா என்று விளங்காமற் செய்து விடும். அவர்களுக்கு எளிமையாக அவர்கள் கூற்றில் உள்ள தவற்றைப் புரியவை. 'அது தவறு, அது சரியானதன்று, அது எங்கள் வழி அன்று. நாங்கள் அவற்றைச் செய்வதில்லை' என்று கூறு.

அதேபோல் யாராவது என்னையோ தம்மத்தையோ அல்லது சங்கத்தையோ புகழ்ந்து பேசினால் அதற்காக நீ பெருமைப் படவோ கர்வம் கொள்ளவோ கூடாது. ஏனென்றால் அத்தகைய செயல் உன்னைத் தெளிவற்ற வனாக்கி அவர்கள் கூறியது நன்மையா தீமையா என்று விளங்காமற்செய்து விடும். அப்படி புகழ்பவர்களுக்கு அவர்கள் கூற்றில் உண்மை இருப்பதைக் கூறு. 'இது சரியானது, அது மிகச் சரியானது, இதுதான் எங்கள் வழி, அதைத்தான் நாங்கள் செய்கிறோம்' என்று கூறு. D.I,3

**

சொற்களுக்கு ஐந்து குறிகளிருந்தால் அவை தீயசொற்கள் அல்ல, நல்ல சொற்கள். அறிஞர்களால் புகழப்பட்டு போற்றப் படுபவை. எந்த ஐந்து? அவை சரியான நேரத்தில் சொல்லப்பட்டவை, வாய்மை உடைத்தவை, அமைதியாகப் பேசப்பட்டவை, சொல்ல வேண்டியதை மட்டும் சொல்பவை, அன்போடு பேசப்படுபவை. A.III,243

**

ஆழமான ஏரி தெளிவாகவும், அசைவற்றும் இருப்பதைப்போல, அறிவுடையோர் போதனைகளைக் கேட்கும் போது முற்றாக அமைதியடைகிறார்கள். Dhp.82

**

அதிகார பூர்வமான அறிவிப்பையும், பழக்க வழக்கங்களையும், வதந்திகளையும், வேதாகம நூட்களையும், உணர்ந்த முடிவினையும், நிறுவப்பட்ட கோட்பாட்டினையும், திறமையான வாதத்தினையும், விசேட சித்தாந்தத்தினையும் நம்பி இருக்காதீர்கள். மற்றவர் சிறந்த அறிவாளி என்பதனாலோ, ஆசிரியரின் மேல் உள்ள நன்மதிப்பின் காரணமாகவோ அவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

உங்களுக்கு எது தவறானது, எது முட்டாள்தனமானது, எது தகுதியற்றது, எது சேதம் விளைவிப்பது, எது அதிருப்தி தருவது என்று தெரிந்த பிறகு அதை விட்டு விடுங்கள். உங்களுக்கு எது சரியானது மேன்மையானது, அறிஞர்களால் பாராட்டப்பட்டது, அதை ஏற்றுப் பயிற்சி செய்தால் பயன்தந்து மகிழ்ச்சியளிப்பது என்று தெரிந்த பிறகு அதை வளர விடுங்கள். A.I,190

**

சில துறவிகள் அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்த புத்தர் அவர்களிடம் சொன்னார்: 'மிருகங்கள் ஒன்றுக்கொன்று மரியாதையுடனும், விட்டுக்கொடுத்தும், நற்பண்புடனும் இருக்கும் போது நீங்களும் அவ்வாறே இருக்க வேண்டும்.' Vin.II,162

**

செல்வம் போன்றவற்றை இழந்துவிட்டால் அது ஒன்றும் பெரிய இழப்பல்ல. ஆனால் அறிவை இழந்து விட்டால் அது பேரிழப்பாகும். செல்வம் போன்ற வற்றை அடைந்துவிட்டால் அது ஒன்றும் அவ்வளவு முக்கியத்துவமுடையதல்ல. அறிவைப் பெறுவதே மிக முக்கியத்துவம் வாய்ந்த செயலாகும். A.I,15

**

பொறுப்பற்ற ஒருவன் புனித நூட்களைப் படித்தும், அதன் படி நடக்கவில்லையென்றால், அது மாடு மேய்ப்பவன் மற்றவனின் மாடுகளைக் கணக்கிடுவதைப்போல, ஆன்மீக வாழ்க்கையின் எந்தப் பயனையும் அடைய முடியாது. Dhp.19

**

தாய் தன் குழந்தையை நன்கு பாதுகாப்பாள்
குழந்தைக்காகத் தன் உயிரையும் பணயம் வைப்பாள்
தாயன்பைப் போல எல்லையிலா அன்பை
உலகில் தோன்றிய உயிரினத்தின் மீது காட்டுங்கள். Sn.149

**

மற்றவர்க்கு அறிவுரை கூற விரும்பும் ஒருவர் முதலில் தன்னைத்தானே இவ்வாறு கேட்டுக்கொள்ள வேண்டும்; 'உடலாலும், சொல்லாலும் முழுத் தூய்மையை மட்டுமே நான் கடைப்பிடிக்கிறேனா இல்லையா? இந்தப் பண்புகளை நான் கொண்டிருக்கிறேனா இல்லையா?' அப்படியில்லையென்றால், சந்தேகமின்றி மக்கள் 'சொல்லாலும், உடலாலும் சரியான நன்னடத்தையை முதலில் நீங்கள் கடைபிடியுங்கள்' என்று கூறுவார்கள். இதைச் சொல்வதற்கு மக்களிருக்கின்றனர்.

மறுபடியும் மற்றவர்க்கு அறிவுரை கூறவிரும்பும் ஒருவர் முதலில் தன்னைத் தானே சோதித்துக் கொள்ளவேண்டும். 'தீமையைத் தவிர்த்து மற்றவரிடத்தில் அன்பை வளர்த்துக் கொண்டுள்ளேனா இல்லையா? இக்குணம் என்னுள் நிலைநாட்டப்பட்டதா இல்லையா?' அப்படி நிலை நாட்டப்படவில்லை யென்றால், மக்கள் சிலர் 'உன்னிடம் முதலில் அன்பை வளர்த்துக்கொள்!' என்பார்கள். A.V,79

**

பெரிய குடை மழைக்காலத்தில் நம்மை மழைத் துளியிலிருந்து பாதுகாப்பதைப் போலத் தர்மத்தைப் பயிற்சி செய்பவர்களைத் தர்மம் பாதுகாக்கும். Ja.IV,55

**

காலையிலும், மதியத்திலும், இரவிலும் தர்மத்தைப் பின் தொடர்பவர்கள் காலையிலும், மதியத்திலும், இரவிலும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். A.I,294

**

யாராவது ஒருவன் உங்களைத் திட்டினாலோ தாக்கினாலோ உங்கள் மீது கல்லெறிந்தாலோ கட்டையாலோ வாளாலோ தாக்கினாலோ உங்கள் உலக ஆசா பாசங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டுக்

கீழ்க்காணுமாறு உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும். என் மனம் அலைபாயாயது, தீய வார்த்தைகளைப் பேசமாட்டேன். வெறுப்பைப் புறம் தள்ளி மற்றவரின் நலனுக்காக அன்புடனும் கருணையுடனும் வாழ்வேன் என்று பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்.   M.I,126

**

பாசனக்காரர்கள் நீரைச் செலுத்திப் பாய்ச்சுகிறார்கள். அம்பு விற்போர், அம்புகளைக் கோணலின்றிச் செவ்விதாகச் செய்கிறார்கள். தச்சர் மரங்களை உருவமைக்கிறார்கள். அறிஞர் தம்மைத் தாமே அடக்கி ஆள்கிறார்.   Dhp.80

**

உடன் வாழும் ஆன்மீக நண்பர்களுடன் எப்படி இணக்கத்துடன் வாழ்கிறார் என்று புத்தர் அநுருத்தரைக் கேட்டார். அவர் சொன்னார்: 'இவ்வகையான ஆன்மீக நண்பர்களுடன் வாழ்வது ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். பொதுவிடத்திலும் தனிமையிலும் அவர்களுடன் மனதாலும், பேச்சாலும் நடத்தையாலும் அன்போடு நடந்து கொள்கிறேன். என் விருப்பங்களை ஒதுக்கி வைத்து அவர்கள் விருப்பங்களை மனதில் கொண்டு அதற்கேற்றவாறு நடந்து கொள்கிறேன். இதனால் நாங்கள் பல உடல்களைக் கொண்டிருந்தாலும் ஓர் உள்ளத்தைக் கொண்டுள்ளோம்.'
M.III,156

**

முரண்பாட்டில் ஆபத்தைக் கண்டு, இணக்கத்தில் அமைதியைக் கண்டு, ஒற்றுமையோடும் அன்புள்ளத்தோடும் வாழவேண்டும். இதுவே புத்தர்களின் போதனையாம்.  Cp.3,15,13

**

நால்வகையான மக்கள் உலகில் உளர். எந்த நான்கு? தன்னுடைய நலத்திலும் மற்றவர் நலத்திலும் அக்கறை இல்லாதவர்; மற்றவர் நலத்தில் அக்கறை கொண்டு தன் நலத்தில் அக்கறை இல்லாதவர்; தன் நலத்தில் அக்கறை கொண்டு மற்றவர் நலத்தில் அக்கறை இல்லாதவர்; தன் நலத்திலும் மற்றவர் நலத்திலும் அக்றை உள்ளவர். இந்த நான்கு வகை மக்களுள் தன் நலத்திலும் மற்றவர் நலத்திலும் அக்கறை

உள்ளவரே முதல்வர், மேலோங்கியவர், உச்சத்தில் இருப்பவர், தலை சிறந்தவர். A.II,94

**

புத்த தம்ம சங்கத்தில் நீ சரணடைந்தால் உன்னிடம் அச்சமோ நடுக்கமோ என்றுமே எழாது. S.I,220

**

திறமையான இல்லறத்தவராக இருப்பது நன்று. உணவைப் பகிர்ந்து கொள்வது நன்று. சேர்த்த செல்வத்தைப் பற்றித் தன்னடக்கத்துடன் இருப்பது நன்று. அந்தச் செல்வம் குறைந்தாலும் மனம் தளராமல் இருப்பது நன்று. Ja.III,466

**

வெறுப்பை அன்பினால் வெல்க. தீமையை நன்மையால் வெல்க. கருமித்தனத்தைத் தானத்தினால் வெல்க. பொய்யை மெய்யினால் வெல்க. Dhp.223

**

அன்பையும் மரியாதையையும், உதவி செய்யும் மனப்பான்மையையும் ஒத்துப்போகும் தன்மையும், இணக்கத்தையும் ஒற்றுமையையும் ஆறு விதத்தில் பேணலாம். ஆன்மீக வாழ்வில் உடனிருப்போருடன் பொது இடத்திலும் தனிமையிலும் அன்போடு நடந்து கொள்வது; அன்போடு பேசுவது; அன்போடு நினைப்பது; எந்தத் தயக்கமும் இல்லாமல், நாம் நியாயமாகப் பெற்ற எதையும், அது நாம் இரந்து பெற்ற உணவாக இருந்தாலும் அவர்களோடு பகிர்ந்து கொள்வது; அவர்களுக்கும் நமக்கும் உள்ள முழுமையான, அடக்கப்படாத, சுதந்திரம் தரும், சான்றோர்களால் போற்றப்படும், மன ஒருமைப்பாட்டிற்கு ஏதுவான பண்புகள்; ஆன்மீக வாழ்வில் உடனிருப்போருடன் பொது இடத்திலும் தனிமையிலும் கொண்டிருக்கும் மேன்மையானவை பற்றிய, சுதந்திரத்திற்கு எடுத்துச் செல்பவை பற்றிய, துக்கத்தை அறவே ஒழிப்பவை பற்றிய அறிவு; இவை ஆறும் இருக்கும் போது அன்பும் மரியாதையும், உதவி செய்யும் மனப்பான்மையும் ஒத்துப்போகும் தன்மையும், இணக்கமும்,

ஒற்றுமையுமிருக்கும். M.I,322

**

தம்மத்தை விரும்புவோர், பேச்சிலும், எண்ணத்திலும், செய்கையிலும் தூய்மையாக இருப்பவர், எப்போதும் அமைதியோடும், நற்குணத்தோடும், கவனத்தோடும், ஒழுக்கத்தோடும் இருப்பவர், உலகில் நிறைவாக வாழ்கின்றனர். Ja.III,442

**

ஒருவனின் சிறந்த நண்பன் யார்? எவருடைய எண்ணங்கள், சொற்கள், செயல்கள் நன்மை நிறைந்தவைகளாகத் தூய்மையானவையாக இருக்கின்றனவோ அவையே ஒருவனின் சிறந்த நண்பர்கள். 'நாங்கள் எங்களைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்வதில்லை!' என்று அவர்கள் கூறினால்கூட அவையே (அக்குணங்களே) அவர்களுடைய உண்மையான நண்பர்கள். ஏன்? ஏனென்றால் ஒருவன் தனது நண்பன் தனக்குச் செய்வதைத் தனக்குத்தானே செய்து கொள்கிறான். S.I,71

**

நற்செயலைச் சாதாரணமாக நினைத்து
'என்னால் அப்படி இருக்க முடியாது '
என்று சொல்லாதீர்கள்.
சீராகத் தொடர்ந்து விழும் சிறு துளிகள்
குவளையில் தண்ணீரை நிரப்புவது போல
அறிஞர் நல்வாழ்வைச் சிறிது சிறிதாக அடைகிறார். Dhp.122
**

ஒரு முறை ஒரு துறவி சீதபேதியால் பாதிக்கப்பட்டு அவருடைய கழிவுகள் கிடந்த இடத்திலேயே விழுந்து கிடந்தார். அப்போழுது துறவிகளின் விடுதிகளுக்கு வருகை தந்த அண்ணலும் ஆனந்தரும் அந்தத் துறவி கிடந்த இடத்திற்கு வந்தனர். அண்ணல் துறவியைப் பார்த்து,

'துறவியே, உங்களுக்கு என்ன நேர்ந்தது?' என்று வினவினார்.

'நான் சீதபேதியால் துன்புறுகிறேன்!'

'உங்களைக் கவனிக்க யாருமே இல்லையா?'

'இல்லை அண்ணலே!'

'மற்ற துறவிகள் ஏன் உங்களைக் கவனிக்கவில்லை?'

'ஏனென்றால் என்னால் அவர்களுக்கு ஒரு பயனும் இல்லை அண்ணலே!'

பின்னர் அண்ணல் ஆனந்தரை அழைத்து,

'நீர் கொண்டு வாருங்கள். நாம் இந்தத் துறவியைக் குளிப்பாட்டுவோம்' என்றார். ஆனந்தர் நீர் கொண்டு வந்தார். அண்ணல் நீரைத் துறவியின் மீது ஊற்ற ஆனந்தர் தேய்த்துக் குளிப்பாட்டினார். அண்ணலும் ஆனந்தரும் அத்துறவியைத் தூக்கிக் கொண்டுபோய் ஒரு படுக்கையில் கிடத்தினர். பிறகு அண்ணல் மற்றத் துறவிகளையெல்லாம் அழைத்து, 'துறவிகளே நீங்கள் ஏன் அந்த நோய்வாய்ப்பட்டிருக்கும் துறவியைக் கவனிக்கவில்லை?' என்று கேட்டார்.

'ஏனென்றால் எங்களுக்கு அவரால் எந்தப் பயனும் இல்லை அண்ணலே!' என்றனர்.

'உங்களைக் கவனிப்பதற்கு உங்களுக்கு அன்னையோ தந்தையோ இல்லை. நீங்கள் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளவில்லையென்றால் பின் யார் தான் கவனிப்பார்? எனக்குப் பணிவிடை செய்ய விரும்புவோர் நோயாளிகளுக்கும் பணிவிடைசெய்ய வேண்டும்.' Vin.IV,301

**

தன் உடலுறுப்பைக் காப்பாற்றச் செல்வத்தை விட்டுக் கொடுப்பவன் அல்லது உயிரைக் காப்பாற்ற உடலுறுப்பைத் தியாகம் செய்பவன் தர்மத்திற்காகத் (வாய்மைக்காக) தன் செல்வத்தையும், உடலுறுப்பையும், உயிரையும், எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். Ja.V,500

**

நம்மை விடப் பலசாலி ஒருவன் நம்மிடம் மரியாதை இன்றிப் பேசும்

போது அவனுக்குப் பயந்து அதனைப் பொறுத்துக் கொள்கிறோம். நமக்குச் சமமானவரின் மரியாதையற்ற பேச்சை வாக்கு வாதத்தைத் தவிர்ப்பதற்காகப் பொறுத்துக் கொள்கிறோம்.ஆனால் நமக்குக் கீழ்ப்பட்ட ஒருவரின் கடுமையான பேச்சைப் பொறுத்துக் கொள்வதே உண்மையான பொறுமையாகும். இது சான்றோர்கள் வாக்கு. ஆனால் வெளி தோற்றத்திலிருந்து யார் நம்மை விடப் பலசாலி, சமமானவர் அல்லது கீழானவர் என்று எப்படித் தெரிந்து கொள்வது? உண்மையில் சில சமயம் கவர்ச்சியற்றது நன்மைக்குப் பின்னால் மறைந்திருக்கும். எனவே எவருடன் பேசும் போதும் பொறுமையாகப் பேசுங்கள். Ja.V,141-2

**

தானங்களில் சிறந்தது தம்ம தானம். Dhp.354

**

நமது வெற்றிகளைக் கண்டு நாம் திருப்தியும் மகிழ்வும் கொள்வது போலவே மற்றவரின் வெற்றிகளைக் கண்டும் நாம் திருப்தியும் மகிழ்வும் கொள்ளவேண்டும். S.II,198

**

மூடிய கையுடன் போதிக்கும் ஆசிரியர் ஏதோ இரகசிய போதனைகளை மறைத்து வைத்திருப்பது போலன்றி மறைத்த அல்லது திறந்த என்ற கருத்தே இல்லாமல் நான் தர்மத்தைப் போதித்திருக்கின்றேன். D.II,100

**

நான் சென்ற பிறகு தர்மமே உங்கள் ஆசிரியராகட்டும். D.II,154

**

அவ்வப்போது உங்கள் குறைகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பது நல்லது. அவ்வப்போது மற்றவர் குறைகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதும் நல்லது. அவ்வப்போது உங்கள் பண்புகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பது நல்லது. அவ்வப்போது மற்றவர் பண்புகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதும் நல்லது. A.IV,160

**

அறிஞர் நன்றியுள்ளவராக இருக்கிறார். அவர் பக்தியுள்ள மன மகிழ்ச்சியூட்டுகிற நண்பர். துன்பத்தில் உள்ளவர்களை மரியாதையுடன் கவனிக்கின்றார். எனவே அவரை 'நல்லவர்' என்று சரியாகக் கூறுகிறோம். Ja.V,146

**

புண்ணியம் செய்தவன் இம்மையிலும் மகிழ்ச்சியடைகிறான்; மறுமையிலும் மகிழ்ச்சி யடைகிறான்; அவன் இரண்டிடங்களிலும் மகிழ்ச்சியடைகிறான். அவன் தன்னுடைய நல்ல செய்கைகளைக் கண்டு மகிழ்ந்து மேன்மேலும் இன்பமடைகிறான். Dhp.16

**

தவறு செய்வதை விட்டு விடுங்கள். அப்படி விட்டு விட முடியும். முடியாதென்றால் நான் உங்களை விட்டு விடக் கூற மாட்டேன். முடியும் என்பதால் தான் நான் கூறுகிறேன், 'தவறு செய்வதை விட்டு விடுங்கள்' தவறு செய்வதை விட்டு விட்டால் அது உங்களை நட்டத்திற்கும் சோகத்திற்கும் எடுத்துச் செல்லுமானால் உங்களிடம் அவ்வாறு கூறமாட்டேன். அது உங்களுக்கு நலனும் மகிழ்ச்சியும் உண்டாக்கும். எனவே கூறுகிறேன், 'தவறு செய்வதை விட்டு விடுங்கள்.'

நல்லதைப் பேணுங்கள். அப்படிச் செய்ய முடியும். முடியாதென்றால் நான் உங்களை அப்படிச் செய்யுமாறு கூற மாட்டேன். முடியும் என்பதால் தான் நான் கூறுகிறேன், 'நல்லதைப் பேணுங்கள்.' நல்லதைப் பேணுவதால் அது உங்களை நட்டத்திற்கும் சோகத்திற்கும் எடுத்துச் செல்லுமானால் உங்களிடம் அவ்வாறு கூறமாட்டேன். ஆனால் அது உங்கள் நலனையும் மகிழ்ச்சியையும் அதிகரிக்கும். எனவே கூறுகிறேன், 'நல்லதைப் பேணுங்கள்.' A.I,58

**

எல்லோரும் தண்டனைக்கு அஞ்சுகிறார்கள். எல்லோருக்கும் வாழ்க்கை பிரியமானது. மற்ற உயிர்களையும் உன் உயிரோடு ஒப்பிட்டு நோக்கி ஒன்றையும் கொல்லாதே; கொல்வதற்கும் உடன்படாதே. Dhp.130

**

ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தோ, படுத்தோ இருப்பவர், அந்த மரத்தின் ஒரு கிளையைக் கூட ஒடிக்கக் கூடாது. அவ்வாறு செய்பவர் ஒரு நண்பனுக்குத் துரோகம் செய்பவராவார். ஒரு தீயவராகிறார். Vv.9

**

இமயமலையைப் போன்று, நல்லவர்கள் தொலைவிலிருந்தே பிரகாசமாகத் தோன்றுகின்றனர். இரவில் எய்யப்பட்ட அம்பைப் போலத் தீயவர்கள் எவருக்கும் தென்படுவதில்லை. Dhp.304

**

"இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று அண்ணல் கேட்டார்.

"கண்ணாடியின் பயன் என்ன?"

"பிரதிபலிப்பதற்காக, ஐயா" பதிலளித்தார் இராகுலர்.

"அதுபோல உடலால், சொல்லால், மனத்தால் செய்ய வேண்டிய ஒரு செயலைக் கவனமாகச் சிந்தித்த பின்பே செய்ய வேண்டும்." M.I,415

**

வில்லைப் போலவும் மூங்கிலைப் போலவும் வளைந்து கொடுத்தால் எவருடனும் வேற்றுமை உருவாகாது. Ja.VI,295

**

கங்கையாறு ஓடுகிறது, தாழ்வான பகுதியை நோக்கி ஓடுகிறது. கிழக்கு நோக்கி ஓடுகிறது. அதைப்போலவே அட்டாங்கமார்க்கமென்னும் அந்த உயர்ந்த எட்டு வழிகளை எவரெவர் பயன்படுத்திப் பின்பற்றி வளர்த்துக் கொள்கின்றனரோ அவர்கள் நிருவாண நிலை என்னும் திசை நோக்கியே செல்கின்றனர். S.V, 40

**

உண்மையில், நல்லவர்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றனர். Vin.IV,55

**

'அவன் என்னை இகழ்ந்து பேசினான், என்னைத் தாக்கினான், என்னைத்

துன்புறுத்தினான், என் உடைமையைக் கவர்ந்து கொண்டான்' என்பது போன்ற எண்ணங்களை ஒருவன் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தால் அவனுடைய வெறுப்பு ஒருபோதும் நீங்காது. அப்படிப்பட்ட எண்ணங்களை விட்டு விடுபவனின் வெறுப்பு நீங்கிவிடுகிறது.

ஏனெனில், வெறுப்பை வெறுப்பினால் நீக்க முடியாது. வெறுப்பை அன்பினாலேயே நீக்க முடியும். இதுதான் தொன்றுதொட்டு நிலைத்த தர்மமாகும். Dhp.3-5

**

பண்புள்ளவர்களுக்கு எல்லா நாளும் சிறந்த நாள் தான். அவர்களுக்கு எல்லா நாளும் புனித நாளேயாகும். M.I,39

**

ஆடம்பரமான ஆபரணங்கள் அணிந்திருந்தாலும், ஒருவர் அமைதியுடனும், தன்னடக்கத்துடனும், புனித வாழ்வில் ஈடுபட்டவராகவும், யாருக்கும் தீங்கு செய்யாதவராகவும் இருந்தால், அவரே உண்மையான துறவி, உண்மையான மதகுரு, உண்மையான பிக்கு. Dhp.142

**

மற்றவரை விசாரணை செய்யும் நீதிபதி ஆகாதீர்கள். மற்றவரைக் கண்டிக்காதீர்கள். மற்றவர் குறைகளைக் கண்டிப்பவன் தனக்குத் தானே குழி பறித்துக் கொள்கிறான். A.III,350

**

நரிகள் ஊளையிடுவதையும் பறவைகள் பாடுவதையும் எளிதாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மனிதன் சொல்வதைச் சரியாகக் கணிப்பது மிகக் கடினமான செயலாக உள்ளது. 'அவன் என் உறவினன், என் நண்பன், என் கூட்டாளி' என்று முன்னர் ஒருவர் உங்களை மகிழ்வித்திருந்ததால் அவரைப் பற்றி நீங்கள் இப்படிப் பெருமையாக நினைக்கலாம். ஆனால் இப்போது அவர் உங்கள் எதிரியாகக் கூட இருக்கலாம். நாம் ஒருவரிடம் அன்பு செலுத்தினால் அவர்கள் எப்போதும் நம்மை

நெருங்கியிருக்கின்றனர். நம்மைப் பிடிக்காதவர்கள் எப்போதும் தொலைவிலேயே உள்ளார்கள். கடல் கடந்து இருந்தாலும் உண்மையான நண்பன் உண்மையான நண்பனாகவே இருக்கின்றான். கடல் கடந்து இருந்தாலும் நேர்மையற்றவன் நேர்மையற்றவனாகவே இருக்கின்றான்.
Ja.IV,218

* * * * * * * *

Abbreviations

A, Anguttara Nikaya; Cp, Cariyapitaka; D, Digha Nikaya; Dhp, Dhammapada; Ja, Jataka; M, Majjhima Nikaya; S, Samyutta Nikaya; Sn, Sutta Nipata; Ud, Udana; Vin, Vinaya; Vv, Vimanavatthu.

* * * * * * * *